Registered as a News Paper in Sri Lanka
பக்கம் 20
ரூபா 13/50
දිනමුරසු වාරමලර් ஜன.13-19, 2002

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 442

## போர்-பேச்சுவார்த்தை இரண்டுக்குமான இரகசிய நகர்வுகள்





# செல்வமில்லாத நிலையிலும் ஆத்மீக சுகம்

# ஆன்மீகம்



இவ்வுலகம் மாற்றத்துக்குரியது. மேலும் இங்கு செய்யப்படும் ஒவ்வொரு கர்மத்திற்கும் பலன் நிச்சயம் உண்டு. ஆகவே மனிதன் இந்த சிருஷ்டி நாடகத்தில் தனக்குகிடைத்த நாடகப் பாத்திரத்தை சாட்சி நிலையில் இருந்து கொண்டு, எதிர் கால நன்மைக்காக நல்ல கர்மத்தை செய்ய வேண்டும். அவனுக்கு ஒரு மோசமான சூழ்நிலை வந்து விடக்கூடாது. மேலும் நாட்கள் அனைத்தும் ஒன்றாக இருந்துவிட முடியாது. நிச்சயம் ஒரு நாள் அனைத்தும் மாறித்தான் ஆக வேண்டும் என்பதை நினைவில் இருத்துங்கள். இதனைத் தவிர பணத்திற்காக வீண் சண்டை, கர்மத்தினை செய்தே தீர வேண்டிய கடமைகள், பகட்டு, சம்பந்தத்தினால் வரும் தொடர்பு போன்றவைகள் அதிகரித்துக் கொண்டிருக்கின்றன. மேலும் மனிதனின் புத்தி எப்பொழுதும் பணத்தை சம்பாதிப்பதிலும், சேமிப்பதிலும், உண்பதிலும் ஈடு பட்டு இருக்கிறது. ஆகவே அவனுக்கு இறைவனைப்பற்றி சிந்திப்பதற்கும், இறைவனிடத்தில் மனதை ஈடு படுத்தி அந்த அழியாத ஆன்மீகசெல்வத்தைச் சேமிப்பதற்கும் அவனுக்கு குறைவான நேரமே கிடைக்கின்றது. அதே சமயம் அவன் தீயவையில் நாட்டம் கொண்டு, விகார விசயங்களில் ஈடுபட்டு இறைவனை மறந்து விடுகிறான் என்பதனையும் நாம் சற்று சிந்தித்து பார்க்க வேண்டும். நான் இறைவனுக்கு குழந்தையானதால், கலியுக செல்வந்தர்களை விட கோடிமடங்கு பெரியவன். மனிதன் இவ்விதமாக சிந்தனை செய்வதால் திருப்தியையும் மகிழ்ச்சியையும் அடைய முடியும். ஓம் சாந்தி

கல்முனை.பி.கு.விக்கி.

## காரணமின்றி துன்புறுத்தாதீர்கள்

நாம் யாரையும் காரணமின்றி ஒருபோதும் துன்புறுத்தக்கூடாது. அப்படி காரணத்தோடு ஒருவரை துன்புறுத்த கருதினால் அல்லாஹ்வின் கட்டளைக்கு இணங்கவே அது இருக்க வேண்டும். தண்டனை கொடுக்காமல் விடுவது நமது பெருந்தன்மை. இருந்தும் ஒருவர் செய்த துன்புறுத்தல்களுக்கு நாம் தண்டனை கொடுக்க நினைத்தால் நமக்கு அவர் கொடுத்த தண்டனையின் அளவுக்கே நாமும் கொடுக்க வேண்டும். அதைவிடுத்து அளவுக்கு அதிகமாக தண்டிப்போமானால் அது நம்மீது குற்றமாகிவிடும். ஆனால் இன்று எவ்விதக் காரணங்களுமின்றியே துன்புறுத்தல்களும், சித்திரவதைகளும் படுமோசமான அளவுக்கு இடம்பெறுகிறது. இப்படி எவ்விதக் காரணமுமின்றி இதனைச் செய்பவர்கள் அல்குர்ஆனின் போதனையை சற்று சிந்தையில் பதிப்பதோடு அது செயல் வடிவம் பெறவும் வேண்டும்.

விசுவாசிகளே! நீங்கள் யாரையும் காரணமின்றி துன்புறுத்தாதீர்கள். அப்படி காரணத்தோடு தண்டிக்க கருதினால் எந்த அளவுக்கு நீங்கள் தண்டிக்கப்பட்டீர்களோ அதுபோன்ற அளவுக்கே தண்டியுங்கள். (தண்டிக்காது) பொறுத்துக்கொள்வீர்களானால் அது பொறுமையாளர்களுக்கு மிகச் சிறந்த தாகும்.

(அல்குர் ஆன் 128:16)

வை.எம்.தாஹிர்கரீம்-கல்முனை-06.

## ஜெயம் எமது பிறப்புரிமை

"ஜெயமோ கர்த்தரால் வரும்"

நீதிமொழி:21-31

உங்கள் வாழ்க்கைச் சாகரத்தில் வற்றாத தோல்விகளா? கலங்காதிருங்கள். நீங்கள் எதிர்பார்த்திருக்கிற ஜெயம் கர்த்தரால் வரும். எதற்கும் வளைந்து கொடுக்கும் நாணலைப் போல ஆளும் வர்க்கத்திற்கு அடிமைப்பட்டிருந்த இஸ்ரவேலுக்கு தேவன் கொடுத்த ஜெயம் எப்படிப்பட்டது?

தோல்விகளால் துவண்டிருந்த அவர்கள்,

* எகிப்தை விட்டு வெற்றியோடு புறப்பட்டனர்
* எகிப்திய சேனைகளின் சிதறடிப்பை மகிழ்வோடு கண்டனர்.
* எதிர்த்து நின்ற செங்கடலை கால் நடையாய் கடந்தனர்
* எரிக்கோ மதிலை துதியோடு தகர்த்தனர்
* எதிர்பார்த்த தேசத்தினை வசப்படுத்தி மகிழ்ந்தனர்.


இவ்வளவு வெற்றிகளை அள்ளிக் கொடுத்த அற்புததேவன் இன்று உங்களோடில்லையா? அவரது பிள்ளைகளான எமக்கு ஜெயம் பிறப்புரிமையல்லவா? எனவே உங்கள் ஜெய உரிமையை சுதந்தரித்து உவகையோடு வாழுங்கள்.

மாட்சிமையும், வல்லமையும், ஜெயமும், மகத்துவமும் கர்த்தருடையது.

1 கொரிந்தியர்: 15:-57

விஜயா பிரான்சிஸ்-யாழ்ப்பாணம்.

## கவிதைப் போட்டி இல.442



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 19.01.2002

கவிதைப் போட்டி இல.442
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

## கவிதைப் போட்டி இல.439

பரிசுக்குரிய கவிதை

### சூனியம்

இரவில் திருட வந்தோரே
இரவையே திருடிக்கொண்டீரே
இத்தனைநாள் பகலைத்தான்
காணவில்லை நாங்கள்.
இனி இரவையும் காணோமோ?

பி.விக்னேஸ்வரன்-ஹட்டன்.

இடம் உள்ள வரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்



### தெரிந்துகொள் தோழா!

மண்ணின் மைந்தா!
ஆயுதங்களால் சாதனை புரிந்து
சரித்திரம் படைக்க வேண்டிய-நீ
காலங்களின் சூழ்ச்சியால்
கதிகலங்கி உயிர்களை அழிக்க
துணிந்து விட்டாயே!
உன் உயிர் பிரியப் போவதும்
ஆயுதத்தால் என்பதை
மறந்துவிட்டாயா?

இ.சிவகுமாரி-மட்டக்களப்பு.

### ஒடுக்குமுறை

கொந்தளிக்கும் இந்துக்
கடலிலே
தத்தளிக்கும் தமிழன்
கழுத்தினை
கத்தரிக்க எடுக்கும் முயற்சி
தான் இது.

சி.ஹம்ஸத்வனி-கொழும்பு.

### சுதந்திரம் இல்லையே(ா)?

யுத்தம் என்கின்ற கொடூரத்தினால்
ரத்தம் சிந்துகின்ற மனிதர்களுக்கு
அன்புக் கரம் நீட்ட புறப்படுகின்ற
அன்னமே உனக்கும் சுதந்திரம் இல்லையே(ா)?

செல்வி.ஜனனி தயாளன்-கொழும்பு-06.

### சேர்த்துக்கொள்...

தனியே எனைமட்டும்
தரணியினின்று அனுப்பிடில்
தாயுந்தந்தையும் தவிப்பர்.
அன்பிற்குரியவர்களே,
அவர்களையும் என்னோடு
சேர்த்துக் கொள்ளுங்கள்.

ஷர்மிலா ஏ.எஸ்-அனுராதபுரம்.

### பதில் சொல்வாயா?

கொத்துவதும்!
குதறுவதும்!
உனது!
கூடப்பிறந்த குணமென்றாலும்
இந்த!
அப்பாவி அன்னத்தை...!
அழித்தொழிப்பது!
எந்தவகை நியாயம்?

ஹப்புத்தளையூர்-மனோ கோபாலன்.

### உணரவைத்தான்

நீர் இல்லாமல்
நான் இல்லை என்றிருந்தேன்
நான் இல்லாமல் அவன் இல்லை-என்று
உணர வைத்துவிட்டான்.

சி.பிரேமானந்-சீனக்குடா.

### ஜீவன்

என் உயிரை பறிக்க
கோடரி எதற்கு
ஏன்? குண்டூசி
போதும்
என்கிறதோ இந்த
ஜீவன்.

ஆ.முரளிதரன்-பூண்டுலோயா.

### யுத்த நிறுத்தம்!

அருவிக்கரையிலே
அன்னத்தைக் கொல்வதற்கு
அரிவாளேந்தும்
அறிவுகெட்ட மனிதா
ஒரு மாத கால
யுத்த நிறுத்தம்
அமுல் செய்யப்பட்டுள்ளதை
அறியவில்லையா மடையா?

சஹறுல் எம்.சலாஹுடீன்-உக்குவெல.

### இறை(ர)ப்படைப்பு

உனக்கு மீன் இரை!
எனக்கு நீ இரை!
பூமிக்கு நான் இரை!
புதுமையில்லை, எல்லாம் படைப்பே!

த.வெண்ணிலா-கிண்ணியா.

### வஞ்சனை

அறிவு கெட்ட மானிடனே
இந்த வாத்துக்கு தெரியாதடா
உன் வஞ்சனை
தெரிந்திருந்தால்
தூக்கி எறிந்திருக்கும்
இப்பிறவியை...

ப.விநாயகமூர்த்தி-புளும்பீல்ட்-மஸ்கெலியா.

### நிம்மதி

தரையில் நடக்கும் நீங்கள்தான்
நிம்மதியின்றி இருக்கின்றீர்கள்!
நீரில் நீந்தும் எம்மையாவது (ன்னை)
நிம்தியாக இருக்கவிடுவீர்களா!!

எப்.நஸ்மினா நஜுமுடீன்-கண்டி.

### எதிர்ப்பார்ப்பு...!

நடந்த கொடுமைகள் எல்லாம்
கடந்த ஆண்டோடு
தொலைந்து போகட்டும்
குருதிப் பசிக்கு என்னுயிரே
கடைசியழிவாகட்டும்
புதிய ஆண்டிலாவது
நேசம் கொண்டு வாழ்ந்திடுங்கள்!

எம்.புனிதன்-பசறை.

# வாசக(ர்) சாலை

**ஆசிரியருக்கு**

என் உயிர் முரசே! நீ சுமந்து வரும் அனைத்து ஆக்கங்களும் வெகு ஜோர். அதிலும் 'தேன் கிண்ணம்', 'சிறுகதை', 'சிந்தியா பதில்கள்', 'பாப்பா முரசு' இவைகள் பிரமாதம் .

வாழ்க உன்பணி! வளர்க உன் செயல்!

வே.மணிராஜா-பசறையூர்.

**முரசே**

என் இனிய நண்பா நீ சுமந்து வரும் அனைத்து அம்சங்களும் சூப்பர், அதிலும் நான் படித்து சுவைப்பது 'வாரம் ஒரு வார்த்தை', 'அனிதாவின் காதல்கள்', 'மன்னாதி மன்னன்' உனது பணி தொடர எனது வாழ்த்துக்கள்.

திருமதி.வதனி குகன்-பெரிய கல்லாறு.

**என்னிதயம் கவர் முரசே...**

'எக்ஸ்ரேரிப்போட்', 'தேன்கிண்ணம்', 'இலக்கிய நயம்' போன்றவை உன்னிலென்னை மிகவும் ஈர்த்தவை மற்றும் அடோல்ஃப் ஹிட்லரின் உண்மைத் தொடரை மிகச் சுவாரசியமாகத் தந்துகொண்டிருக்குமுனக்கு என் பாராட்டுக்கள். மற்றும் நம் நாட்டுப் பிரச்சனைகளை தெளிவாகப் புலப்படுத்துவதில் தனிரகமான உன் பணி தொடர என் வாழ்த்துக்கள்...!

ஆரையம்பதி நந்தகுமார்-இலண்டன்.

**என் உயிர் முரசே!**

உன் வரவுக்காக ஒவ்வொரு வியாழனும் வழிமேல் விழிவைத்து பார்த்துக் கொண்டிருப்பேன். உன் பக்கங்களை பக்கம் பக்கமாக புரட்டினாலும் ஒவ்வொரு பக்கமும் சிந்திக்கவைக்கும் அறிவான சுவையான தகவல்களும். உன் பக்கங்களில் ரசிக்கும் பக்கம், 'தேன்கிண்ணம்', 'தகவல் பெட்டி', 'உண்மைத் தொடர்', 'லேடீஸ்', 'சிறுகதை'. இவைகளே. இன்னும் இன்னும் பல சுவைகளோடு நீ இவ்வுலகை வலம் வர வாழ்த்தும் உள்ளம்.

ஜெ.லக்கி-பெரியகல்லாறு.

**அன்பு முரசே**

நான் வாராவாரம் உன்னை காதலித்து வருகின்றேன். நீ அள்ளி வரும் அனைத்து ஆக்கங்களும் மிக மிக சூப்பர் அதிலும் தேன் கிண்ணம் மிகவும் என்னை கவர்ந்தது.உன்னுடைய சேவை தொடர வாழ்த்துகின்றேன்.

த.சிவதர்சினி-மன்னார்.



**வாழ்க! (தருக) வள (பல)முடன்!**

இப்பரந்த புவி அன்னையின் எமக்கோர் அன்பின் திருவடியாய் உண்மையின் பிம்பமாய் கிடைக்கப்பெற்ற அரிய பரிசே! இந்(எந்) நாட்டு அரசியலாகட்டும் அனைத்து அரசியல் அம்சங்களையும் அச் சொட்டாய் அறியத் தருவதில் முரசுக்கு நிகர் முரசே என்பது யாராலும் மறுக்க முடியாத உண்மை. முரசை ஒரே மூச்சில்-ஒரே பார்வையில் படிக்கும் திருப்தியே அலாதியானது.

நன்றி முரசே நன்றி! வாழ்க வளமுடன்! தருக பலமுடன்!

எஸ்.பத்மா, லோஜினி-கொழும்பு-10.

**அரசியல் கட்டுரை சிறந்த திறனாய்வு**

டிசம்பர் 16.22.2001 முரசு படித்தேன், புதிய பிரதமர் எதிர்நோக்கும் புதிய சவால் கட்டுரை சிறந்த திறனாய்வு, சமாதானத் தீர்வுக்கு சாதகமான மக்களின் ஆணை! உண்மையைக் கூறிய உண்மை ஆய்வு! மக்கள் தீர்ப்பு மகத்தானது. தேர்தல் முடிவுக்கு முன்பே வெற்றி உறுதி செய்யப்பட்டது. வாக்காளருக்கு நன்கு தெரியும். தேர்தல் வெற்றியை கருதி செய்யப்படும் எந்த சேவையும் மக்கள் மத்தியில் எடுபடாது. ஆடிய ஆட்டமும்பாடிய பாட்டுக்களும் ஓடியே போச்சு, வாடிய முகங்களை ஊடகங்களே வடிவாக காட்டித்தருகிறது. தினமுரசு சிறந்து விளங்கட்டும்!

கவிக்குயிலன்-சேனையூர்-06.

### அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறி இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிக்கொடுத்து விட்டு, வேறு பிரதி வாங்கிக்கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்து விடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.

# உங்கள் பக்கம்

## பரீட்சை நிலைய பொறுப்பதிகாரி மறுப்பு

அக்கரைப் பற்று பாடசாலை ஒன்றில் ஜீ.சி.ஈ. சாதாரண தரப் பரீட்சையின் போது கேள்வித்தாள்களை வழங்கியதில் சில குழறுபடிகள் இடம்பெற்றதாக கடந்தவார முரசில் வெளியாகியிருந்த செய்தி தவறானதென அந்த பரீட்சை நிலையத்தின் பொறுப்பதிகாரியாக இருந்த எம்.ஏ.சீ.எம். உவைஸ் என்பவர் அறிவித்திருக்கிறார்.

குறிப்பிட்ட பரீட்சை நிலையத்தின் பொறுப் பதிகாரியாக தானே கடமையாற்றியதாகக் குறிப்பிட்ட திரு உவைஸ் அன்றைய தினம் அவ்வாறான சம்பவம் எதுவும் நிகழ வில்லை என்று உறுதியாகக் கூறுகிறார்.

பிரதேசத்தில் உள்ள சில அரசியல் வாதிகளின் மீதும் தன்மீதும் ஆத்திரம் கொண்ட சிலர் இவ்வாறான கதைகளை இட்டுக்கட்டியிருப்பதாக கூறிய அவர் இது தொடர்பாக தனது மறுப்பை முரசுக்கு அனுப்பிவைத்துள்ளார்.

## முக்கியஸ்தர்கள் முரண்படக்கூடாது

மாத்தளை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தான 2001ஆம் ஆண்டுக்கான அறங்காவல் சபைத் தலைவர் தெரிவு கடந்த வருடம் நடைபெற்றது.

தலைமைப் பதவிக்கு முக்கியஸ்தர்கள் இருவர் போட்டியிடக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டுவிட்டமை ஒரு துரதிஷ்டமான நிகழ்வாக அமைந்துவிட்டது. இப்படியான ஒரு சூழ்நிலையை எவருமே எதிர்பார்த்திருக்கவில்லை.

ஒருவர் பிரபல வர்த்தகப் பிரமுகர் திரு.த. மாரிமுத்துச் செட்டியார் அவர்கள். மற்றவர் பிரபல வர்த்தகப் பிரமுகரான திரு.ச.சந்திரசேகரம் அவர்கள் இருவருமே தலைவர்களாகத் தொண்டாற்றிய பெருமைக்குரியவர்கள்.

இருவரும் உற்ற நண்பர்கள் பல ஆண்டுகாலமாக ஆலயத்தின் தலைவர், காரிய தரிசிகளாக இருந்து இணைந்து இறைத் தொண்டு புரிந்து ஏற்றம் பெற்றவர்கள். அண்ணன், தம்பி போலிருந்து அரும்பணி யாற்றியவர்கள்.

தொடர்ந்தும் சமய, சமூகப் பணிகளில் தம்மை அர்ப்பணித்துச் செயல்பட்டுவருபவர்கள். பிரமுகர்கள் வரிசையில் சமூகத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்ட கௌரவமான பெரியவர்கள் இவர்கள்.

இப்படிப்பட்ட இப் பெரியார்கள் இருவரும் இன்று இரு 'துருவங்களாக' அமைந்துவிட்டமை மிக வேதனைக்குரியதாகும்.

இவர்களது உறவு முறிவுடன் கூடிய 'இடைவெளி' நீண்டு கொண்டே செல்வது தடுத்து நிறுத்தப்படவேண்டும். இது முடியாத ஒன்றல்ல.

மாத்தளைப் பிரதேசத்தில் குறிப்பாக பட்டணத்திலுள்ள இந்து தமிழ்ப் பெருங்குடியினர் இரண்டுபட்டுப் போயுள்ளார்கள். இவர்களது பக்க சார்பு களைத்தெறிய ஆவன செய்யப்படுதல் அவசியமாகும்.

அதற்குமேலாக இளம் சமுதாயத்தினர் சிலர் குழம்பிய மனத்தினராய்த் திக்கற்ற போக்கினராய்ச் சிதறிப் போயுள்ளார்கள். இவர்களது மனோ நிலையும் மாறி, நிம்மதி ஏற்பட்டு அவர்களது உள்ளங்களிலும் இறை நம்பிக்கை துளிர்விட அம்பிகையின் பேரருள் கிட்ட வேண்டும்.

மாத்தளையில் இயங்கிவரும் சுமார் பத்து இந்து தமிழ் மன்றங்களின் ஒன்றியம் ஒன்று உருவாக்கப்பட்டு இதற்கான நன் முயற்சியில் ஈடுபட்டு செயல் பட்டு வருகிறார்கள். இவர்களது முயற்சி வெற்றி பெற வேண்டும்மென்பது எல்லோரது விருப்பமுமாகும்.

பொன்.லோகநாதன்-
( வழிபாட்டாளன்)-மாத்தளை.

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: 074-514282
தொலை நகல் (Fax):-074-513266

# பட்ஜெட்-உள்ளூராட்சித் தேர்தல் இரண்டுக்கும் பின்னர்

# ஏப்ரல் மாதம் அளவிலேயே புலிகளுடன் பேச அரசாங்கம் திட்டம்

அரசாங்கத்துக்கும் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுவார்த்தைகள் எதிர்வரும் ஏப்ரல் மாதத்தின் பின்னரே ஆரம்பமாகும் சாத்தியம் இருப்பதாக உயர்மட்ட அரசாங்க வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது.

தற்போது அவசர அவசரமாக வடபகுதி மக்களின் மனிதாபிமான பிரச்சனைகளைத் தீர்க்க அரசு நடவடிக்கை எடுத்துவருகின்றபோதிலும் புலிகளுடனான நேரடிப் பேச்சுவார்த்தைகளை 4 மாதங்களின் பின்னரே தொடங்க அட்டவணை வகுத்திருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

மார்ச் மாத ஆரம்பத்தில் உள்ளூராட்சித் தேர்தல்களும் அதனை அண்மித்ததாக புதிய நிதி ஆண்டுக்கான வரவு. செலவுத் திட்டமும் சமர்ப்பிக்கப்பட இருப்பதால் இந்த இரண்டு முக்கியத் தடைக்கற்களையும் தாண்டிய பின்னர் பேச்சுவார்த்தை மேசைக்குச் செல்லவே அரச தரப்பு திட்டமிட்டுள்ளது.

அதுவரையில் ஏனைய சிறிய பிரச்சனைகள் தொடர்பான தீர்வுகளை பெற்றுக்கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும்.

தற்போது புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்டன் பாலசிங்கத்துக்கும் நோர்வே தூதுக்குழுவுக்கும் இடையில் முதல் சுற்று பேச்சுவார்த்தைகள் முடிவடைந்திருக்கும் நிலையில் இது தொடர்பாக பாலசிங்கமும் புலிகளின் தலைவர் பிரபாகரனும் வன்னியில் சந்தித்து விரிவான பேச்சுக்களை நடத்தாம் என எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

எவ்வாறிருந்தபோதிலும் அரசாங்கம் தனது கால அட்டவணையின் அடிப்படையிலேயே பேச்சுவார்த்தை மேசைக்குச் செலலத் திட்டமிட்டிருக்கிறது. ■

## தேர்தலின் பின்னர் 1000 பொலிஸாரைக் காணவில்லையாம்! சிலர் வெளிநாடுகளில்!!

கடந்த தேர்தலின் பின்னர் சுமார் ஆயிரம் பொலிஸ் அதிகாரிகள் கடமைக்கு சமூகமளிக்கவில்லை என பொலிஸ் திணைக்களச் செய்திகள் தெரிவிக்கின்றன.

தேர்தல் காலத்தின்போது பொ.ஐ.ஐ.மு. வன்முறைகளுக்கு நேரடியாக உதவிய 161 பொலிஸ் அதிகாரிகளை கைது செய்வதற்கான முயற்சிகள் நடைபெறுகின்றபோதிலும் அவர்கள் தலைமறைவாகி உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவர்கள் அனைவரும் பொதுச் சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தமை கொலைகள் மற்றும் பல்வேறு குற்றச் செயல்களுடன் நேரடியாக தொடர்புபட்டிருந்தவர்கள் எனவும் நீதிமன்ற விசாரணைகளுக்காக இந்த பொலிஸ் அதிகாரிகளை தேடிய போது அவர்களில் சிலர் நாட்டை விட்டு வெளியேறியிருப்பதும் வேறு சிலர் தலைமறைவாகி இருப்பதும் தெரியவந்துள்ளது.

காணாமல் போயிருக்கும் ஏனைய பொலிஸார் தேர்தல் முடிந்து ஆட்சி மாற்றம் நிகழும் என்பது உறுதியான பின்னர் சுகயீன விடுமுறையில் சென்றவர்கள். இவர்களுள் பலர் கடமைக்குத் திரும்பாதது மாத்திரமன்றி தமது நிரந்தர வதிவிடங்களை மாற்றிக் கொண்டிருப்பதாகவும் அறியக் கிடைக்கின்றது.

இவ்வாறு காணாமல்போன பொலிஸ் அதிகாரிகளுள் ஐந்துபேர் பிரதான பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகளாக கடமையாற்றியவர்கள். மேலும் 71 பேர் பொலிஸ் பரிசோதகர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ●

## கிழக்கில் இனங்களுக்கிடையிலான நல்லுறவு குறித்து சமூகத்தலைவர்கள் எச்சரிக்கை

கிழக்கில் போர் நிறுத்த சூழலை பயன்படுத்தி நகர்ப்பகுதிகளுக்கு வந்து கடைகளில் பணம் கொடுக்காது ஆயுத பாணிகள் பொருட்களை பெற்றுச் செல்வதால் பொதுமக்கள் மத்தியில் கடும் விசனம் தோன்றியுள்ளது.

முஸ்லிம் பகுதிகளில் தொடர்ச்சியாக இடம்பெறும் இத்தகைய சம்பவங்களால் தமிழ்-முஸ்லிம் உறவு பாதிக்கப்படக்கூடுமென சமூக அக்கறையுள்ள பலரும் எச்சரிக்கை விடுத்துள்ளனர். ■

## வைத்தியர்களின் கயிறிழுப்பால் இருதய நோயாளிகள் பலர் உயிராபத்தை எதிர்நோக்கியிருப்பதாக பாதிக்கப்பட்டவர்களிடமிருந்து புகார்!

இருதய நோயினால் பாதிக்கப்பட்டு கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காகச் செல்லும் பலர் அங்குள்ள வைத்தியர்களின் பொறுப்பற்ற செயலினால் உயிராபத்தை எதிர்நோக்கி இருப்பதாக புகார் தெரிவிக்கப்படுகின்றது.

வைத்தியசாலையில் இருதய சத்திர சிகிச்சைக்காக நீண்ட பட்டியல் ஒன்று காத்திருப்பதால் தனியார் மருத்துவ நிலையங்களில் இத்தகைய சத்திரசிகிச்சைகளை மேற்கொள்ளுமாறு வைத்தியர்கள் சிபாரிசு செய்கின்றனர்.

இந்த சத்திர சிகிச்சைப் பட்டியல் அவசர நோயாளிகளை கருத்தில் கொண்டு ஒழுங்கு முறைப்படி பேணப்படுவதில்லை. இருதய நோய்க்கு தீர்வாக சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்படவேண்டும் என்று வைத்தியரினால் தீர்மானிக்கப்படும் சகலரும் இந்தக் காத்திருப்புப் பட்டியலில் சேர்க்கப்படுகின்றனர்.

காலியில் இருந்து அண்மையில் மிக அவசர சிகிச்சைக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு வந்த 2 வயதுக் குழந்தைக்கு கராப்பிட்டி வைத்தியசாலையில் இந்த சத்திர சிகிச்சையை மேற்கொள்ளுமாறு வைத்தியரினால் பணிக்கப்பட்டிருந்தது.

இக்குழந்தை தென்பகுதியில் பிறந்ததினால் கராப்பிட்டியவிலேயே இந்த சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்படவேண்டும் என வைத்தியரின் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

ஆனால் கராப்பிட்டியவில் மிக நீண்ட வரிசை பட்டியல் காணப்படுவதாலும் பாரதூரமான சத்திர சிகிச்சை என்பதனாலும் குழந்தையை மீண்டும் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு வைத்தியர்கள் அனுப்பியுள்ளனர்.

இருந்தபோதும் இந்தக் குழந்தையை ஏற்றுக்கொள்ள மறுத்த கொழும்பு தேசிய வைத்தியசாலை மருத்துவர்கள் ஜயவர்த்தனபுர வைத்தியசாலையில் சத்திரசிகிச்சை செய்யுமாறு கூறியிருக்கிறார்கள். ஜயவர்த்தனபுரவில் பணம் செலுத்தியே சிகிச்சை பெற வேண்டும். இத்தகைய சத்திரசிகிச்சை ஒன்றை இரண்டு இலட்சம் ரூபாய் செலுத்தினால் தனியார் மருத்துவமனைகளில் உடனடியாக மேற்கொள்ளும் வாய்ப்பிருக்கிறது.

தேசிய வைத்தியசாலைகளில் கடமையாற்றும் மருத்தவர்களே தனியார் ஆஸ்பத்திரிகளிலும் சிகிச்சை அளிக்கின்றனர். இதனால் கூடுமானவரை நோயாளிகளை தனியார் மருத்துவமனைகளை நாடச்செய்ய இவர்கள் முயற்சிசெய்வதாக குற்றஞ்சாட்டப்படுகின்றது.

அவசர நிலமைகளை கருத்தில் கொள்ளாது அங்கும் இங்கும் அலைக்கழிக்கப்படுவதால் பல நோயாளிகள் ஆபத்தை எதிர்நோக்கியிருப்பதாக கூறப்பட்டுள்ளது. 3 மாதங்களுக்குள் சத்திரசிகிச்சை செய்ய வேண்டிய சிலருக்கு காத்திருப்புப் பட்டியலின் படி 2003ம் ஆண்டு டிசம்பரில் நாள் வழங்கப்பட்டுள்ளது. ●

## மடவளை கொலை சந்தேக நபர்களின் மனு உயர் நீதிமன்றத்தினால் நிராகரிப்பு!

முன்னாள் அமைச்சர் அனுருத்த ரத்வத்தையின் மகன்களான ஸானுக்க ரத்வத்த, லோகான் ரத்வத்த ஆகியோர் தம்மை கைது செய்வதை தடுக்குமாறுகோரி சமர்ப்பித்த மனு ஒன்றை உயர் நீதிமன்றம் திங்கள் அன்று நிராகரித்தது.

கண்டி மடவளையில் தேர்தல் தினத்தன்று 10 முஸ்லிம் இளைஞர்கள் கொலைசெய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக இவர்கள் இருவரையும் கைதுசெய்யுமாறு தெல்தெனிய நீதவான் உத்தரவிட்டிருக்கிறார். இந்த உத்தரவை இடைநிறுத்தி தம்மை கைது செய்வதை நிறுத்த இரகசிய பொலிஸாருக்கு உத்தரவிடுமாறு கோரியே உயர் நீதிமன்றத்தில் மனு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இதனை ஆராய்ந்த உயர் நீதிமன்றம் மனுதாரர்களை காப்பாற்ற உயர் நீதிமன்றத்தினால் முடியாது என்றும் அவர்கள் நீதிமன்றத்திற்கு தேவையானவர்கள் எனின் பொலிஸில் சரணடைவதே பொருத்தமானதென பிரமர் நீதியரசர் சரத்தின் சில்வா தனது தீர்ப்பில் குறிப்பிட்டிருந்தார்.

இதேவேளை அனுருத்த ரத்வத்தையின் மகன்மார் இருவரும் நாட்டை விட்டு தப்பிச் சென்றதாக கடந்த நாட்களில் செய்தி வெளியாகியிருந்தது. அவர்கள் உள்நாட்டிலேயே இருப்பதாக தற்போது தெரிவிக்கப்படுகின்றது. எவ்வாறெனிலும் இந்த கொலை சம்பவங்கள் தொடர்பான வழக்கு விசாரணைகள் மந்தகதியிலேயே நடைபெற்று வருகின்றன. ■

## படைக்கு 10 ஆயிரம் பேரை திரட்டும் நடவடிக்கையை தீவிரப்படுத்த அரசாங்கம் திட்டம்

கடந்த அரசாங்கத்தின் காலத்தில் ஆரம்பித்த இராணுவத்திற்கு 10 ஆயிரம் பேரைத் திரட்டும் நடவடிக்கையை தொடர பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது.

இராணுவத்திற்கும் விசேட அதிரடிப்படைக்கும் 10 ஆயிரம் பேரை திரட்டும் திட்டம் கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னர் பொ.ஐ.முன்னணி அரசாங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்டது. ஐ.தே.க. அரசு பதவி ஏற்றதும் இந்தத் திட்டம் இடைநிறுத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டது. ஆனால் அதனைத் தொடரவும் புதியவர்களை படையில் சேர்க்கும் பிரசாரங்களை தீவிரப்படுத்தவும் பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது.

நாடு முழுவதிலும் உள்ள சுமார் 20 நகரங்களில் இந்த ஆட்சேர்ப்பு முகாங்கள் ஆரம்பமாகியுள்ளன. படையில் சேர வருபவர்கள் தமக்கு தேவையான உடுதுணிகளையும், ஆவணங்களையும் முதல் நாளிலேயே எடுத்து வருமாறு கேட்கப்பட்டுள்ளனர். ●

## இ.தொ.கா-ம.ம.மு ஆதரவாளர்களிடையே மோதல்

நுவரேலியா, லப்புகலை தோட்டத்தில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஆதரவாளர்களுக்கும் மலையக மக்கள் முன்னணி ஆதரவாளர்களுக்கும் இடையில் ஏற்பட்ட மோதலில் 50க்கும் மேற்பட்ட குடியிருப்புக்கள் சேதமாக்கப்பட்டதுடன் பலர் காயமடைந்துள்ளனர்.

தேர்தலுக்கு முன்னர் இருந்தே இரண்டு பிரிவினர்களுக்குமிடையில் இருந்து வந்த கருத்து முரண்பாடு மோதலாக வெடித்ததிலேயே இவ்வாறு குடியிருப்புக்கள் சேதமாகியுள்ளன.

சம்பவம் தொடர்பாக தேடப்பட்டு வரும் பலர் தலைமறைவாகியுள்ளனர்.

## சித்திரவதைக்குள்ளான தமிழ் இளைஞரின் அடிப்படை உரிமை மீறப்பட்டதாக தீர்ப்பு!

பிரமனாளங்குளம் சோதனைச் சாவடியில் வைத்து கைது செய்து தன்னை இம்சைபடுத்தியதன்முலம் பொலிஸார் தனது அடிப்படை உரிமையை மீறி விட்டதாகக் கூறி தமிழ் இளைஞர் ஒருவர் சமர்ப்பித்த மனுவை விசாரணை செய்த உயர் நீதிமன்றம் அந்த இளைஞருக்கு 40, ஆயிரம் ரூபாவை நட்டஈடாக வழங்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டது.

மல்லாவி திருநகரைச் சேர்ந்த ஜெகதீஸ்வரன் என்பவரே இந்த மனுவை சமர்ப்பித்திருந்தார். வவுனியாவில் உள்ள தனது உறவினர்களை பார்வையிட வந்தபோது கடந்த ஆண்டு ஜூலை மாதம் 27ம் திகதி இவர் பிரமனாளங்குளத்தில் வைத்து வவுனியா குற்றத் தடுத்து பிரிவினரால் கைது செய்யப்பட்டார்.

வவுனியா ஜோசப் முகாமில் 3 நாள் தடுத்து வைக்கப்பட்டிருந்த இவர் அங்கு வைத்து கடுமையான தாக்குதலுக்குள்ளாகியிருக்கிறார். அதன்பின்னர் வவுனியா நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்ட ஜெகதீஸ்வரன் அனுராதபுரம், பூசா சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்ட காலப்பகுதியில் கடுமையான தாக்குதலுக்கு உள்ளாகியிருக்கிறார். இதன் காரணமாக இவரது கண் பார்வை குறைந்துள்ளதாக மனுவில் தெரிவிக்கப்பட்டிருந்தது. இவரது உடம்பில் 14 காயங்கள் காணப்பட்டதாக வைத்திய அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த மனுவை விசாரணை செய்த மாக் பெர்னாண்டோ, டி.பி.எஸ்.குணசேகர, அமீர் இஸ்மாயில் ஆகியோரைக் கொண்ட நீதிபதிகள் குழு அரசியல் அமைப்பின் 11வது பிரிவினால் உறுதிசெய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளதாகக்கூறி மனுதார்ருக்கு 40 ஆயிரம் ரூபாவை நட்டஈடாக வழங்குமாறு உத்தரவிட்டது. ■

## ஜனாதிபதிக்கு எதிராக அரசியல் குற்றவியல் பிரேரணை

ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்கா குமாரதுங்கவுக்கு எதிராக அரசியல் குற்றவியல் பிரேரணை ஒன்றை கொண்டுவருவது தொடர்பாக ஆளுங்கட்சி பாராளுமன்ற குழுக்கூட்டத்தில் ஆராயப்பட்டுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் பாராளுமன்ற கட்டடத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற ஆளுங்கட்சி பாராளுமன்றக் குழுவின் கூட்டத்தின்போது இந்தப் பிரேரணை அமைச்சர்களான ராஜித்த சேனாரத்ன, ரவி கருணாரத்ன ஆகியோர்களினால் முன்வைக்கப்பட்டுள்ளது.

எவ்வாறெனினும் இந்த பிரேரணை தொடர்பாக இறுதி தீர்மானம் எதுவும் அன்றைய தினம் மேற்கொள்ளப்படவில்லை. ஜனாதிபதிக்கு எதிராக குற்றவியல் பிரேரணையை கொண்டு வருவதற்கு முன்னர் அவரது செயற்பாடுகள் தொடர்பாக விரிவான முறையில் ஆராயப்பட வேண்டுமென்று இதன்போது கருத்து முன்வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை பொலிஸ்மா அதிபரை பதவி நீக்கம் செய்வது குறித்தும் இந்தக் கூட்டத்தில் ஆராயப்பட்டுள்ளது. ■

## பேரியல் அஷ்ரபின் அமைச்சில் ஊழல் இடம்பெற்றதாக விசாரணை

பொ.ஐ.முன்னணி ஆட்சி காலத்தில் திருமதி.பேரியல் அஷ்ரப்பின் அமைச்சின் கீழ் காணப்பட்ட தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் சட்ட விரோதமான முறையில் பொதுச் சொத்துக்கள் துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளதாக விசாணைகள் ஆரம்பமாகியுள்ளன..

தேர்தல் அறிவிக்கப்பட்டதன் பின்னர் வழங்கப்பட்ட 400 புதிய நியமனங்கள் தொடர்பாகவும் விசாரணைகள் நடத்துமாறு வீடமைப்பு அபிவிருத்தி அமைச்சர் பி.ஹரிசன் உத்தரவிட்டுள்ளார். இந்தக் காலப்பகுதிக்குள் கொழும்பு நகருக்குள்ளும் அதனை அண்டிய பகுதிகளிலும் பெறுமதிமிக்க அரசாங்க சொத்துக்கள் பல, சில தனிப்பட்ட நபர்களுக்கு குறைந்த விலையில் வழங்கப்பட்டுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு தீவிர இருப்பிட நெருக்கடியை எதிர்நோக்குபவர்கள் புறந்தள்ளப்பட்டு வசதி படைத்த பலர் அமைச்சு அதிகாரிகளின் விருப்பத்துக்கேற்ப உபசரிக்கப்பட்டிருப்பதும் தெரியவந்துள்ளது. ●

# முரசம்

## அரசியல் பழிவாங்கல்கள் தவிர்க்கப்படவேண்டும்

**அன்புள்ள உங்களுக்கு, வணக்கம்.**

கடந்த அரசாங்கத்தின் காலத்தில் தொழில் பெற்றுக்கொண்ட பலருக்கு ஐ.தே.க. அரசாங்கம் அமையப் பெற்றதோடு தமது வேலைத்தலங்களுக்கு செல்ல முடியாத நிலை ஏற்பட்டிருப்பதாக புகார்கள் வெளிவந்தவண்ணமுள்ளன.

சில அரசாங்கக் காரியாலயங்களிலும் போக்குவரத்துத் துறையிலும் இந்த நிலைமை மிக மோசமாகக் காணப்படுகின்றது.

கடந்த தேர்தலின் போது பொ.ஐ.மு. சார்பாக தேர்தல் வேலைகளில் ஈடுபட்ட சிலர் தமது வேலைத்தலங்களுக்குச் செல்லமுடியாது தொழிலை இழக்கும் நிலை தோன்றியிருக்கிறது.

எந்தவொரு அரசியல் கட்சிக்கும் ஆதரவளிக்கும் தனி மனித அரசியல் சுதந்திரத்தை அப்பட்டமாக மீறும் செயல்கள் தேர்தலின் பின்னர் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன.

தேர்தலுக்கு முன்னதாக பொதுஜன ஐக்கிய முன்னணி ஆதரவாளர்களின் அடாவடித்தனங்களால் பாதிக்கப்பட்ட பலர் தேர்தலின் பின்னர் 'தங்களுடைய அரசாங்கம்' அமையப் பெற்றதும் மறுதரப்பை தீவிரமாக பழிதீர்க்கும் நடவடிக்கைகளில் இறங்கியிருந்தனர்.

இத்தகைய செயல்களில் ஈடுபடவேண்டாம் என பிரதமர் பல தடவை வேண்டுகோள் விடுத்தபோதும் உரிய பயன் கிடைத்ததாக தெரியவில்லை.

மலையகப் பகுதிகளில் பல சமுர்த்தி ஊழியர்கள் கடந்த ஒரு மாதகாலமாகவே தமது தொழில் நிலையங்களுக்குச் செல்ல முடியாது தவிப்பதாக அறியக் கிடைக்கிறது.

வேறு பிரதேசங்களிலும் இவ்வாறான பல சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

ஐ.தே.க. வாக்குறுதியளித்த புதிய அரசியல் கலாசாரமொன்றை உருவாக்கும் செயற் திட்டத்திற்கு இத்தகைய சம்பவங்கள் தடையாக அமைவது மாத்திரமன்றி இது கட்சி அரசியல் குரோதத்தை மோசமாக வளர்த்துவிடும் ஒரு கீழ்த்தரமான செயற்பாடும்கூட.

இப்போது தேர்தல் முடிவுற்று ஒரு மாதத்திற்கும் கூடுதலான காலம் கழிந்துவிட்டது.

அப்படியிருந்தும் கீழ் மட்ட ஊழியர்கள் இன்னமும் பழிவாங்கப்படுவதாக அறியக் கிடைக்கும் செய்திகள் வேதனை தருகின்றன.

குறிப்பிட்ட ஒரு அரசியல் கட்சிக்கு ஆதரவளிப்பதை குற்றச் செயலாகக் கருதும் அநாகரிகமான நடைமுறை மாற்றியமைக்கப்படும் என்று ரணில் விக்கிரமசிங்க அளித்த வாக்குறுதி காப்பாற்றப்படவேண்டும்.

எந்தக் கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாலும் அரசியல் ரீதியிலான பழிவாங்கலை எவரும் நியாயப்படுத்த முடியாது.

இதுதொடர்பாக உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும்.

*மீண்டும் மறுமடலில்*
*வந்து கலக்கும்வரை*

*என்றென்றும் அன்புடன்,*
*ஆசிரியர்.*

# அத்துருகிரியவில் மீட்கப்பட்ட ஆயுதங்களின் இரகசியம் என்ன?

கடந்தவாரம் முதல் கொழும்பு அரசியல் வட்டாரங்களிலும் சரி பாதுகாப்பு வட்டாரத்திலும் சரி பெரும் பரபரபரப்பை ஏற்படுத்திய சம்பவம் அத்துருகிரிய மிலேனியம் சிட்டி வீடமைப்புத் தொகுதியிலிருந்து ஆயுதங்கள் மீட்கப்பட்டதுதான்.

இந்த ஆயுதங்கள் தொடர்பாக பொலிஸாருக்கும் இராணுவத்தினருக்குமிடையில் கருத்து வேறுபாடுகள் தோற்றம் பெற்றுள்ளன.

இராணுவம் அரசாங்க விரோத நடவடிக்கை ஒன்றுக்கு தயாரானபோது புத்தி சாதுரியமாக செயற்பட்ட பொலிசார் அதனைத் தடுத்து நிறுத்தி, சந்தேக நபர்களைக் கைது செய்துவிட்டதாகவே தகவல்களில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இராணுவமோ தாங்கள் புலிகளுக்கெதிராக மேற்கொண்ட இரகசிய நடவடிக்கையின் ஒரு பகுதி பொலிசாரின் முட்டாள் தனமான செயற்பாட்டால் அம்பலத்துக்கு வந்திருக்கின்றன என பொலிஸ் தலைமையகத்தைக் கடிந்துகொள்கிறது.

இது தொடர்பாக பொலிஸார் சார்பிலும் இராணுவத்தினரின் சார்பிலும் இருவேறு அறிக்கைகள் அரசாங்க உயர் மட்டத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

அத்துருகிரிய கொழும்பிலிருந்து ஹொரணை செல்லும் வழியில் சுமார் 15 கிலோமீட்டர் தூரத்தில் இருக்கிறது. இங்கு மிலேனியம் சிட்டி என்ற தனியாருக்குச் சொந்தமான பாரிய வீடமைப்புத் தொகுதி ஒன்று காணப்படுகின்றது. இந்த தொகுதியிலுள்ள வீடொன்றிலிருந்தே நவீன ஆயுதங்கள் பல கடந்த வாரம் விசேட பொலிஸ் குழு ஒன்றினால் மீட்கப்பட்டது.

கண்டி மடவளையில் கடந்த தேர்தல் தினத்தன்று 10 முஸ்லிம் இளைஞர்கள் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக விசாரணை மேற்கொள்ளும் விசேட பொலிஸ் குழுவினருக்கு கிடைத்த தகவல் ஒன்றின் அடிப்படையிலேயே இந்த வீடமைப்புத் தொகுதி கண்டியிலிருந்து சென்ற பொலிஸ் குழுவினரால் சுற்றி வளைக்கப்பட்டதென தெரிவிக்கப்பட்டது. பொலிஸ் தரப்பிலிருந்து கூறப்படும் தகவல்களின் அடிப்படையில் மடவளை கொலை சம்பவத்துடன் தொடர்பு பட்டதாக கூறப்படும் முன்னாள் அமைச்சரின் மகன் மிலேனியம் சிட்டியிலுள்ள குறிப்பிட்ட வீட்டுக்கு வந்துசென்றதை உளவுப் பிரிவினர் அவதானித்ததாகவும் அதன் பின்னர் தெல்தெனிய நீதிமன்றத்தில் விசேட உத்தரவொன்றைப் பெற்று அந்த வீட்டை சோதனையிட்டபோதே ஆயுதங்கள் மீட்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வீடு ஒரு இராணுவ கப்டனுக்குச் சொந்தமானது. அங்கு அவரும் அவரது மனைவியும் வேறு இருவரும் மற்றொரு தமிழ் நபரும் வசித்து வந்துள்ளனர். இராணுக் கப்டன் ஒரு முஸ்லிம். பொலிஸார் வீட்டுக்குள் சோதனை நடத்தும்போது அவர் வீட்டில் இருக்கவில்லை. வெளியில் சென்றிருந்த கப்டன் இரவு 9 மணியளவில் வீட்டுக்கு வந்து கதவைத் தட்டியபோது சோதனையிட வந்திருந்த பொலிஸ் குழுவினரே அவரை வரவேற்றுள்ளனர். படுக்கை அறையில் வெவ்வேறு பகுதிகளாக இரண்டு இடங்களில் மறைத்துவைக்கப்பட்டிருந்த ஆயுதங்கள் கைப்பற்றப் பட்டதோடு வீட்டிலிருந்தவர்களும் கைதுசெய்யப்பட்டனர்.

இந்த ஆயுதங்களுள் 17 கிளைமோர் குண்டுகள்,தாங்கி எதிர்ப்பு குண்டுகள் 10, ரி.56 ரக துப்பாக்கிகள் 2, ரி. 84ரக துப்பாக்கி ஒன்று, 412 சன்னங்கள், 12 மெகசின், புலிகள் பாவிக்கும் சீருடை 60 தொகுதிகள், ஒரு சயனைட் குப்பி, வெடி மருந்துகளை நிரப்பி வைக்கக்கூடிய உடை 14 தொகுதிகள், மூன்று ரிமோட் கொன்ட்ரோல்கள், டெட்னேட்டர் 12, 17 வயர் ரோல் என்பன உள்ளடங்கும்.

அன்றைய தினம் இரவே கைப்பற்றப்பட்ட ஆயுதங்களுடன் இராணுவக் கப்டனும் ஏனையவர்களும் முதலில் இராணுவத் தலைமையகத்துக்கு கொண்டுவரப்பட்டு, பின்னர் கண்டிக்கு அழைத்து வரப்பட்டனர்.

இப்பொழுது இந்த ஆயுதங்களையும் கைது செய்யப்பட்ட இராணுவக் கப்டனையும் தொடர்பு படுத்தி, அரசியல் வட்டாரங்களில் இரண்டு வகையான கதைகள் பேசப்படுகின்றன.

ஒன்று புலிகளின் பெயரைச் சொல்லி பாரிய தாக்குதல் ஒன்றை கொழும்பிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் நடத்த நாசகார சக்திகள் திட்டமிட்டிருக்கலாம் என்பது. மற்றைய விடயம் அரசாங்கம் முன்னெடுத்துச் செல்லும் சமாதானப் பேச்சுவார்த்தைகளைக் குழப்புவதற்கு இந்த ஆயுதங்களைப் பயன்படுத்தத் திட்டமிட்டிருக்கலாம் என்பது. இவற்றோடு சேர்த்து தேர்தல் பிரசார காலத்தில் ரணில் விக்கிரமசிங்க மீதான கொலை முயற்சி குறித்த சில செய்திகள் வெளியாகி இருந்தன. இதனையும் இந்த ஆயுத மீட்பு விவகாரத்தையும் முடிச்சுப்போட்டு சில கற்பனா ரீதியிலான ஆராய்ச்சிகளும் நடைபெற்றுள்ளன.

இந்த ஆயுதங்கள் தொடர்பாக இலங்கை இராணுவம் உடனடியாக அறிக்கை ஒன்றை விடுத்தது. பொலிஸ் விசாரணைகளின் முடிவில் உண்மை தெரியவரும் என்றும், குறிப்பிட்ட ஆயுதங்கள் புலிகளுக்கெதிரான மிக இரகசிய நடவடிக்கை ஒன்றிற்காக தயார் செய்யப் பட்டவை என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது. அத்துடன் கைது செய்யப்பட்ட கப்டனின் பணி இராணுவ சட்டதிட்டங்களுக்கு புறம்பானதல்ல என்றும் அது சட்டரீதியிலான ஒரு நடவடிக்கை என்றும் தவிர்க்க முடியாத காரணங்களினால் மேலதிக விபரங்களை வெளியிட முடியாதிருப்பதாகவும் இராணுவப் பேச்சாளரினால் தெரிவிக்கப்பட்டிருந்தது.

உண்மையில் இந்த ஆயுதங்கள் எதற்காகக் கொண்டுவரப்பட்டன. இதன் மர்மம் என்ன என்ற விவரம் விசாரணைகளின் பின்னர் கூட பகிரங்கப்படுத்தப்படப் போவதில்லை. ஏனெனில் இது இலங்கை இராணுவம் புலிகளுக்கு எதிராக கடந்த காலங்களில் மேற்கொண்ட சில இரகசிய வெற்றிகரமான நடவடிக்கைகளின் தொடர் என்பதே உண்மை.

> **இந்த வீடு ஒரு இராணுவ கப்டனுக்குச் சொந்தமானது. அங்கு அவரும் அவரது மனைவியும் ஒரு தமிழ் நபர் உட்பட மேலும் மூவரும் இருந்துள்ளனர். இராணுக் கப்டன் ஒரு முஸ்லிம். பொலிஸார் வீட்டுக்குள் சோதனை நடத்தும்போது அவர் வீட்டில் இருக்கவில்லை. வெளியில் சென்றிருந்த அவர் இரவு 9 மணியளவில் வீட்டுக்கு வந்து கதவைத் தட்டியபோது சோதனையிட வந்திருந்த பொலிஸ் குழுவினரே அவரை வரவேற்றுள்ளனர்.**

இந்த ஆயுதங்கள் மீட்கப்பட்டதினால் புலிகளுக்குக் கூட இதுவரையும் மர்மமாக இருந்து வந்த சில முடிச்சுக்கள் அவிழ்க்கப்பட்டுள்ளன. இராணுவத்தினருக்கும் பொலிஸாருக்கும் ஆரம்ப நாட்களில் இந்த ஆயுத விவகாரம் தொடர்பாக ஏற்பட்ட கருத்து மோதல்களையும் பின்னர்

**எம்.பீ.எம். பர்ஸான்**

அந்தக் கதை அரசாங்க உயர் மட்டத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டபின்னர் மெதுவாக மழுங்கடிக்கப்படும் விதத்தையும் அவதானிக்குமிடத்து இந்த ஆயுதங்களை வைத்து இதற்கு முன்னர் என்ன செய்யப்பட்டது.? எதிர் காலத்தில் எதற்காக திட்டமிடப்பட்டது என்பதை ஓரளவு கிரகிக்க முடியும்.

கைது செய்யப்பட்ட இராணுவக் கப்டன் தொடர்பாக இராணுவத்தினரின் சார்பில் வெளியிடப்பட்ட அறிக்கையில் அவர் மிகச் சிறந்த தேசபக்தர் என்றும் கொழும்பில் பணியாற்றினாலும் வடக்கு-கிழக்குப் பகுதிகளுக்கு அடிக்கடி சென்று வருபவர் என்றும் நாட்டின் ஒருமைப் பாட்டைப் பாதுகாக்க அர்ப்பணிப்புடன் செயற்படும் இத்தகைய அதிகாரியை அவசரப்பட்டு வீண் சந்தேகம் கொள்வதை விட்டுத் தவிர்த்துகொள்ளுமாறு கேட்கப் பட்டிருந்தது.

நம்பகரமான சில செய்திகளின் படி, புலிகளின் முழுக்கட்டுப்பாட்டுப் பகுதிகளில் கடந்தகாலங்களில் இடம்பெற்ற சில புலிகள் இயக்க முக்கியஸ்தர்களின் கொலைகளுக்கும் இந்த ஆயுதங்களுக்கும் இடையில் தொடர்பு இருக்கலாம் என சந்தேகங்கொள்ள முடிகிறது.

இப்போது கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் கூட புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இரகசிய நடவடிக்கையொன்றை மேற்கொள்ள தயார் செய்யப்பட்டவை என்றே அறிய முடிகிறது.

அவ்வாறிருக்குமாயின் இந்த ஆயுதங்கள் மீட்கப்பட்டதில் அல்லது இந்த செய்தி பகிரங்கப்படுத்தப்பட்டதில் ஏனையவர்களை விடவும் புலிகளுக்கே இலாபம் அதிகம்.

குறிப்பிட்ட முஸ்லிம் கப்டனின் மேற்பார்வையின் கீழ் கிழக்கில் உள்ள சில தமிழ்க் குழுக்களின் அங்கத்தவர்களை பயன்படுத்தியே புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் தாக்குதல்கள் இடம்பெறுவதாக கடந்த நாட்களில் செய்திகள் வெளியாகியிருந்தன.

எவ்வாறாக இருந்தபோதிலும் அத்துருகிரிய ஆயுதங்கள் தொடர்பில் பல குழப்பகரமான செய்திகளும் காணப்படுகின்றன.

முதலில் பொலிஸ் தரப்பில் கூறப்படும் கருத்துக்கள் எந்தளவு உண்மையானது என்ற கேள்வி எழுகின்றது. பிரதான விடயம் யாதெனில் மடவளை கொலைகளுடன் தொடர்புடைய முக்கிய சந்தேக நபர் மிலேனியம் சிட்டி வீட்டுக்குப் போய் வருவது பொலிஸ் உளவுப்பிரிவினால் அவதானிக்கப்பட்டதாக கூறப்பட்டள்ளது. இந்த நபர் மீது ஏற்கனவே நீதிமன்றம் பிடிவிறாந்து பிறப்பித்துள்ளது.

அவ்வாறாயின் ஏன் அவரை கைது செய்யாது பொலிஸார் கைகட்டி நிற்கின்றனர். இது விசாரணையை வேறு திசையில் கொண்டுசெல்வதாகவிருக்கிறது.

இந்த நபரை வெளியில் விட்டு பின் தொடர்வதன் மூலம் மேலும் பல இரகசியங்களை அறிய பொலிஸார் திட்டமிட்டிருக்கலாம் என்று ஒரு வாதத்திற்கு சிந்தித்தாலும் கூட அவர் மீதான நீதிமன்ற பிடி விறாந்து இதன் மூலம் அர்த்தமற்றதாகின்றது.

இராணுவத் தரப்பினரால் கூறப்படும் நியாயமும் இதேபோன்று குழப்பகரமானது. அதாவது புலிகளுக்கு எதிரான மிக இரகசிய நடவடிக்கை ஒன்றுக்கு திட்டமிடப்பட்டதாக இராணுவம் கூறுகிறது. அந்த இரகசிய நடவடிக்கை என்ன என்பதை வெளியில் கூறமுடியாமைக்கான காரணத்தை புரிந்துகொண்டாலும் கூட கிழக்கில் அல்லது வடக்கில் நடத்தப்படும் தாக்குதலுக்குத் தேவையான ஆயுதங்கள் தலைநகருக்கு அண்மையில் ஏன் மறைத்து வைக்கப்படவேண்டும் என்ற கேள்வியும் இங்கே எழுகின்றது. அதுவும் ஒரு தனிப்பட்ட நபரின் வீட்டில். இந்த வீட்டை இராணுவம் இரகசிய நடவடிக்கைக்காக வாடகைக்கு பெற்றிருந்ததென வும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இத்தனை தூரம் இரகசியமாக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை தலைநகரில் என்னவாக இருக்கலாம் என்ற விடயங்கள் புதிராகவே இருக்கின்றன. இவற்றுக்கான விடைதேடும் பயணத்தில் சில இராணுவத் தரப்பு செய்திகளால் ஊர்ஜிதப்படுத்தப்படும் ஒரு விடயத்தையும் இங்கே கருத்தில் கொண்டாக வேண்டும்.

அதாவது ஆட்சி மாற்றத்தோடு இராணுவ பொலிஸ் உயர்மட்டங்களில் பல மாற்றங்கள் நடைபெறுவது வழக்கமான விடயம். ரணில் விக்கிரமசிங்க பாதுகாப்பு வட்டாரங்களுக்குள் அத்தகைய உடனடி மாற்றங்களை செய்யவில்லை. இதனால் அவ்வாறான மாற்றமொன்றை எதிர்பார்த்து பொலிஸ் இராணுவ மேல் மட்ட கதிரைகள் மீது ஆசைகொண்ட சிலர் புலிகளுக்கெதிரான இராணுவ நடவடிக்கை ஒன்றின் இரகசியங்களை பிரதமருக்கெதிரான அல்லது அரசாங்கத்துக்கு எதிரான நடவடிக்கை என காண்பிக்க எடுத்த முயற்சியின் விளைவுதான் இதுவோ என எண்ணத் தே.:ன்றுகிறது. அத்துருகிரியவில் இயங்கி வந்த இராணுவ உளவுப் பிரிவினரின் முக்கிய செயற்பாட்டுப் பிரிவும் இதன் காரணமாக செயலற்றதாக ஆக்கப்பட்டுள்ளது. இது எதுவும் செய்யாமலேயே புலிகளுக்கு கிடைத்த ஒரு வெற்றி!

அடுத்த சில தினங்களில் காதோடு காதுவைத்தாற்போல் கைது செய்யப்பட்ட இராணுவக் கப்டன் விடுதலையாவார் என எதிர்பார்க்க முடியும். ஆனால் முன்னர் போன்று அவரால் இரகசிய நடவடிக்கைகளை மேற்கொள்ளலாமா என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். இனிமேல் புலிகள் இது விடயத்தில் நிச்சயம் உஷாராக இருப்பார்கள்.

# போர்-பேச்சுவார்த்தை இரண்டுக்குமான இரகசிய நகர்வுகள்

**போ**ரா சமாதானமா?

1983ம் ஆண்டு இனக்கலவரத்தின் போது அன்றைய ஜனாதிபதி ஜே.ஆர் ஜெயவர்த்தனா தமிழ் மக்களைப் பார்த்துக் கேட்ட கேள்வியிது. அன்று முதல் இன்றுவரை போரே இங்கு கோலோச்சுகிறதேயன்றி சமாதானம் வந்தபாடில்லை.

பருவகாலங்கள் மாறும்போது புதிய பூக்கள் மலர்வதைப் போல இங்கு ஆட்சி மாற்றங்களும் அரசியல் மாற்றங்களும் நிகழும்போதெல்லாம் புதிய நம்பிக்கைகள் தோன்றி சிலகாலம் நீடித்து பின் உதிர்ந்துபோவது வழமையாகிவிட்டது. இலங்கையின் இனப் பிரச்சனை கடும் யுத்தமாக வெடித்ததன்பின் ஒரு அரசியல் தீர்வு குறித்த நம்பிக்கையை ஏற்படுத்திய முதலாவது அரசியல் மாற்றம் இந்திய-இலங்கை உடன்படிக்கை வாயிலான மாகாண சபைத் தீர்வே!

ஆனால் அத்தீர்வு விடுதலைப் புலிகளால் ஏற்கப்படாத நிலையில் அன்றைய பிரேமதாசா ஆட்சியால் ஒத்துழைப்பு வழங்கப்படாத நிலையில் ஒருவருட காலத்துடன் செயலற்றுபோனது. அடுத்ததாக ஏற்பட்ட நம்பிக்கையானது புலிகளுக்கும் பிரேமதாஸா அரசாங்கத்தக்கும் ஏற்பட்ட உறவோடு தோன்றியது.

ஆனால் இருவருக்கும் பொது எதிரியாக விளங்கிய இந்திய அமைதிப் படை வெளியேற்றப் பட்டதன்பின் இவர்களுக்கிடையிலான உறவு முறிந்து மீண்டும் யுத்தம் ஆரம்பித்ததுடன் பிரேமதாஸாவையும் அது பலிகொண்டு முடித்தது.

இதன் பின் நிலவிய கெடுபிடி யுத்தநிலை 1994ம் ஆண்டு பொதுத் தேர்தலிலும் அதையடுத்த ஜனாதிபதித் தேர்தலிலும் சந்திரிகா அமோக வெற்றிபெற்ற ஆட்சி மாற்றத்துடன் ஒய்ந்து மீண்டும் புலிகளுடனான பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகியபோது மறுபடி நம்பிக்கை துளிர்த்தது.

ஆனால் அந்தப் பேச்சுவார்த்தைகளும் ஆறுமாதத்திற்குள் முறிவடைந்து மீண்டும் கெடுபிடி யுத்தம் வெடித்தது. இத்தகைய சூழ்நிலையில் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் மீண்டும் சந்திரிகா வெற்றியீட்டியதைத் தொடர்ந்து மற்றொரு சந்தர்ப்பமாக நோர்வே அரசாங்கத்தின் மூன்றாம் தரப்பு மத்தியஸ்துவத்துடனான பேச்சுவார்த்தை குறித்த முயற்சி சர்வதேச ஈடுபாட்டுடன் முனைப்பாக முன்னெடுக்கப்பட்டது.

ஆனால் அவையெதுவும் ஒரு ஆக்கபூர்வமான பேச்சுவார்த்தையாக உருவெடுக்காத நிலையிலேயே முடங்கிப் போயின. இவ்வாறு நம்பிக்கைகள் தோன்றுவதும் மறைவதுமான காலகட்டத்துக்குக்குள் சிக்கித் தவிக்கும் தமிழ் மக்களின் வாழ்வு அவலமாகிச் சென்று கொண்டிருக்கிறது!

இந்நிலையில்தான் தற்போது மீண்டுமொரு ஆட்சி மாற்றம்.

மீண்டுமொரு யுத்த நிறுத்தம்.

மீண்டுமொரு பொருளாதாரத் தடை நீக்கம்.

மீண்டுமொரு தற்காலிக இயல்பு நிலை மீண்டுமொரு பேச்சுவார்த்தைக்கான எத்தனம்!

ஆனால், இதுவரை கால வரலாற்று அனுபவங்கள் எம்மை இப் புதிய சூழ்நிலை குறித்து அதிகளவு நம்பிக்கை வைக்க அனுமதிப்பதாக இல்லை.

இன்று ஏற்பட்டுள்ள மாற்றங்கள் குறித்து புதுமை பாராட்டவும் எதுவுமில்லை.

எல்லாம் ஏற்கெனவே முன்னரும் நிகழ்ந்து மறைந்த மாற்றங்கள்தான்.

ஆதலால் இவை மட்டும் சமாதானத்தைக் கொண்டுவந்துவிடுமென எண்ணுவது அப்பாவித்தனமானதே!

இன்றைய ரணில் விக்கிரமசிங்கவின் ஐ.தே.க. அரசாங்கம் சில நல்லெண்ண நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதென்பது மறுக்கப்படக்கூடிய ஒன்றல்லவென்பது உண்மைதான். வீதித் தடைகளை அகற்றியதும், புலிகளின் யுத்த நிறுத்தத்தை ஏற்று தாமும் மோதல் தவிர்ப்பினை அறிவித்ததும் வடக்கு கிழக்கில் மேற்கொள்ளப்பட்ட பொருளாதாரத் தடைகளை நீக்குவது குறித்து தீவிரமாகப் பரிசீலிப்பதும், புலிகளுடன் இணக்கம் கண்டு யாழ்ப்பாணத்துக்கான தரைவழிப்பாதையைத் திறக்க முயற்சிப்பதும், வவுனியா பாஸ் நடைமுறையை ஒழிக்கப்போவதாகக் கூறியிருப்பதும், யாழ்ப்பாணத்தில் வலிகாமத்திலிருந்து இடம்பெயர்ந்தோரை சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்த வழிவகை செய்யப்போவதாகக் கூறுவதும் மீண்டும் நோர்வே அனுசரணையுடன் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளில் இறங்கியிருப்பதும் எவருக்குமே மகிழ்ச்சிகரமான விடயம் தான்.

ஆனால் இவற்றில் எவையெவை எவ்வளவு தூரம் வெளியே சொல்லப் படுவதுபோல் உண்மையில் அமுலாகப் போகின்றன என்ற கேள்வி ஒருபுறமிருக்க, இவற்றின் அமுலாக்கம் மட்டுமே சமாதானத்தைக் கொண்டுவந்து விடுமா என்ற கேள்வி மறுபுறம் உள்ளது.

ஏனெனில் இவற்றைவிட மிகத் தாராளமான தளர்வுகளும் கலகலப்புக்களும் புகழாரங்களும் முன்னரும் ஏற்பட்டுள்ளன. புலிகள் பிரேமதாஸா உறவு நிலவிய காலத்தில் பிரேமதாஸா போன்ற ஒரு சிறந்த தலைவர் இல்லையென புலிகளாலேயே அவர் புகழப்பட்டிருந்தார். ஆனால் இறுதியில் அவர் புலிகளாலேயே கொல்லப்பட்டார்.

சந்திரிக்கா ஆட்சிக்கு வந்தபோதும் இது போலத்தான் சகலராலும் புகழப்பட்டார். ஆனால் அவரும் புலிகளால் தாக்கப்பட்டு அதிஷ்டவசமாக உயிர் பிழைத்தார்.

பிரேமதாஸா காலத்தில் பொருளாதாரத் தடைகளின் தளர்த்தலைவிட புலிகளுக்கு நிதியும் பெருந்தொகை ஆயுதங்களும்கூட வழங்கப்பட்டன.

சந்திரிகாவுடனான பேச்சு வார்த்தை காலத்திலும் உணவுப் பொருட்கள், நுகர்வுப் பொருட்களின் தடை பெருமளவு தளர்த்தப்பட்டது.

இந்தியப் படை காலத்தில் தரைப் பாதை மட்டுமல்ல ரெயில் பாதையே திறந்திருந்து ரெயில்கூட ஓடியது. எனவே இவை தரும் மகிழ்ச்சி நிரந்தரமானதென நம்பமுடியாது.

இத்தனைக்குப் பிறகும் யுத்தம் திரும்பவும் வெடிக்கலாம். யுத்தமோ சமாதானமோ ஒரு தரப்பு மட்டும் சம்பந்தப்பட்ட விடயமல்ல.

இரு தரப்பும் சம்பந்தப்பட்ட விடயம்.

நிரந்தர சமாதானத்துக்கான வழிவகைகள் ஏதாவது செய்யப்படுகின்றதா என்பதுதான் பிரதானமானது.

ஆனால் மாறாக சில ஐயப்பாடுகள்தான் தலைதூக்க ஆரம்பிக்கின்றன. ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கம் இம்முறை அதிகாரத்துக்கு வந்தபோது இனப்பிரச்சனையை மட்டும் எதிர்நோக்கவில்லை. அதைவிடப் பூதாகரமாகப் பொருளாதாரப் பிரச்சனைகளையும் எதிர்நோக்குகின்றது.

இலங்கையில் பொருளாதார அச்சுறுத்தல் விளைந்துள்ள இந்நேரத்தில் சர்வதேச ரீதியாகவும் பொருளாதார நெருக்கடி தோன்றியுள்ளது.

அதனால் இதிலிருந்து மீளுவதற்கு அரசாங்கம் முன்னுரிமை கொடுக்கவேண்டிய நிர்ப்பந்தத்திலுள்ளது.

ஏற்கெனவே மின்சார வெட்டு நாட்டு மக்களை அச்சுறுத்தியவண்ணம் இருக்கிறது. தற்போதய நிலைமை தொடருமானால் சித்திரை மாதத்தின் பின் நீண்ட நேர மின்வெட்டுகள் தவிர்க்க முடியாததாகிவிடலாம்.

அதனால் எப்பாடுபட்டாவது மின்சார நெருக்கடிக்கு உடனடித் தீர்வு காணவேண்டியதாக அரசாங்கம் உள்ளது. மின்சக்தி அமைச்சர் கரு ஜெயசூரியா 100 நாட்களுக்குள் மின் நெருக்கடியை நீக்கவில்லையெனில் தான் பதவி விலகுவாரெனச் சவால் விடுத்துள்ளார்.

இதேவேளை திறைசேரியின் நிதி நிலமை காலியாகவுள்ளது. இதனைத் தீர்க்க வெளிநாட்டு நிதியுதவிகளைத் துரிதமாக ஈட்டிக்கொள்வதும் இலங்கை அரசாங்கத்துக்கு அதி முக்கியமான விடயமாக உள்ளது. இந்நிலையில் மாவின் விலையைத் தவிர்க்க முடியாது அதிகரிக்க நேரிட்டுள்ளது.

இந் நிலைமை வேறு அத்தியாவசியப் பொருட்களுக்கும் ஏற்பட வாய்ப்புள்ளது.

இதேவேளை அரச ஊழியர் மட்டத்தில் சம்பள உயர்வுக் கோரிக்கைகள் தலைதூக்கி வருகின்றன.

மறுபுறம் போக்குவரத்து சேவை போன்ற தனியார் சேவைகளும் கட்டண உயர்வுக்கு நெருக்கடி வழங்கி வருகின்றன. இதனால் அரசாங்கத்துக்கு எதிர்வரும் மார்ச்மாத வரவு செலவுத் திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றி முடிப்பதே தலையாய விடயமாக இன்றுள்ளது. இதற்கு சர்வதேச நாணய நிதியம், உலகவங்கி, மற்றும் இலங்கைக்கு உதவிவழங்கும் நாடுகளின் கடனுதவிகளை உச்ச அளவில் ஈட்டுவதற்கான வழிவகைகளை அரசாங்கம் மேற்கொள்ளவேண்டியுள்ளது.

அத்தோடு, கட்டுநாயக்கா விமான நிலையத் தாக்குதலின்பின் இலங்கைக்கான விமான மற்றும் கப்பல் போக்குவரத்துக்கான காப்புறுதிக் கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளதால் அதை மறுபடி தளர்த்த வழிவகை செய்ய வேண்டியும் உள்ளது. இவற்றுக்கெல்லாம் இலங்கை அரசாங்கத்துக்கு ஒரு தற்காலிக அமைதியாவது ஏற்படுத்தப் பட வேண்டிய அவசியம் உள்ளது.

இலங்கை அரசாங்கம் சமாதானத்தின்பால் நாட்டம் கொண்டிருக்கின்றதென்ற சர்வதேச அபிப்பிராயத்தை ஏற்படுத்த வேண்டியும் உள்ளது.

இலங்கைத் தலைநகர் ஒரு ஆபத்தான நகரம் என்ற மதிப்பீட்டை மாற்றினால்தான் அதன் மீது சர்வதேசப் போக்குவரத்துக்கான காப்புறுதிக் கட்டணம் தளர்த்தப்படும்.

அரசாங்கம் மோதல் தவிர்ப்பில் இறங்கியதற்கு மற்றொரு காரணமும் உண்டு. அதாவது இராணுவத்தின் செலவீனஙக்ளில் ஒரு பகுதியை மீதப் படுத்தி தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு தற்காலிக நிவாரணம் காணும் நோக்கமாகும். அதாவது இராணுவச் செலவினங்கள் இருவகை ஒன்று பராமரிப்பு செலவீனம். மற்றது இராணுவ நடவடிக்கைகட்கான செலவீனம். இதில் இராணுவ நடவடிக்கைக்கான செலவினமான சுமார் 50%ஐ மீதப்படுத்த இந்த யுத்த நிறுத்தம் உதவிகரமாகவுள்ளது.

இந்நிலையில்தான் இலங்கை அரசாங்கம் யுத்த நிறுத்தம், பேச்சுவார்த்தை பொருளாதாரத் தடை நீக்கம், போக்குவரத்துத் தடைத் தளர்வு, மனிதாபிமான நடவடிக்கைகள் என்ற விடயங்களில் இறங்கியுள்ளது.

எனவே இவையாவும் மார்ச் மாதம் நிறைவேற்றப் படவேண்டிய வரவு செலவுத் திட்டத்தைப் பக்குவமாக, வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கும் அதன் பொருட்டு சர்வதேச நிதியுதவிகளையும் நல்லபிப்பிராயத்தையும் ஈட்டிக்கொள்வதற்கும் செய்யப்படும் தந்திரோபாய நடவடிக்கைகளா அல்லது சமாதானத்தை ஈட்டுவதை மட்டுமே நோக்கமாகக் கொண்ட இதய சுத்தியான நடவடிக்கைகளா என்ற சந்தேகம் இருக்கவே செய்கிறது.

அதற்காக இந்த நல்லெண்ண முயற்சிகளை நிராகரிக்கா விட்டாலும் அவை நல்லெண்ணத்துக்கு அப்பால் சென்று நிரந்தர சமாதானத்துக்கு வழிசெய்வதை உறுதிப்படுத்த வேண்டியதாக உள்ளது.

இந்நிலையில்தான் நாம் இந்த நல்லெண்ண முயற்சிகளுக்கு அப்பால் நிகழ்பவற்றையும் கவனத்திலெடுத்து ஆராய வேண்டியவர்களாக உள்ளோம்.

இவ் அரசாங்கத்தின் சில முக்கிய பிரமுகர்கள் அண்மையில் தெரிவித்த கருத்துக்கள் எடுத்து நோக்கப் பட வேண்டியவையாகவுள்ளன.

வெளிநாட்டமைச்சர் பதவியைப் பொறுப்பேற்ற ஆரம்பத்திலேயே அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ, பேச்சு வார்த்தைக்கு முன்னர் புலிகள் ஆயுதங்களைக் கைவிட வேண்டுமென்ற ஒரு கருத்தை வெளிப்படுத்தி, பின்னர் அதனைத் தான் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தை நடத்தப்படவேண்டுமெனக் கூறியதாகத் திருத்தம் செய்து கொண்டார். .

நீதியமைச்சர் சொக்ஸி, ஒற்றையாட்சி முறைக்குள்தான் தீர்வு ஈட்டப்பட முடியுமெனத் தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பமைச்சர் திலக் மாரப்பன, புலிப்பயங்கரவாதத்தை இந்தத் தீவிலிருந்து அடியோடு அகற்றுவதற்குத் தேவையான இராணுவ மற்றும் இதர மார்க்கங்களிலான உதவிகளைத் தாம் தமது இராணுவத்திற்கு வழங்கத் தயாராக உள்ளதெனக் கூறியுள்ளார்.

இதேவேளை இடை நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இராணுவத்திற்கு பத்தாயிரம் பேரைத் திரட்டும் திட்டத்தை அரசாங்கம் மறுபடி அனுமதித்துள்ளது.

தற்போது அரசாங்கம் மேற்கொண்டுள்ள மோதல் தவிர்ப்பும்கூட பலகட்டுப்பாடுகளுடன் கூடியதாகவே உள்ளது.

புலிகள் ஆயுதங்களுடன் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்கு வரலாகாது, ஆயுதக் கப்பல்கள் தருவிக்கப்பட்டால் தாக்கப்படும், குறித்த எல்லைகளுக்குள் புலிகள் ஊடுருவினால் தாக்கப்படுவர் போன்ற எச்சரிக்கைகளை இராணுவம் விடுத்துள்ளது.

அத்தோடு யுத்த நிறுத்தத்தையடுத்து கிழக்கு மாகாணத்தில் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் வந்த புலிகள் கைது செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலைமையில் எந்நேரமும் முறுகல் தோன்றும் வாய்ப்பு இருந்து கொண்டேயிருக்கிறது.

இதேவேளை பிரதமரின் முதல் இந்திய விஜயமும், அங்கு இந்திய அனுசரணையைக் கோரியதும், மன்னாருக்கும் தனுஷ்கோடிக்குமிடையில் பாலமமைக்கும் விருப்பத்தைத் தெரிவித்து உடன்பாடு செய்து கொண்டதும் புலிகள் தரப்பில் சந்தேகங்களை தோற்றுவிக்கும் விடயமாகவுள்ளது.

பேச்சுவார்த்தை தோல்வியுறும் பட்சத்தில் மறுபடி யுத்தம் தோன்றி இலங்கை அரசாங்கம் ஒரு இக்கட்டான நிலைக்கு உள்ளானால் இந்தியா உதவிக்கரம் நீட்டுவதற்காக மேற்கொள்ளப்பட்ட ஒரு முன்னேற்பாடா என்று சந்தேகிக்க வைத்துள்ளது.

இதேவேளை பேச்சுவார்த்தையின் மனிதாபிமான நடவடிக்கைகள் தொடர்பாக மட்டுமே இதுவரை ஈடுபாடு செலுத்தப்பட்டுள்ளதேயன்றி அரசியல் தீர்வு குறித்து எந்தவொரு எண்ணக்கருவும் அரசாங்கத்திடமிருந்து வெளிவரவில்லை.

அத்துடன் இப் பேச்சுவார்த்தைக்குப் பிரதானமான முன்னிபந்தனையாக புலிகள் முன்வைக்கும் கோரிக்கையான புலிகள் மீதான தடையை நீக்குவது குறித்து அரசாங்கத் தரப்பில் சாதகமான பதில் எதுவும் தெரிவிக்கப் படவில்லை.

மாறாக பேச்சுவார்த்தையை நடத்துவற்கு புலிகள் மீதான தடை நீக்கப்பட வேண்டிய அவசியமில்லை, பேச்சுவார்த்தையில் தீர்வெதையும் எய்தி அதனை அமுலாக்கும் கட்டத்தில்தான் புலிகள் மீதான தடை நீக்கவேண்டிய அவசியமான நிலை தோன்றலாமென அரசாங்கத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் புலிகளோ தாம் பயங்கரவாதிகள் என்ற முத்திரையுடன் தடை செய்யப்பட்ட ஒரு இயக்கமாக பேச்சுவார்த்தை மேசைக்கு வரத் தயாரில்லையென்றே தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார்கள்-அண்மையில் புலிகளின் ஆலோசகர் லண்டனில் ஆற்றிய உரையிலும் இதனை மீள வலியுறுத்தியுள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவோ, சர்ச்சைகளைத் தோற்றுவிக்கும் விவகாரஙகளில்தான் முன்னரே அபிப்பிராயங்கள் தெரிவிக்கப்போவதில்லையெனக் கூறிவருகிறார். அப்படியானால், இப் புலிகள் மீதான தடையை நீக்குவது குறித்தும், இலங்கை அரசாங்கத்தால் முன்வைக்கப்படக்கூடிய அரசியல் தீர்வின் அளவு மற்றும் தன்மைகள் குறித்தும் பிரச்சனைகள் தோன்றக்கூடிய வாய்ப்பை அவர் முன்னுணர்ந்துள்ளார்.

எவ்வாறாயினும் சர்வதேச அபிப்பிராயத்தை தன்பால் வைத்துக்கொள்ளும் வகையில் அவதானமான அணுகுமுறையை அவர் மேற்கொண்டு வருகிறார்.

சமாதானப் பேச்சுவார்த்தைகளை மார்ச் சமாதமளவில் நிகழ்த்தவே அவர் திட்டமிட்டுள்ளார்.

ஏனெனில் மார்ச் மாதம் வரவு செலவுத் திட்டம் நிறைவேற்றப் படும் வரை எந்த சர்ச்சைக்குரிய விடயத்தையும் முன்னெடுக்காதிருக்கவே இவ்வாறு திட்டமிட்டுச் செயலாற்றுகிறார்.

வரவுசெலவுத் திட்டம் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டபின் ரணிலின் தரப்பில் சுயாதீனமாகச் செயற்படக்கூடிய நிலைமையும் வலுவும் ஏற்பட்டுவிடும்.

இதனை உணர்ந்து கொண்ட விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தைகளை விரைவில் நடத்த வேண்டுமென வலியுறுத்தி வருகின்றனர்.

ஆயினும் நோர்வே நாட்டின் அனுசரணையுடன் பேச்சுவார்த்தைக்கான ஏற்பாடுகள், முதற்சுற்றுப் பேச்சுக்கள் என்ற படிமுறைகளை மேற்கொண்டு செல்லும்போது தவிர்க்கவியலாமல் ரணிலின் திட்டப்படி மார்ச் மாத்தின் பின்னால்தான் பேச்சுவார்த்தைகள் சாத்தியமாகக்கூடியதாக அமையும்.

இதனை மாற்றுவதற்கு புலிகள் அழுத்தம் செலுத்துவார்களானால் அது அவர்களைப் பிடிவாதக் காரர்களாக சர்வதேச சமுகத்துக்கு வெளிக்காட்டும்.

இதனைக் கருதியே நோர்வே நாட்டை அரசாங்கம் இவ்வேளையில் சாதுரியமாக களத்தில் இறக்கியுள்ளது.

இதேவேளை புலிகள் தரப்பிலும் யுத்தத்துக்கான தயாரிப்புகள் எந்த விதத்திலும் கைவிடப்படவில்லை. வன்னியில் தொடர்ந்தும் ஆட்சேர்ப்பும் பயிற்சிகளும் முனைப்புடன் நிகழ்ந்தபடியே உள்ளது.

கிழக்கு மாகாணத்திலும் ஆட்சேர்ப்புகள் நிகழ்த்தப்பட்டவண்ணமுள்ளன.

இதேவேளை தேர்தலுக்க முன்னரே புலிகளின் ஐந்துக்கு மேற்பட்ட ஆயுதக் கப்பல்கள் வந்து சென்றுள்ளன. அவற்றின் மூலம் உயர் தொழில்நுட்ப ஆயுதங்களைப் புலிகள் பெற்றுள்ளார்கள்.

கடல் ஏவுகணைகளான ட்றொப்பிடோக்கள் நீரின் கீழ் செல்லும் ஸ்கூட்டர்கள், சுழியோடி சாதனங்கள் கடல் கண்ணிவெடிகள் என்பவை இம்முறையில் பெறப்பட்ட புதிய அம்சங்களாகும்.

இவை ஒரு கடுமையான கடல் மறிப்புத் தாக்குதலுக்கான தயாரிப்புகளைப் புலப்படுத்துகின்றன.

புலிகளின் தலைவர் பிரபாகரனதும், ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தினதும் உரைகளில் மீண்டும் மீண்டும் வலியுறுத்தப்பட்டு வரும் ஒரு கூற்று தாம் எப்படியும் மீண்டும் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியே தீருவோம் என்பதே.

இக்கூற்றுடன் நோக்குகையில் இத் தயாரிப்புகள் யாழ்ப்பாணத்துக்கான கடல் முற்றுகைக்கான தயாரிப்புகளாகவே புலப்படுகின்றன.

எனவே ஒருவகையில் யுத்த நிறுத்தம் பேச்சுவார்த்தையின் சூழ்நிலைகளைப் பயன்படுத்தி அமைதியான வழியில் யாழ்ப்பாணத்துக்குப் பிரவேசிக்க அவர்கள் முனைவர். அதை அரசாங்கம் தனது நுட்பங்களால் தடுக்குமானால் யுத்தம் புரிந்தாவது யாழ்ப்பாணத்தை மீட்கவே அவர்கள் முனைவர்.

இப் பேச்சுவார்த்தைகள் வெற்றி பெறுமா என்பதற்கப்பால் புலிகள் இதில் எதிர்பார்க்கும் இரண்டு முக்கியமான விடயங்களில் ஒன்று யாழ்ப்பாணத்துக்கு தாம் திரும்பச் செல்வது, மற்றயது தம்மீதான தடையை நீக்கச் செய்வது.

இவற்றை இப்பேச்சுவார்த்தைகளால் எவ்விதத்திலும் எய்த முடியாவிட்டால் புலிகள் யுத்தத்திற்குத் தள்ளப் படலாம்.


இதேவேளை பேச்சுவார்த்தைகளில் எவ்வித அரசியல் தீர்வை அரசாங்கம் வழங்க முன்வரப்போகிறது என்பது குறித்து ஒரு வடிவம் தெரியாதது போலவே எவ்வித அரசியல் தீர்வை புலிகள் கோருகிறார்கள் என்பது குறித்தும் ஒரு வடிவம் தெரியப்படுத்தப் படவில்லை.

உண்மையான பேச்சுவார்த்தையென்பது வரையறுத்த அரசியல் தீர்வு குறித்த பேச்சுவார்த்தையாகவே அமையும்.

ஆனால் அதுகுறித்து எவ்வித தெளிவுமின்றி பக்க நடவடிக்கைகளையே பிரமாண்டமாகக் காட்டப்பட்டு வருகிறது. எனவே இன்று தோன்றியிருக்கும் புதிய சூழ்நிலை சமாதானத்துக்கான கருவூலமா அல்லது மற்றொரு யுத்தத்துக்கான ஒய்வா என்ற கேள்வி ஆய்வாளர்கள் மத்தயில் இருந்து கொண்டே இருக்கிறது.

# விளம்பரப் பகுதி

## 1வது பிறந்தநாள் வாழ்த்து



**முகம்மட் பரீட் சீமா | 05.01.2002**

நிந்தவூர்-15ஐச் சேர்ந்த முகம்மட் பரீட்- சித்தி பரீதா தம்பதியினரின் தவப் புதல்வி செல்வி சீமா தனது முதலாவது பிறந்த தினத்தை 05.01.2002 சனிக்கிழமை அன்று சவூதியில் அமீரா சவ்த் பின் முகம்மது சீமாவின் இல்லத்தில் வெகு விமர்சையாகக் கொண்டாடினார். இவரை அன்பு மிகு வாப்பா, உம்மா, அமீரா சீமா, நிந்தவூர் வாப்பம்மா, அட்டாளைச் சேனை உம்மம்மா, மாமிமார்களான றசீனா, சல்மா, ஹபீபா, ஜெஸ்மி, ஜனூபா, மாமார்களான இப்றாகீம், புஹாரி, இமாம் சாச்சாமார்களான ஹம்சார், ஜ.:.பர், அஸ்ரப் அலி (சவூதி) கமால், சவூதியில் வசிக்கும் சாச்சி மார்களான நூர்ஜாஹான், ஆயிஷா, அஸ்மா, ஹயறூன், நானாமார்களான முஜீப், இக்பால், ஜெசூர் சூடான் நாட்டை சேர்ந்தவர்களான றூக்கியா, செயினம், ஐசேம், யூசுப் மற்றும் சாய்ந்தமருது பெரியப்பா, ராத்தா, நானா, அட்டாளைச் சேனை முனாப் பெரியப்பா, ராத்தாமார்கள், நானாமார்கள், மாமா, மாமிமார்கள், மச்சான்மார்கள், மச்சிமார்கள், உற்றார் உறவினர்கள் சீமாவை பல்கலைகளும் கற்று பல்லாண்டு நீடூ ழி வாழ்கவென அல்லாஹ்வை பிரார்த்திக்கின்றனர்.

## 1வது பிறந்தநாள் வாழ்த்து



12.01.2002

சிவனேஸ்வரன் - மிதுஷா (மிது)

சிவனேஸ்வரன்-தயாநிதி தம்பதிகளின் செல்வப் புதல்வி மீது தனது முதலாவது பிறந்த தினத்தை 12.01.2002 அன்று நீர்வேலி தெற்கில் உள்ள "ரோஜா வனம்" என்னும் தனதில்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகிறார்.

அன்பு மிதுக் குட்டியை அப்பா, அம்மா ஆசை அண்ணா யுனோஜ் புத்தூர் மேற்கு அப்பப்பா, அப்பம்மா மாவிட்டபுரம் அம்மப்பா, அம்மம்மா, மணியம் பெரியப்பா குடும்பம் (புத்தூர்), கோபால் மாமா குடும்பம் (புத்தூர்) ராசு பெரியப்பா குடும்பம் (லண்டன்), வேலாயுத மாமா குடும்பம் (மட்டுவில்), கேதீஸ் மாமா குடும்பம் (லண்டன்) விஜி மாமா (டோ[illegible]), மாவிட்டபுரம் பூட்டி, சிலோ அன்ரி, அத்தப்பா, அத்தம்மா, தர்சன் சித்தப்பா, அண்ணாமார், அக்காமார், மச்சான்மார், மச்சாள்மார் மற்றும் டோகாவில் உள்ள மாமாமார், சித்தப்பாமார் கொழும்பிலுள்ள பெரிய அண்ணா, தீசன் அத்தான் கொழும்பு, உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் நீர்வை அரசகேசரி விநாயகர் அருள் கொண்டு பல்கலைகளும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

*தகவல்: சிவா (டோகா) அப்பா.*


### மனோதத்துவ வைத்தியம்

GENARAL PSYCHO THERAPHY

அடிமனதில் பதிந்துள்ள தாழ்வு மனப்பான்மையை நீக்கி உங்களை நீங்களே வெற்றி கொள்ள நாடுங்கள் பிரபல மனோதத்துவ நிபுணர்

Dr.P. ஆறுமுகம் அவர்களை.

**கொழும்பில் ஜன 20-27 வரை**

DR.P.ARUMUGAM (S.A.M.P) REG. 9492

New Ahmed Tourist Inn, Bang Bang Building, Entrance Bankshall Street, No. 10, Reclamation Road, Colombo 11. T.P. 074-715547, 074-715546 செல்டெல் - 072 664867.

கண்டியிலும் சந்திக்கலாம்

**கண்டியில் பெப்ரவரி 03,04 திகதிகளில்**

ஆசிரி மெடிக்கல் ஹோல் 45, பேராதெனிய ரோட், கண்டி T.P.074-474156

**கல்முனையில் ஜனவரி 05, 06 திகதிகள்**

T.M.M. பாமசி கல்முனை T.P. 067 29329

**வவுனியாவில் அறிவிக்கப்படும்**

(தயவு செய்து பதிவு செய்து கொள்ளவும்)

VANNI INN 2ம் குறுக்குத் தெரு, ஞான வைரவர் கோவில் ஒழுங்கை, வவுனியா. T.P. 024 22074, 21406.

கடிதத்தொடர்பு : RESIDANT T.P 065 24019

DR.P.ARUMUGAM NO.51/5, KOOLAVADY ROAD, BATTICALOA. SRI LANKA.



### சிங்கையில் இலங்கையர்களுக்கான மங்களகரமான திருமண சேவைகள்

அகில உலகில் வாழும் இலங்கைத் தமிழர்களுக்கான திருமண சேவை சிறந்த முறையிலும் சமயமுறை படியிலும் ஒழுங்கு செய்து கொடுக்கப் படும். அதோடு பதிவு திருமணம் தங்கும் இட வசதி, போக்குவரத்து வசதி குறித்த நேரத்தில் சிறந்த முறையிலும், நிறைவான சேவைக்கும் நீங்கள் விரும்புவதை பெறுவதற்கும் எங்களை அழைக்கவும்,

**பணிப் பெண்கள் சேவை**

வீட்டு பணிப் பெண்களுக்கு உடனடி வேலை வாய்ப்புகள் உங்கள் முழு விபரங்களுடன் தொடர்பு கொள்ளவும்

**சிங்கப்பூர் விலாசம்:-**

R.பரமசிவம்- S.மோகனதாஸ்
LAVENDER VIDEO CENTER (PVT)LTD
BLK-808 FRENCH ROAD
# 01-159 SINGAPORE 200808
TELE PHONE 2971367-3720592 (H.P)92714294
E-MAIL: VS BOY @ HOT MAIL.COM

இலங்கை தொடர்புக்கு:- ஏ.ரமேஷ் 01-259344



### மலையாள மாந்திரீகம்





மலையாள மாந்திரீகத்தை இலங்கையில் திட்டவட்டமாகக் கற்றவர் டாக்டர் பி.கே.சாமி அவர்களே. இதை ஒட்டி எத்தனை, எத்தனையோ விருதுகள் பெற்றுள்ளார். இச்சேவையில் கெடுதலுக்கு இடமில்லை. நன்மைக்கு மட்டுமே இடமுண்டு எண்ணியவன் - எண்ணியவளைத் திருமணம் முடிப்பதற்குச் சிற்சில தடைகளா, திருமணமே நடக்காதா என்ற ஏக்கமா. காதல் தோல்வியாகிவிட்டதா, கணவன்-மனைவி ஒற்றுமை குறைகிறதா, கையில் பணம் தங்கவில்லையா, பணவருவாய் குறைவா, கொடுத்த கடன் திரும்பி வரவேண்டுமா, குடும்ப வாழ்க்கை இனியவையாக அமையவேண்டுமா, லக்சுமி கடாட்சம் பெறவேண்டுமா, வெளிநாட்டுப் பயணத்தில் தங்கு தடை ஏற்படுகின்றதா, தான் பெற்றபிள்ளை தன் பேச்சைக் கேட்கவில்லையா, பெருவாழ்வு-குபேர வாழ்வு பெறவேண்டுமா, குழந்தைப்பேறு கிட்டவில்லை எனக் கவலையா, கல்வியில் சித்தி பெறவேண்டுமா, கடந்த 33 வருடமாக ஸ்ரீ துர்க்கையின் அருட் கடாட்சத்தால் 100க்கு 100% வெற்றி பெற்றவர்கள் எமது பதிவேடு மூலம் தெரிந்து கொள்ளலாம், வெளிநாட்டவர்களுக்கு கடல் கடந்து செயல்பட கூடிய வண்ணம் அதிவிசேட மாந்திரீக உச்சாட்ட பிரிவு மூலம் உடனுக்குடன் அனுப்புவதால் வெற்றியும் உடனுக்குடன் கிடைக்கிறது. இது ஒரு பிரமாண்டமான அங்கீகாரம் பெற்றதும் வரையறுக்கப்பட்ட நிறுவனத்தில் மாந்திரீகப் பிரிவாக அதி உன்னத சேவையின் நிமித்தம் வெற்றி கிட்டுவது மிக மிகச் சுலபம், மாந்திரீக வேலைகள் வெற்றிக்கு அச்சொட்டான திட்டவட்டமான சரிவரும் திகதியும் கொடுப்பது என்றால் அது எமது திருவருளே, அதுமட்டுமல்ல காண்ட அடிப்படையில் ஜாதகங் களையும் கைரேகைகளையும் தெட்டத் தெளிவாக எழுதி அறிந்து கொள்ளலாம். இன்னும், அனைத்து உலக நாட்டில் வசிக்கும் வெளிநாட்டவர்கள் பிரச்சனைகளை உடனுக்குடன் மாந்திரீக சக்தியால் தீர்வு கண்டமையால், எண்ணற்ற வாடிக்கை யாளர்களின் நற்சாட்சிப் பத்திரங்களை எமது நிருவாக பதிவேட்டில் காணலாம்.

**வெளிநாட்டவர்களுக்கென அதி தொழிநுட்பம் வாய்ந்த 24 மணித்தியால தொலைபேசிச் சேவை உண்டு.**

T.P: 00941 342463 , 00941 470615, **தேவைகளுக்கு:-**

**39 வருட மாந்திரீக துறையில் நிலையான சேவை புரியும் உலக மாந்திரீக சக்கரவர்த்தி கௌரவ பேராசிரியர் கருணாகர பூசணம் சொல்லின் செல்வன் டாக்டர் பி.கே. சாமி (J.D.G.A.N)JP**

**உலக மாந்திரீகச் சக்கரவர்த்தி**
Dr.P.K.Saamy J.D.G.A. NL JP
Hon. Prof. (IUMA)
Sri Durgaadevi Manthirika Uchchada Peedam.

**கொழும்பில்**
No.162, Kotahena Street, Mayfield Road, Colombo 13, Sri Lanka.

**நுவரெலியாவில்**
33, Daily Fair Complex, Kandy Road, Nuwara-Eliya. 052-22508, 052-35097.

வெளிநாட்டார் தொடர்பு கொள்ளவேண்டிய தொ.பேசி
TEL : 00941 431137
FAX : 00941 344831

உள்நாட்டார்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்
01-342463, 431137,470615- Fax: 344831
E-mail:drpksamy@sltnet.lk
www.imexpolanka. com/drpksami.


### தினமுரசு சந்தா விபரம்

| நாடுகள் | ஒரு வருடம் | 6 மாதம் | 3 மாதம் |
|---|---|---|---|
| ஐரோப்பிய நாடுகள் | ரூ. 2600 | ரூ.1350 | ரூ.700 |
| அமெரிக்கா, கனடா | ரூ. 3100 | ரூ.1550 | ரூ.800 |
| மத்திய கிழக்கு நாடுகள் | ரூ. 2075 | ரூ.1050 | ரூ.600 |
| உள்ளூர் | ரூ. 740 | ரூ.375 | ரூ.200 |

சந்தா செலுத்தி தபாலில் தினமுரசு வாரமலரை பெறவிரும்புவோர் D.D. Enterprises எனும் பெயரில் எழுதப்பட்ட காசோலைகள் அல்லது வங்கிக் கட்டளைகளை முகாமையாளர் தினமுரசு 16A, Nelson Place, Wellawatta, Colombo-06. Srilanka என்ற முகவரிக்கு அனுப்பி பெற்றுக் கொள்ளலாம். இந்த முகவரிக்கு வந்து நேரில் பணம் செலுத்தவும் முடியும்.

உள்ளூரில் சந்தா பெற விரும்புவோர் சந்தாத் தொகையை காசுக் கட்டளையாக வெள்ளவத்தை தபாற்கந்தோரில் மாற்றும் வண்ணம் 'மனேஜர் தினமுரசு' என்னும் பெயருக்கு கட்டளையிட்டு பதிவுத்தபாலில் Thinamurasu Varamalar 16A, Nelson Place, Wellawatta, Colombo-06. என்ற முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.


### சிங்கப்பூரில் திருமணம்

சிங்கப்பூரில் திருமணப்பதிவு செய்து திருமணம் செய்ய வருபவர்களுக்கு சகல வசதியும் தளபாட சாமான்களோடு கூடிய தங்குமிட வசதியும், இலங்கை முறைப்படி கல்யாண ஏற்பாடும் அவர் அவர்கள் வசதிகேற்ப செய்து தரப்படும். இலவச விமானநிலைய வாகன வசதி, இலவச காலை உணவு, சலுகை கட்டணத்தில் வாடகை கார்.

மேலதிக விபரத்திற்கு:-

**LINGAM WEDDING SERVICE**

0, Anson Road # 15-14 International Plaza, Singapore. 079903
Tel: Appu, கை தொலைபேசி எண்:
அப்பு, 00,65 97514941 Tel. Fax:- 0065 2857494.
E.mail: Sakun @Singnet Com.Sg



|| श्रीविष्णवे परमात्मने नमः ||

சிவா மட்டக்களப்பு மஹா மாந்திரீக மருத்துவம்

INTERNATIONAL TRADITIONAL & HOMOEOPATHY MEDICAL & RESEARCH & SERVICE

தூரதேச மந்திர உட்சாடன ஆஹர்ஷ்ண பிராண தியான யோக ஆன்மீக அலைகள் (Cosmic Vibration) மருத்துவம்




MY GURU



முனிவர்களின் குருகுல வைத்திய பரம்பரை
(டாக்டர் "மந்திரயோகி")
YOGI. DR. T. MYALVAGANAM
R.H.M.D-D Acu-(இலங்கை) P.I.S.M (இந்தியா)
REGISTERED BY MINISTRY OF HEALTH SLMCNO.061

விதியினால், அல்லது சதியினால் பிரிந்த காதலர்கள், கணவன்-மனைவி குடும்பங்கள் எங்கிருந்தாலும் ஒன்று சேர, வெறுப்பவர்கள் வேண்டியவர்கள் வந்து உறவாக உதவிபெற, தகாத ஆண் பெண் உறவை போதைவஸ்தை மறப்பிக்க, தியசக்திகளினால் ஏற்பட்ட தீராத உடல் நோய், மன நோய், பிரச்சனைகளைத் தீர்த்து. எத்துன்பங்களும் அணு காமல் உடல், வீடு வளவு, வியாபார நிலையங்கள், வாகனங்களை காவல் செய்ய காதல் திருமணம் பெற்றோர்களின் சம்மதத்துடன் நிறைவேற கல்வி, தொழில், வியாபாரம், வெளிநாட்டுப் பிரயாணம், வேறு காரியத்தடைகள் ஏற்படாமல் நினைத்த செய்கின்ற போகின்ற காரியங்கள் வெற்றிபெற, வேறு நன்மையான காரியங்களுக்கு தீங்கில்லாத தெய்வீக மஹா மாந்திரீக வசிய வைத்தியங்கள் செய்து கொள்ள வரமுடியாதவர்கள்கடல்கடந்த வெளிநாட்டவர்கள் பதிவுத்தபால், பகஸ், தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு மனோ தத்துவ மாந்திரீக ஆன்மீக மருத்துவ அறிவுரைகளோடு எல்லாமதத்தினர்களுக்குமேற்ற இறைபக்தியோடும் யோகசக்தியோடும் செய்யப்படும். புனித பரிகார பொருட்களை துரித விஷேட தபாலில் பெற்றும் தூரதேச ஆகாய ஆஹர்ஷ்ண மந்திர உட்சாடன பிரான தியான யோக ஆன்மீக அலைகள் மருத்துவ முறைப்படியும் உடன் நிறைவேற்றிக் கொள்கிறார்கள்

GURUSACKTHY CENTER
(INDIAN CLINIC)
KALLADY - BATTICALOA.(P.O.)
(SRI LANKA)

குரு சக்தி நிலையம்
(இந்தியன் வைத்தியசாலை)
கல்லடி மட்டக்களப்பு. P.O
(ஸ்ரீலங்கா)

MEDITATION YOGA POWER - INTERNATIONAL TRADITIONAL HOMOEOPATHY MEDICAL RESEARCH & SERVICE

ரெலிபோன், பக்ஸ்
உள்நாட்டவர்களுக்கு 065-24872காலை 8 இருந்து இரவு 9 மணி வரை
வெளிநாட்டவர்களுக்கு 00946524872 காலை 8 லிருந்து இரவு 11 மணி வரை
கடல் கடந்த வெளிநாட்டவர்களுக்கான விஷேட சேவை.
REGISTERD BY MINISTRY OF HINDU RELIGIOUS & CULTURAL AFFAIRS
கொழும்பில் மாதத்தில் இருதடவைகள் நேரில் ஆலோசனைகள் பெறலாம்.


## 3வது, 1வது பிறந்த நாள் வாழ்த்து



**செல்வன் மதூஷன் 30.12.2001**



**அனிகா 12.01.2002**

திருகோணமலை, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மகேந்திரன்-சதாநாயகி தம்பதியரின் செல்வப் புதல்வன் **மதூஷன் 30.12.2001** அன்று தனது மூன்றாவது பிறந்த தினத்தையும், செல்வப் **புதல்வி அனிகா 12.01.2002** அன்று தனது முதலாவது பிறந்ததினத்தையும் சுவிஸில் உள்ள தமது இல்லத்தில் விமரிசையாகக் கொண்டாடுகிறார்கள்.

இவர்களை அன்பு அப்பா, ஆசை அம்மா, அப்பம்மா, அம்மம்மா, அம்மப்பா, கொழும்பு பெரியப்பா-பெரியம்மா, அண்ணா, அக்கா, சுவிஸ் பெரியப்பா-பெரியம்மா அண்ணாமார், அக்காமார் ஜேர்மன் மாமா-மாமி மற்றும் பெரியப்பாமார்-பெரியம்மாமார், சித்தப்பாமார்-சித்திமார், மாமாமார், மாமிமார், அண்ணாமார், அக்காமார், மச்சான்மார், மச்சாள்மார், தம்பிமார், தங்கைமார், உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் குழந்தை இயேசுவின் அருள் பெற்று பல்லாண்டு நலமுடன் வாழ வாழ்த்துகிறார்கள்.

**தகவல்: பேரின்பநாயகம் (கொழும்பு-13.)**

**அலசுவது-இராஜதந்திரி**

# நிர்ப்பந்திக்கப்பட்ட புதிய கூட்டு முயற்சி!

தமிழ் மக்களைப் பொறுத்தவரை தை மாதம் எப்போதுமே புத்துணர்வைக் கொடுத்து, நம்பிக்கை யூட்டும் ஒரு மாதமாகவே இருக்கின்றது.

இதன்காரணமாகவே 'தை பிறந்தால் வழிபிறக்கும்' என்ற முதுமொழியும் வழக்கிலிருக்கின்றது.

இலங்கை இனப்பிரச்சனை கடந்த இரு தசாப்த காலமாக மிக மோசமான கட்டத்தையே எட்டியுள்ளது. இவ்விரு தசாப்த காலத்தில் எத்தனையோ தைமாதங்கள் பிறந்து சென்றன. ஆனால் தமிழ் மக்களின் பிரச்சனைகளுக்கு ஒரு வழி மட்டும் பிறக்காமலேயே இருந்து வந்துள்ளது.

இத்தடவை உதயமாகும் தைமாதத்தைக் கூட தமது இன்னல்களின் தீர்வு குறித்த நம்பிக்கைகளுடனேயே தமிழ் மக்கள் வரவேற்கின்றனர்.

ஆனால் எதிபார்க்கும் நன்மைகள் கிடைக்குமா? அல்லது மீண்டும் பழைய பல்லவியே தொடருமா? என்பதற்கு காலந்தான் பதில்கூற வேண்டும்.

புதிய பிதமர் ரணில் விக்கிரமசிங்க, தமிழீழ விடுதலைப் புலிகள்



இயக்கத்தலைவர் வே. பிரபாகரன் ஆகியோர் உத்தியோக பூர்வமாகக் கேட்டுக்கொண்டதற்கிணங்க நோர்வே தனது பூர்வாங்க மத்தியஸ்தப் பணிகளை ஆரம்பித்துள்ளது.

பிரிட்டனுக்கு நோர்வேயின் பிரதி வெளிநாட்டமைச்சர் தலைமையிலான ஐவர் அடங்கி குழு பயணஞ் செய்து தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க அரசியல் ஆலோகசர் அன்டன் பாலசிங்கத்தைச் சந்தித்துப்பேசியுள்ளது.

இப்பேச்சுவார்த்தை புதிய சமரச முயற்சிகள் குறித்த ஒரு பூர்வாங்க நடவடிக்கையாகவே அமைந்துள்ளது.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் பாராளுமன்ற ஆட்சியின் கீழ் நோர்வேயின் சமரச முயற்சிகள் ஆரம்பமாகின. நோர்வே சார்பில் திரு. நெட் வெல்லபெக்கும், அவரைத் தொடர்ந்து திரு. எரிக்சொல்ஹெய்மும் இலங்கை இனப்பிரக்கனைத் தீர்வு விடயத்தில் மத்தியஸ்த்தம் வழங்க முன்வந்திருந்தனர்.

ஆனால் சந்தேகமும், தப்பெண்ணங்களும் வலுவடைந்து, இராணுவ அணுகுமுறைகளே அதிகரித்தனவேயன்றி, அரசியல் தீர்வு முயற்சிகள் உரிய உத்வேகத்தைப் பெறவில்லை.

தமிழீழ விடுதலைப் புலிகள் கூட யுத்த நிறுத்தத்தை அறிவித்து சமரச நடவடிக்கைளில் தமக்கிருக்கும் விருப்பத்தைப் புலப்படுத்தியிருந்தனர். ஆனால் பொதுஜன ஐக்கிய முன்னணியின் பாராளுமன்ற ஆட்சி, எல்.ரி.ரி.ஈ. தரப்பின் யுத்த நிறுத்தத்தை உதாசீனம் செய்ததோடு அரசியல் பேச்சுக்களுக்கான வாய்ப்புக்களைத் தட்டிக் கழித்தே வந்தது.

ஆனால் தற்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் இனப்பிரச்சனைத் தீர்வுக்கே முன்னுரிமை அளித்துள்ளது. அத்துடன் தமிழீழ விடுதலைப் புலிகளுடனான நல்லெண்ணத்தை வளர்க்கும் விதத்தில் வடக்கு-கிழக்கின் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளுக்கு அத்தியாவசியப் பொருட்களை அனுப்பிவைக்கவும் இனங்கியுள்ளது.

இருப்பினும் இந்த அத்தியாவசியப் பொருட்களை அரசின் கட்டுப்பாடற்ற பகுதிகளுக்கு அனுப்பிவைப்பது தொடர்பாகவும் போதியளவு பரிந்துணர்வு ஏற்படாதிருப்பதையே அவதானிக்க முடிகின்றது.

வடக்கு-கிழக்குப் பிரதேசங்கள் கடந்த இருபது வருடங்களாக பெரிதும் பாதிக்கப்பட்ட நிலையிலேயே இருந்து வருகின்றன.

இவ் வடக்கு-கிழக்குப் பிரதேசங்களில் அரசின் கட்டுப்பாடற்ற பகுதிகள் மிகவும் பின்தள்ளப்பட்டவையாகவும், அங்கு வாழ்ந்து வருகின்ற மக்கள் அரசின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் இருப்போரது வாழ்க்கைத் தரத்தைக் காட்டிலும் மிக மோசமான நிலையில் இருப்பதையே காணமுடிகின்றது.

உணவுப்பொருட்கள், மருந்துவகைகள், எரிபோருள், கட்டட நிர்மாணப் பொருட்கள் என்பவை அரசின் கட்டுப்பாடற்ற பகுதிகளுக்குக் கொண்டு செல்லப்படுவதற்கான தடை மிகத்தீவிரமாகவே முன்பு அமுல்படுத்தப்பட்டிருந்தது.

கடந்தகால யுத்தம் காரணமாக போக்குவரத்து, தொழில்முயற்சிகள், கல்வி போனற் அனைத்துமே வடக்கு-கிழக்குப் பகுதிகளில் பலத்த பாதிப்பை எதிர்நோக்கியுள்ளன.

பல்லாயிரக்கணக்கான மக்கள் ஒழுங்கான வதிவிட வசதிகளின்றி அகதிமுகாம்களில் நிறையவே கஷ்ட, நஷ்டங்களை அனுபவித்தவர்களாக இருந்து வருகின்றனர்.

பாதிப்புற்ற மக்களின் வாழ்க்கைத் தரத்தை மீளவும் கட்டி எழுப்புவதற்கு நிறையவே புனர்வாழ்வுத் திட்டங்களை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

இப் புனர்வாழ்வுப் பணிகளை முன்னெடுப்பதற்கு அரசின் கட்டுப்பாடற்ற பகுதிகளுக்கு அனுபிவைக்கப்படும் பொருட்கள் தொடர்பாக நல்ல புரிந்துணர்வு ஏற்படுவது இன்றியமையாததாகின்றது.

வடக்கு-கிழக்குப் பிரச்சனை என்பது வெறுமனே அரசியல் சார்ந்ததாக மட்டும் இருக்கவில்லை. மனிதாபிமான ரீதியிலான நெருக்கடிகளையும் உள்ளடக்கியதாகவே இருக்கின்றது.

நடந்து முடிந்த பொதுத்தேர்தலின்போது அரசின் கட்டுப்பாடற்ற பகுதிகளைச் சேர்ந்த மக்கள் அந்நிய நாட்டவர்களைப்போல வாக்களிப்பதற்கும் வாய்ப்பளிக்கப்பட்டிருக்கவில்லை.

இம் மக்கள் வடக்கு-கிழக்கு யுத்தம் தீவிரமடைந்த காலப்பகுதியிலிருந்து தொடர்ச்சியாகவே அனைத்துவிதத்திலும் புறக்கணிக்கப்பட்டுவந்துள்ளனர்.

1994ம் ஆண்டு பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் பதவிக்கு வந்தபோது புனர் வாழ்வுப் பணிகள் குறித்தே பூர்வாங்கப் பேச்சுக்கள் ஆரம்பமாகியிருந்தன. ஆனால் அப்பேச்சுக்கள் கூட நம்பகத்தன்மையோடு ஆரம்பமாகாத காரணத்தினாலேயே ஆரம்பித்த வேகத்திலேயே சந்திரிகா அரசின் தீர்வு முயற்சிகள் தோல்வியைத் தழுவின.

ஆரம்பம் நன்றாக இருந்தால் மட்டுமே ஏனையவையும் நன்றாக அமையும் என எதிர்பார்க்க முடியும்.

எனவே இத்தடவைப் பேச்சுக்கள் கூட கடந்த காலங்களில் போலன்றி நம்பிக்கையீனங்களுக்கும், சந்தேகங்களுக்கும் இடந்தராதவிதத்தில் ஆரம்பிக்கப்படவேண்டியதே



அவசியமானதாகிறது.

லண்டனில் நோர்வே பிரதிநிதிகள் தமிழீழ விடுதலைப் புலிகளது அரசியல் ஆலோசகர் அன்டன் பாலசிங்கத்தைச் சந்தித்த வேளையிலேயே, நேபாளத்தின் தலைநகர் காத்மண்டுவில் ஜனாதிபதி சந்திரிகா சார்க் நாடுகளின் உச்சி மாநாட்டில் பங்குபற்றியிருந்தார்.

இம் மாநாட்டில் உரை நிகழ்த்திய ஜனாதிபதி சந்திரிகா வெளியிட்ட கருத்துக்களில், புதியதொரு அணுகுமுறையில் வடக்கு-கிழக்குப் பிரச்சனை கையாளப்படுமென்பதையே அனுமானிக்க முடிந்தது.

இலங்கையைப் பொறுத்தவரை இரு பிரதான கட்சிகள் ஆட்சியதிகாரங்களைக் கொண்டிருக்கின்றன.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி பாராளுமன்ற ஆட்சியைக் கொண்டிருக்கின்ற அதேசமயம், பொதுஜன ஐக்கிய முன்னணியின் தலைவியான சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவிடமே நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி இருக்கின்றது.

தற்போதுள்ள அரசியலமைப்பின் பிரகாரம் நிறைவேற்று அதிகார ஜனாதிபதிப் பதவி மிகவும் வல்லமை படைத்ததாகும். பாராளுமன்ற நடவடிக்கைகளைக் கூடத் தீர்மானிப்பதோடு, முப்படை, பொலிஸ் என்பவற்றின் செயற்பாடுகளையும் தீர்மானிப்பதாகவே நிறைவேற்று அதிகார ஜனாதிபதிப் பதவி விளங்குகின்றது.

நேபாளத்தில் இடம்பெற்ற பதினோராவது சார்க் உச்சி மாநாட்டில் உரை நிகழ்த்திய ஜனாதிபதி சந்திரிகா இலங்கையில் இனப்பிரக்கனைத் தீர்வு குறித்த புதிய முயற்சிகள், ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி ஆகிய இரண்டையும் ஒரு சமபல நிலையில் வைத்து ஆரம்பிக்க இடமளிப்பதாகத் தெரிவித்திருந்தார்.

கடந்த காலங்களில்கூட ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி ஆகிய இரு பிரதான கட்சிகளும் கூட்டாகவே இனப்பிரச்சனைத் தீர்வைக் காண முன்வரவேண்டுமென்ற கோரிக்கை உள்நாட்டில் மட்டுமல்லாது சர்வதேச மட்டத்தில் கூட விடுக்கப்பட்டிருந்தது.

ஆனால் பிரதான கட்சிகள் இரண்டுமே முரண்டு பிடித்ததன் காரணமாக இனப்பிரச்சனைத் தீர்வு விடயத்தில் ஒரு கூட்டு முயற்சிக்கு இடமில்லாமல் போயிருந்தது.

ஆனால் கடந்த பொதுத் தேர்தலில் மக்கள் வழங்கியுள்ள தீர்ப்பு ஆளுங்கட்சியையும், எதிர்க்கட்சியையும் வடக்கு-கிழக்குப் பிரச்சனையைக் கூட்டாக அணுக வேண்டிய நிர்ப்பந்தத்தையே உருவாக்கிவிட்டுள்ளது.

எனவே இப்புதிய அணுகுமுறையையே நேபாளத்தில் சார்க் உச்சி மாநாட்டில் உரை நிகழ்த்திய ஜனாதிபதி சந்திரிக்காவும் சுட்டிக் காட்டியுள்ளதை அறிய முடிகின்றது.

புதிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இனப்பிரச்சனைத் தீர்வு குறித்த நடவடிக்கைகளில் காலதாமதங்களுக்கு இடந்தராமல் நடந்து வருவதைக் காணமுடிகிறது. தமிழீ விடுதலைப் புலிகளது யுத்த நிறுத்தத்துக்கு மோதல் தவிர்ப்பு அறிவிப்பை புதிய ரணில் அரசு அறிவித்தது.

இதன் பின்னர் இந்தியா சென்று இந்தியத் தலைவர்களின் ஆதரவை பிரதமர் ரணில் விக்கிமசிங்க கோரியிருந்தார்.

இந்தியாவிலிருந்து நாடு திரும்பியதும் நோர்வே பிரதமருடன் தொலைபேசி ஊடாகவும் பின்னர் கடிதம் மூலமாக உத்தியோக பூர்வமாகவும் தொடர்பு கொண்டு இனப்பிரச்சனைத் தீர்வு முயற்சிகளுக்கு உதவ முன்வருமாறு பிரதமர் ரணில் கோரிக்கை விடுத்திருந்தார்.

இதனையடுத்து வடக்கு-கிழக்கில் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளுக்கு அத்தியாவசியப் பொருட்களை அனுப்ப முன்வந்திருப்பதுடன், தலைநகர் கொழும்பில் அப்பாவி மக்களிடையே அசௌகரியங்களை ஏற்படுத்தி வந்த தடைகள், தடுப்புக்கள் என்பவற்றையும் பிரதமர் ரணில் நீக்கியுள்ளார்.

இவை தவிர இனப்பிரச்சனைத் தீர்வு குறித்த அரசியல் நடவடிக்கைகளைக் கையாளும் விதத்தில் ஒரு விசேட குழுவையும் பிரதமர் ரணில் அமைத்துள்ளார்.

சிரேஷ்ட அமைச்சரான பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தலைமையிலான இக்குழுவில் அமச்சர் மிலிந்த மொரகொடவும் இலங்கையின் முக்கிய இராஜதந்திரிகள் சிலரும் அடங்குகின்றனர்.

புதிய அரசாங்கம் பதவியேற்று ஒரு மாத காலத்துக்குள்ளே இந்த முக்கிய நடவடிக்கைகள் யாவுமே மேற்கொள்ளப் பட்டிருப்பது மிகுந்த உற்சாகத்தைக் கொடுப்பதாகவே இருக்கின்றது.

இருந்தபோதிலும் புதிய சமாதான முயற்சிகளுக்குக் குந்தகம் விளைவிக்கக் கூடிய விதத்திலான பிரசாரங்களும் தலைகாட்ட ஆரம்பித்துள்ளன.

ஜே.வி.பி. என்ற மூன்றெழுத்துக் கட்சியான மக்கள் விடுதலை முன்னணி தலைநகர் கொழும்பின் மூலைமுடுக்குகளில் புதிய சுவரொட்டிகளை ஒட்டிவிட்டுள்ளது.

இச்சுவரொட்டிகளில் காணப்படும் வாசகங்களில் சமஷ்டி முறையிலான தீர்வுக்கு இடமளித்து நாட்டைப் பிரிக்க முயற்சி என்று குறிப்பிடப்பட்டுமிருக்கின்றது.

இதேபோன்ற பிரசாரங்களே



குட்டையைக் குழப்புபவையாக இருக்கின்றன.

ஆளுங்கட்சியும், எதிர்க்கட்சியும் இனப்பிரச்சனைத் தீர்வு முயற்சிகளில் தற்சமயம் ஒருங்கிசைவான போக்கிற்கே இடமளித்தவையாக இருக்கின்றன.

தமிழீழ விடுதலைப் பலிகளும் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடத் தயாராகியுள்ள அதேசமயம், வடக்கு-கிழக்கின் ஏனைய தமிழ் அரசியல் கட்சிகளும் தீர்வு முயற்சிகளுக்கு ஒத்துழைப்பை வழங்க முன்வந்துள்ளன.

இந்நிலையில் ஒரு மூன்றாவது அரசியல் சக்தியென்ற தரத்தில் இருக்கும் ஜே.வி.பி. கட்சி, அரசியல் ரீதியான ஒத்துழைப்புக்களை வழங்க முன்வராவிட்டாலும் உபத்திரவத்தையாவது கொடுக்காதிருக்க வேண்டும்.

கடந்தகாலத் தீர்வு முயற்சிகள்கூட பொறுப்பற்ற, அரசியல் லாபம் கருதிய நடவடிக்கைகள் காரணமாகவே தோல்விகளைச் சந்தித்திருந்தன.

இந்நிலையில் புதிய சமரச முயற்சி கூட ஒரு தைமாதப் பொங்கல் போன்றே வடிவம் பெற ஆரம்பித்துள்ளது.

நன்கு குதூகலித்து அழகாகப் பொங்கல் நுரைதள்ளும் வேளையில், பொங்கல் பானையை அடித்துடைக்கும் நடவடிக்கைகள் எத்தரப்பிலிருந்தும் தலைகாட்டாதிருப்பதை ஜனாதிபதியும், பிரதமரும் கூட்டாகவே உறுதிசெய்யவேண்டியோராகின்றனர். ●

## அதிரடி அய்யாத்துரை



**விமான நிலையத்துல** வந்திறங்கியதும் மூத்த பெரும் தமிழ்த்தலைவர் சிவ சிதம்ரம் ஐயா சொன்ன முதல் வார்த்தை 'புலிகளுக்கு அட்வைஸ் பன்னுர அனுபவம் எங்களுக்கு இல்ல. தம்பிமார் நம்மைவிட அனுபவசாளிகள்.' அனுபவம் இருக்குதோ இல்லையோ தள்ளாத வயதுல ஏன் வீண் வம்பு என்ற பயம் இருக்கத்தானே செய்யும். அமிர்தலிங்கத்துக்கும், யோகேஸ்வரனுக்கும் கிடைத்த பரிசை அருகில இருந்து பார்த்து மயிரிழையில உயிர் தப்பியவர் ஐயா. இனிமேலும் புலிகளுக்கு அட்வைஸ் பண்ண நினைப்பாரோ....? சூடுகண்ட பூனை அடுப்பங்கரையை நாடாது தானே....!

**வடிகட்டிய** அடாவடித்தனங்களைப் புரியும் சுத்த மோசமான ஆசாமிகளை ஐ.ஆர்.சி.காரர்கள் என்று சொல்வதுண்டு. பொலிஸ் அகராதியின் படி ஐ.ஆர்.சி. என்றால் Island Registered Criminals என்று அர்த்தம். பொலிஸ் திணைக்களத்துல உதுக்காக தனியானதொரு லிஸ்ட் இருக்குது. ஆண்டுக்கொருமுறை உந்த கௌரவ லிஸ்டுல புதியவர்கள் சேர்க்கப்படுவினம். இந்த வருட லிஸ்டுல 51 அரசியல் வாதிகள் இடம்பெற்றிருக்கினமாம். இதுல மூன்று பேர் பாராளுமன்ற உறுப்பினர்கள். ஒருத்தர் புத்தளம் மாவட்டத்துல புகழ்பெற்ற சண்டியர். ஏனையவர்களில் ஒருவர் குருணாகலை மாவட்டத்தைச் சேர்ந்தவர். மற்றவர் கேகாலை பிரதேசத்துல உள்ளவர். உந்த மூன்று பேரும் மட்டும்தான் இப்போதைக்கு. ஆனால் மேலும் பல எம்.பி.க்கள் ஐ.ஆர்.சி. காரர்களாக கௌரவிக்கப்படும் வாய்பிருப்பதாக கூறுகிறது பொலிஸ் திணைக்களம். வாழ்க புதிய அரசியல் கலாசாரம்!

**கடந்த வாரத்தில** பாதுகாப்பு வட்டாரங்களுக்குள்ளே கொதிப்பையும் கொந்தளிப்பையும் ஏற்படுத்தின நிகழ்வு அத்துருகிரியவில ஆயுதம் பிடிச்ச கதைதான். இராணுவம் சதிப்புரட்சிக்கு தயாராகிறதென்று ஒரு சாரார் கதையளக்க, ஏதோ செய்துபோட்டு புலிகள் மேல பழிபோடும் முயற்சி என்று வேறு சிலர் புரளி கிளப்புகிறார்கள். உண்மையில் உந்த ஆயுதங்களை பாவித்து இராணுவம் என்ன செய்யத் திட்டமிட்டது என்ற செய்தி காதோடு காதுவைத்தாப்போல பிரதமருக்கு சொல்லப்பட்டிருக்கிறதாம். 'அது அவசியமானதுதான்' என்னும் ஆமோதிப்பு அவரிடமிருந்தும் வெளிப்பட்டதாகச் சொல்லுகினம்.

**தளதா மாளிகையில** இருக்கிற புத்தரின் பல் உண்மையில் அவருடையதுதானா என்று கேள்வி எழுப்பி கட்டுரை எழுதிப் போட்டார் ஒரு பத்திரிகையாளர். ஏரிக்கரை ஆங்கிலப் பத்திரிகையில செய்தி அச்சாகி கையில வந்ததும்தான் அதிகாரிகளுக்கு விஷயம் விளங்கியது. மகா சங்கம் கோபித்துக்கொள்ளும் என்று உது சம்பந்தமான கட்டுரை வந்த சுமார் ஒரு லட்சம் பக்கங்களை இரவோடிரவாக கிழித்துவோறாக்கியவை. கருத்துச் சுதந்திரம் வழங்குகிறோம் என்று அரசாங்கம் சொன்னதை நம்பி ஆராய்ச்சிக்கட்டுரை எழுதின செய்தியாளர் வேலையில இருந்து இடை நிறுத்தம்!

**எம்.ரி.வி.** நிலையத்தில பிடித்த தீ விதியா? சதியா? என்று சரியாகத் தெரியாத போதும். உந்த நிலையம் ஒளிபரப்பை நிறுத்தி இருந்தால் உது நம் தமிழ் சனத்துக்கு குறிப்பாக தாய்க்குலத்திற்கு ஈடு செய்ய முடியாத நட்டமாக இருக்கும். எத்தனையோ மெகா சீரியல்கள் விட்டுப்போகும். மெகா சீரியல ்யார் செத்துப்போனார். யார் யாரைக் கட்டிக்கொண்டார். எண்ட விபரம் தெரியாமல் தமிழ்ச்சனம் பரிதவித்துப்போகும். உடனே ஒளிபரப்பு ஆரம்பமானதால் உந்த ஆபத்து தவிர்க்கப்பட்டது. எப்படியிருந்தாலும் இந்த திடீர் அநர்த்தம் குறித்து எம்.ரி.வி. நிறுவனத்திற்கும் ஊழியர்களுக்கும் முரசு தனது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்கிறது. ●

# ப்ளூபிலிம் டாக்டரை நான்தான் பொலிஸில் காட்டிக்கொடுத்தேன்

## இவனது நீலப்பட வலையில் இலங்கைப் பெண்களும் சிக்கினார்களா?

செ சென்னையில் உள்ள பிரபல டாக்டர் ஒருவர் முன்னணி நடிகைகள் பெண் அறிவிப்பாளர்கள் செய்தி வாசிப்போர் அரசியல் வாதிகளின் மனைவிமார் மொடல் அழகிகள், கல்லூரி மாணவிகள் குடும்பப் பெண்கள் என்று சுமார் 1500 பேரைப் பயன்படுத்தி 'ப்ளூ பிலிம்' எடுத்து வெளிநாடுகளில் விற்பனை செய்து கோடிக்கணக்கில் சம்பாதித்தவர் கடந்தவாரம் ஆயிரக் கணக்கான வீடியோக் கசட்களுடனும் சுமார் 70,000 ஆபாசப் புகைப்படங்களுடனும் சென்னைப் பொலிஸிடம் சிக்கினார்.

பணம் கொடுத்தும் ஆசை வார்த்தைகளைக் கூறியும் சில நேரங்களில் மிரட்டியும் பெண்களை பணியவைத்து கட்டுமஸ்தான உடலமைப்பைக் கொண்ட ஆண்களுடன் உடலுறவு வைக்கச்செய்து அவற்றை படமாக்கி தனது தம்பி மூலம் விற்பனை செய்வதே இந்த டாக்டரின் பொழுதுபோக்கு. இதன் மூலம் அவன் சுமார் 40 கோடி ரூபாய்க்குமேல் சம்பாதித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

> தொடர்ந்து எண்ணூருக்கு அருகில் உள்ள காலாஞ்சிக் குப்பம் தீவுப் பகுதியில உள்ள தனது பண்ணை வீட்டுக்கு அழைத்துச் சென்ற டாக்டர் பிரகாஷ், பல பெண்களுடன் என்னை பலமுறை உல்லாசமாக இருக்கச் செய்தார். ஒரு நாள் அந்தப் பண்ணை வீட்டின் கடற்கரையோர பகுதியில் என்னையும் அவர் ஏற்பாடுசெய்த பெண்களையும் முழு நிர்வணமாக ஓடிவரச் செய்தவர், முதன் முதலில் அதனை டிஜிட்டல் கமரா கொண்டு படம் பிடித்தார். போதையில் இருந்தாலும் எனக்கு ஏதோ விபரீதம் என்று உறைத்தது.



தனக்கென வெப்சைட் ஒன்றை ஆரம்பித்து அதனூடாகவும் ஆபாசப் படங்களை உலகம் முழுவதற்கும் விநியோகித்திருக்கிறான் இந்த டாக்டர்.

டாக்டர் பிரகாஷ் என்று அழைக்கப்படும் இவன் பிரபல எலும்பு முறிவு சிகிச்சை நிபுணர் பல நாடுகளையும் சேர்ந்தவர்கள் இவனிடம் சிகிச்சை பெற்றுள்ளனர்.

இதில் மற்றொரு அதிர்ச்சி தரும் விடயம் யாதெனில்

www.realindiaopom.com என்ற இவனது வெப்தளத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் ஆபாசப் படங்களில் இலங்கைப் பெண்கள் சிலரது புகைப் படங்களும் இருப்பதாக அதிர்ச்சி தரும் தகவலொன்று சென்னையிலிருந்து வெளியாகியுள்ளது.

இந்த டாக்டரின் வண்டவாளங்கள் வெளியான பின்னர் இந்த வெப்சைட்டை பார்வையிட்ட சில பெண்கள் தாம் பாதி மயங்கிய நிலையில் ஆபாசமாக இருக்கும் காட்சி படமாக்கப்பட்டிருப்பது தொடர்பாக புகார் செய்துள்ளனர்.

இவர்கள் இந்த டாக்டரிடம் சிகிச்சைக்காக சென்றவர்கள் என் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மருத்துவ சிகிச்சை எனக்கூறி ஊசிகளை ஏற்றி பாதி மயக்கமடைந்த நிலையில் உடலுறவு கொள்ளவைத்து படமாக்கப்பட்டிருப்பதாக இந்தப் பெண்கள் தெரிவித்துள்ளனர்.

அண்ணாநகர் எலும்பு முறிவு டாக்டர் பிரகாஷின் நீலப்பட சாகசங்கள் வெளிவரக் காரணமாக இருந்தவர். அந்த டாக்டரின் செக்ஸ் சிஷ்யன் கணேஷ். இருபது வயசான இந்த பாண்டிச்சேரி பையனை தொடர்ந்து பல நாட்கள் தங்கள் ரகசிய கஸ்டடியில் வைத்து ஏராளமான விவரங்களை வாங்கிக்கொண்ட சென்னை பொலிஸார், கடந்த வியாழக் கிழமை கோர்ட்டில் ஆஜர்படுத்தி வாக்குமூலம் தரச் செய்தார்கள்.

ஏதோவொரு அந்நிய நாட்டு எதிரியைக் கொண்டு வடுகிற மாதிரி, பத்திரிகையாளர்களுக்குத் தெரியாமல், பலவித தந்திரங்களைக் கையாண்டு, இவனைக் கோர்ட்டில் பொலிஸ் ஆஜர்படுத்திய விதம் படுத்ரில்லானது.

"பிரகாஷ் அவ்வளவு எளிதாக பிணையில் வெளியே வந்துவிடக்கூடாது. அதற்கேற்ப அவரைப் பற்றிய முக்கிய ஆதாரங்கள் பலவற்றையும் கைப்பற்ற வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம். அதனால்தான எங்கள் முக்கிய துருப்புச் சீட்டான கணேஷ் எந்த வகையிலும் மனம் கோணாதபடி அவனைக் கையாள வேண்டியிருக்கிறது. பத்திரிகைகளில் தனது முகம் வந்துவிடக்கூடாது என்று அவன் அழுத்தம் திருத்தமாகப் போட்ட கண்டிஷனுக்கு உடன்பட்டே, இவ்வளவு கெடுபிடியாக கோர்ட்டுக்குக் கொண்டுவர வேண்டியிருந்தது" என்று விளக்கமும் கொடுக்கிறார்கள் பொலிஸார்.

சைத்தாப்பேட்டை கோர்ட். எழும்பூர் கோர்ட் என்று பத்திரிகையாளர்கள் வட்டமிட்டுக்கொண்டிருக்க... சென்னை மாநகராட்சி அலுவலகம் உள்ள ரிப்பன் கட்டட வளாகத்தில் அமைந்திருக்கும் சென்னை பெருநகர இருபதாவது கோர்ட்டில் சந்தடியில்லாமல் அவனைக் கொண்டு போய், மாஜிஸ்திரேட் முன்பு நிறுத்தினார்கள். இந்த கோர்ட்டுக்கும் சில பத்திரிகையாளர்கள் எப்படியோ மோப்பம் பிடித்து வந்துவிட்டனர். பொலிஸ் ஜீப்பில்தான் கணேஷ் அழைத்து வரப்படுவான் என்று பத்திரிகையாளர்கள் எதிர்பார்த்திருக்க... ஒரு மோட்டார் பைக்கில் அவனை மஃப்டி உடை பொலிஸார் கூட்டிவந்தது க்ளைமாக்ஸ் தந்திரம். அதையும் கண்டுபிடித்து பத்திரிகையாளர்கள் பாய்ந்து செல்ல... கோர்ட்டினுள் போகும் போதும் வெளியே வரும் போதும் கமராக்களில் தனது முகம் பதிவாகிவிடாதபடி, இரண்டு கைகளாலும் முகத்தை இறுக மூடியபடியே இருந்தான் கணேஷ்.

ஒட்டல்களிலும் அரசு விருந்தினர் மாளிகையிலுமாக மாறி மாறி அவனைத் தங்கவைத்து, ராஜ உபசாரம் செய்து அவனிடம் பல தகவல்களைப் பெற்று, வாக்குமூலத்துக்கு அவனைத் தயார்படுத்திய பிறகே கோர்ட்டுக்குக் கூட்டி வந்திருந்தார்கள்.

கிட்டத்தட்ட இரண்டரை மணி நேரம் பூட்டிய கோர்ட் ஹாலுக்குள் நீதிபதியும் டைப்பிஸ்ட்டும் மட்டுமே வீற்றிருக்க, பிரகாஷ் விஷயத்தில் நடந்த சம்பவங்களையெல்லாம் நிதானமாக யோசித்து யோசித்துச் சொல்லிக் கொண்டே வந்தானாம்.

இடையிடையே கண்ணீர் ததும்பி பொல பொலவென அவன் கண்களில் இருந்து நீர் வடிய, "பதற்றப்படாதே கணேஷா.. இந்த விஷயத்தில் பொலீஸ் சொல்லிக் கொடுத்ததை நீ சொல்ல வேண்டாம். இதய சுத்தியோடு, என்ன நடந்ததோ அதை மட்டும் சொல்" என்று தைரியப்படுத்தியிருக்கிறார் நீதிபதி கருணாநிதி.



"இப்போது இங்கு சொல்பவை நாளை உனக்கே எதிராகக்கூட திரும்பலாம். எனவே, நன்கு யோசித்துக்கொண்டு உண்மையை மட்டும் சொல்" என்றும் அவர் சொல்ல, "மறைக்கிறதுக்கு என்ன சார் இருக்கு? அந்த பிரகாஷ் ஒரு அயோக்கியன் சார்.... அவனைப் பத்தி எனக்குத் தெரிஞ்ச அத்தனை விஷயங்களையும் சொல்லிடறேன் எழுதிக்குங்க" என்றபடி திறந்த வெள்ளமாக 'செக்ஸ் சாகஸங்களை' கக்கத் துவங்கியிருக்கிறான். பிறகு பொலிஸ் அதிகாரிகளிடம் தான் சொன்னவற்றை வரிவிடாமல் ஒப்பித்தும் இருக்கிறான். அதிகாரிகளிடம் பேசியதிலிருந்து, அவன் அளித்த வாக்குமூலம் இதுதான் என்று தெரியவருகிறது.

## உதவியாளர் திடுக்கிடும் வாக்குமூலம்



"என்னைப் போல இன்னொரு கணேசனும் உலகத்தில் இருக்கக் கூடாது. இன்னொரு பிரகாஷும் இருக்கக்கூடாது. எனக்கு இள வயது முதற்கொண்டே பெண்கள் என்றால் ரொம்ப இஷ்டம். சராசரியான ஆண்கள் தனது இளமைப் பருவத்தில் செய்யும் அத்தனை குறும்புகளையும் செய்த வந்த நான், சில விஷயங்களில் சொஞ்சம் அதிகப்படியாக நடந்துகொண்டதும் உண்மை! குறிப்பாக சிகரெட், தண்ணி, பெண் சகவாசம் போன்ற கெட்ட பழக்க வழக்கங்கள் இளம்வயதிலேயே என்னைத் தொற்றிக் கொண்டுவிட்டன. பதினான்கு வயதிலேயே இருபத்தைந்த வயதுக்குமேல் அனுபவிக்கக் கூடிய அத்தனை விஷயங்களையும் அனுபவித்துவிட்டேன். இதனால், படிப்பில் அவ்வளவாக எனது கவனத்தைச் செலுத்த முடியவில்லை.

எனது போக்கைக் கண்டு என்னை ரொம்பவே வெறுத்து ஒதுக்கி வைத்திருந்த எனது குடும்பத்தினர். ஒரு கட்டத்தில் என்னை புறக்கணிக்க ஆரம்பித்தனர். நான் அது பற்றியெல்லாம் கொஞ்சமும் கவலைப்படாமல் தறிகெட்டுத் திரிய ஆரம்பித்தேன். பத்தாம் வகுப்பு இறுதித் தேர்வில் தோல்வியடைந்த போதுதான், எனது வாழ்க்கையில் எதிர்காலம் குறித்து சிந்திக்க ஆரம்பித்தேன். சென்னைக்கு அனுப்பிவைத்தார்கள் என் பெற்றோர்.

முதலில் இங்கே வருவதற்கு எனக்குக் கொஞ்சம் இஷ்டமில்லை. இருந்தாலும் குடும்பத்தினர் கவலைப்பட்டதால் புதுவையை விட்டுக் கிளம்பச் சம்மதித்தேன். சென்னைக்கு வண்டியேறியபோது, திருந்தி வாழவேண்டும் என்று புதுமனிதனாகத்தான் ஏறினேன்.

எப்படியாவது, ஒழுங்காகப் படித்து பத்தாம் வகுப்பில் தேர்வு பெற்றுவிட வேண்டும் என்று டுடோரியல் கல்லூரி ஒன்றில் சேர்ந்தேன். ஒரு வார காலம் இதே சூழ்நிலையில் கழிந்து கொண்டிருக்க... என் வாழ்க்கையில் திடுமென உள்ளே புகுந்தாள்.

என்னைப் போலவே பத்தாம் வகுப்பு தேறாமல் அதே டுடோரியலில் படித்து வந்த கன்கா.

எனது வாழ்க்கை பழையபடியே திசை மாறியது! கனகாவோடு சேர்ந்துகொண்டு சென்னை மாநகர் முழுவதும் வலம்வர ஆரம்பித்தேன். ஐந்து நட்சத்திர ஓட்டல்களில் நடக்கும் டிஸ்கொத்தே. ஓட்டல் பார்கள். மகாபலிபுரம் காட்டேஜுகள் என்று பல நாட்கள் பொழுதுபோக ஆரம்பித்தது! எல்லா செலவும் கனகாதான். அடுத்து, நர்மதா என்ற பெண்ணையும் எனக்கு அறிமுகப்படுத்தினாள் கனகா. இருவரும் சேர்ந்து ஒரு நாள் அண்ணாநகரில் ரேகா என்ற பெண்ணை அறிமுகப்படுத்தி வைத்தார்கள். அந்த அறிமுக தினத்தன்று முழுவதும் மூன்று பெண்களுடனும் குடியும் கும்மாளமுமாகக் கழித்தேன்.

அடுத்த சில நாட்களில் ரேகா என்னை டாக்டர் பிரகாஷுக்கு அறிமுகம் செய்துவைத்தாள். அவர் ரொம்பவும் அன்பாகப் பேசினார். அவரது மெஸ்மரிஸப் பேச்சு மகுடியாக இருக்க, நான் பெட்டிப் பாம்பாக அவருக்குக் கட்டுப்பட்டு நடக்க ஆரம்பித்தேன்.

ஒருமுறை அன்பொழுகப் பேசி என்னை வளசரவாக்கத்தில் உள்ள அவரது சொகுசு பங்களாவுக்கு அழைத்துப்போனார் டாக்டர் பிரகாஷ். அங்கே எனக்கு முதலில் மதுபான வகைகள் கொடுத்து உபசரித்தார். ஒசியில் கிடைத்த வெளிநாட்டு மதுவை நான் சுவைக்க, புதிதாக சில மங்கைகளையும் அங்கே கொண்டுவந்தார் பிரகாஷ். அடுத்தடுத்த நாட்களில் போதை ஊசி போட்டு என்னைப் பழக்கினார்.

தொடர்ந்து எண்ணூருக்கு அருகில் உள்ள காலாஞ்சிக் குப்பம் தீவுப் பகுதியில உள்ள தனது பண்ணை வீட்டுக்கு அழைத்துச் சென்ற டாக்டர் பிரகாஷ், பல பெண்களுடன் என்னை பலமுறை உல்லாசமாக இருக்கச் செய்தார். ஒரு நாள் அந்தப் பண்ணை வீட்டின் கடற்கரையோர பகுதியில் என்னையும் அவர் ஏற்பாடுசெய்த பெண்களையும் முழு நிர்வணமாக ஓடிவரச் செய்தவர், முதன் முதலில் அதனை டிஜிட்டல் கமரா கொண்டு படம் பிடித்தார். போதையில் இருந்தாலும் எனக்கு ஏதோ விபரீதம் என்று உறைத்தது. நான் கேட்டபோது, 'பொம்பளைங்களே பயப்படலை.... என்ன பயம்' என்று தட்டிக் கொடுத்தார். தொடர்ந்து பல பெண்களோடு உடலுறவு வைத்துக்கொள்ளச் சொல்லி என்னை வற்புறுத்தினார். அவர் செய்து கொடுத்த வசதிகளுக்கும், நான் கேட்காமலே அள்ளிக்கொடுத்த பணத்துக்கும் விலையாக அவர் சொன்னபடி நடந்து கொண்டேன். படங்களை எடுத்துக் குவித்தார் பிரகாஷ்.


ஒரு கட்டத்தில் பெண்களோடு தொடர்ந்து உறவு வைத்துக்கொள்ள என்னால் முடியவில்லை. மறுத்தபோதுதான் தன் இன்னொரு முகத்தைக் காட்டினார். துப்பாக்கி காட்டி மிரட்டினார். நான் பயந்துபோய் மேற்கொண்டு பல நாட்கள் அவர் சொன்னபடி நடந்துகொண்டேன். ஒரு கட்டத்தில் இனிமேலும் அவரோடு தொடர முடியாது என்று சென்னையை விட்டே கிளம்பி பாண்டிச்சேரிக்கு ஓடிவிட்டேன். அங்கும் போன் செய்து என்னை தொடர்ந்து மிரட்டினார் டாக்டர் பிரகாஷ். ஒரு நாள் கமபியூட்டர் வெப்சைட் ஒன்றில், 'நீ பல பெண்களோடு உறவு கொள்ளும் காட்சி வெளியாகியுள்ளது' என்று எனது உறவினர்கள் சிலர் சொன்னபோது அதிர்ந்து போனேன்.

டாக்டர் பிரகாஷ் இப்படி என்னைப் பழிவாங்குவார் என்று எனக்குத் தெரியாது. உடனே இதைத் தடுத்தாகவேண்டும் என்று முடிவு செய்தேன். பாண்டிச்சேரி பொலிஸாரிடம் நானே புகார் கொடுத்தேன். அவர்கள் அதனை பாண்டிச்சேரி அரசாங்கத்துக்கு எடுத்துச்செல்ல, அவர்கள் அதை சென்னை மாநகர பொலிஸ் கமிஷனருக்கு புகாராகத் தந்து விசாரிக்கச் சொன்னார்கள்." இதுதான் நடந்தது. என்னைப்போல எத்தனையோ நபர்களின் வாழ்க்கையை சீரழித்து வரும் பிரகாஷ் போன்றவர்களைச் சட்டம் கண்டிப்பாகத் தண்டிக்க வேண்டும்!"

இப்படியெல்லம் நீதிபதி முன்னால் சொல்லி முடித்திருக்கும் கணேஷைப் பத்திரமான இடத்தில் வைத்துத் தொடர்ந்து விசாரித்துக்கொண்டிருக்கிறார்கள்.

"அடுத்த கட்டமான பிரகாஷுக்கும் முக்கிய வி.ஐ.பி.க்களுக்கும உள்ள தொடர்புகளைப் பற்றித் தனக்குத் தெரிந்ததைச் சொல்லத் துவங்கியிருக்கிறான் கணேஷ். அது இந்த வழக்கை இன்னொரு திருப்பத்துக்கு இட்டுச் செல்லும்" என்கிறார்கள் பொலிஸார்.

# ஐயப்பன் பவனி



சபரிமலையில், ஆண்டுதோறும் நடைபெறும் ஆராட்டுவிழா அண்மையில் நடந்து முடிந்தது. இலங்கை, மலேசியா, மொரீசியஸ் உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்த இந்துமத பக்தர்கள் பலர் இதில் பங்கேற்றனர். நம்நாட்டில் இருந்தும் பத்திரிகை விளம்பரம் கொடுத்து பெரும் எடுப்புடன் 'சுவாமிகள்' பலர் கலந்துகொண்டனர். சபரியில் இருந்து 18 படி வழியாக ஐய்யப்பனுடன் இறங்கி வரும் கோயில் யானையை பக்தர்கள் புடை சூழ அழைத்துச்செல்வதையே படத்தில் காண்கிறீர்கள். ஐயப்பரின் யானை பவனி பம்பை என்ற இடம் வரை பயணிக்கும். சபரிமலை செல்லும் பக்தர்கள் அனைவரும் பம்பை நதியில் குளித்து தம்மை சுத்தம் செய்து கொண்ட பின்னரே செல்வது வழக்கமாகும்.



# கர்ப்பமான பொம்மை

குழந்தைகளின் கையில் விளையாடக் கொடுக்கும் பொம்மை கர்ப்பம் அடைந்த நிலையில் இருப்பது போன்ற காட்சி சித்தரிக்கப்பட்டிருக்கிறது. அதனை அனுமதிப்பதா இல்லையா என்ற கடும் சர்ச்சை இப்போது ஜப்பானில் நடை பெறுகிறது. டகாரா என்ற விளையாட்டு பொருட்களை உற்பத்தி செய்யும் பிரபல நிறுவனம் ஒன்று அதன் 35 ஆவது வருட கொண்டாட்டங்களை முன்னிட்டு தயாரித்த பொம்மைதான் இவ்வாறு கர்ப்பவதிபோல் காட்சியளிக்கிறது. ஜப்பான் நாட்டு இளவரசி கர்ப்பமாக இருக்கிறார். இந்த விடயத்துக்கு ஜப்பான் ஊடகங்க்ள் பெரும் முக்கியத்துவம் வழங்கியிருந்தன. இந்த 'கர்ப்ப' சமாச்சாரத்தை தனது வியாபாரத்துக்கு பயன்படுத்திய டகாரா நிறுவனம் குழந்தைகளின் கையில் இவ்வாறான பொருட்களை கொடுப்பது சரியா என்ற கேள்விக்கு பதில் சொல்ல முடியாமல் தவிக்கிறது.

# எடுத்துக் காட்டு



மனித சமுதாயம் ஒருவருக்கொருவர் மோதி அழிந்து கொண்டிருக்கும் சூழ்நிலையில் ஐந்தறிவு படைத்த ஜீவராசிகளிமிருந்து தினசரி ஏராளமான எடுத்துக்காட்டுகளை நாம் காண முடிகிறது. இங்கே படத்தில் இருப்பதும் அவ்வாறான ஒரு நிகழ்வுதான். சிறுவயதிலே தன் தாயை இழந்த ஒரு புலிக்குட்டியை நாய் ஒன்று அன்பாய் அரவணைத்து வருகின்றது. தமிழகத்தில் உள்ள வீடோன்றில் இந்த படம் பிடிக்கப்பட்டது.

நாய் நன்றியுள்ள மிருகம் என்பது யாவரும் அறிந்ததே. ஆனால் புலி பசித்தாலும்... இந்த சினேகத்துக்கு மத்தியில் இதையும் சிந்தித்துத்தான் ஆகவேண்டும்.

# கிடைக்காத மான்ய(ா)ம்!

'சூரி' படத்தில் விக்னேஷ் ஜோடியாக மலையாள மான்யா நடித்துவந்தார். பைனான்ஸ் சிக்கலால் படப்பிடிப்பு நிறுத்தப்பட்டிருந்ததால் மான்யா மலையாளத்தில் பிஸியாகிவிட்டார். மறுபடியும் 'சூரி'யைத் தொடங்கிய வேளையில் மான்யாவால் வரமுடியவில்லை. இப்போது மான்யாவுக்குப் பதில் உமா நடிக்கிறார்.

---

# மச்சக்காரி மோனல்

'பேசாத கண்ணும் பேசுமே' படவாய்ப்பு மோனலுக்கு எப்படி கிடைத்தது தெரியுமா? அந்தப் படம் பூஜை போட்ட இடத்திற்கு பக்கத்தில் தான் மோனல் வேறொரு படப்பிடிப்பில் இருந்தார்.

பூஜை பற்றி கேள்விப்பட்டு முரளிகிருஷ்ணாவை மோனல் பார்க்க வரவே அவரையே படத்தின் ஹீரோயினியாக்கி விட்டார்கள். ஹீரோயினியை முடிவு செய்யாமல் படத்திற்கு பூஜை போட்டது மோனலுக்கு வாய்ப்பு கிடைக்க கூடுதல் காரணமாகும். இதைத் தான் குருட்டு அதிர்ஷ்டம் என்று சொல்கிறார்களோ?



விஜய்
படம்: ஷாஜகான்

# ஆலாய்ப் பறக்கும் விநியோகஸ்தர்கள்!

'த்ரீ ரோஸஸ்' ரம்பா தனது அண்ணன் வாசு பெயரில் தயாரிக்கும் படம். ரஞ்சித் பரோட் இசையமைக்கிறார். திரவ் என்கிற புதுமுகம் படத்தில் அறிமுகம் ஆகிறார். லைலா, ஜோதிகா, ரம்பா மூவரும் நடிக்கிறார்கள். 'லூட்டி' படத்தை இயக்கிய பரமேஷ்வர் இந்தப் படத்தை இயக்குகிறார். ஒரே ஷெட்யூலில் படத்தை முடித்து பொங்கலுக்கு படத்தை வெளியிடத் திட்டமிட்டிருக்கிறார் ரம்பா.

படத்தின் கதை சமீபத்தில் வெளியான 'சார்லஸ் ஏஞ்சல்ஸ்' என்கிற ஆங்கிலப்படத்தின் அப்பட்டமான உல்டா. ஆனால் அந்தப் படத்தைப் போல இதில் நாயகிகள் பறந்து பறந்து சண்டைபோட மாட்டார்களாம். அந்த வேலையை அர்ஜுன் பார்த்துக் கொள்வாராம் வில்லன்களை அழிக்கப் புறப்படும் அர்ஜுனுக்கு இவர்கள் துணை இருப்பார்களாம்.

பெரிசாக பூஜை போடப்பட்டு படம் துவங்கப்பட்டாலும், படு சிக்கனமாக படத்தை எடுத்து முடிக்கத் திட்டமிட்டிருக்கிறார் ரம்பா என்கிறார்கள்.ஜோதிகா மற்றும் லைலா இருவரும் படத்தில் இருப்பதால் விநியோகஸ்தர்கள் இந்தப் படத்தை வாங்குவதற்கு ஆலாய்ப் பறந்திருக்கிறார்கள்.

# சிம்ரை...
## சினேகா...

'பம்பல்கே ச...
தேவயானியைத் ...
சினேகாவை நடி...
முடியாது. மீண்டு...
வேண்டும் என்று ...
விட்டு நாட்டாமை ...
விட்டார் தயாரிப்...
கமல் தவிர மற...
சினேகாவே அந்...
அதற்கென்ன இப்...
அந்தப் படத்தின் ...
அந்தக் கோபத்தை...
வார் கமல்.
பக்கத்தில் சி...
துக் கொண்டு சிம...
புகழ என்று ப...
விட்டார். அது ...
சினேகா பக்கம் ...
பேரைக்கூட ச ...
இவங்களும் நடி...
என்றார். பொ...
வாக சிம்ரனைப் ...
சினேகாவின் ...
பார்க்க வேண்டு...
தான் இஞ்சி தி...
என்பார்கள் ந...
வார்கள்.

---

# கவர்ச்சி என்றால் அழகு

நல்ல கதை நல்ல பெனர், நல்ல டைரக்டர் ஒரு நடிகருக்கு கிடைப்பது அவரது அதிர்ஷ்டம். அது எனக்குக் கிடைத்துள்ளது. அதே நேரத்தில் நல்ல கதை, நல்ல பெனர், டைரக்டர் வாய்த்தும் அதைக் கோட்டை விட்டுவிட்டுவிடாமல் நன்றாக நடித்து ஒத்துழைத்து முழு ஈடுபாட்டுடன் நடிக்க வேண்டும்.

அதனால் தான் எனக்குப் பல விருதுகள் கிடைத்துள்ளன. தொடர்ந்து சிறந்த நடிப்புக்காக மேலும் பல உயர்ந்த உன்னதமான விருதுகளை நான் நிச்சயமாகப் பெறுவேன்.

சினிமாவில் கவர்ச்சியைப் பற்றி அதிகமாகப் பேசுகிறார்கள். கவர்ச்சி என்பது செக்ஸ் மட்டுமே. வேறு எதுவும் இல்லை என்று சொல்வதை நான் ஒப்புக்கொள்ளமாட்டேன். கவர்ச்சி என்பது செக்ஸ் அல்ல. நான் என் படங்களில் கவர்ச்சியாக நடிக்கலாம். ஆனால் செக்ஸியாக நடிக்க மாட்டேன். கவர்ச்சி என்றால் நளினம், அழகு என்பதுதான். அது ஆபாசம் என்பதல்ல. நான் அழகாகத் தோன்றுவேன். நளினமாக நடிப்பேன் என்கிறார் ஜோதிகா.

---

# திரையுல... மறுபக்க...
## நடிகை...

இ...
செலுத்துகிற...
கவனம் ...

# முக்கோணம்

ஸ்ரீ
ஸ்ரீ
ஸ்ரீ
ஸ்ரீ
ஸ்ரீ

முகப்பில்

அரவிந்தசாமி
ரோஜா

# மும்தாஜுக்கு திருமணத் தொல்லைகொடுக்கும் ரசிகர்

மதுரையைச் சேர்ந்த ஒருவர் அடிக்கடி மும்தாஜுக்கு ரத்தத்தில் கடிதம் எழுதுகிறாராம். மும்தாஜை திருமணம் செய்துகொள்ள விரும்பி, அடிக்கடி தொந்தரவு செய்ய, பதிலுக்கு ஆறு வருடங்களுக்குப் பிறகு சொல்கிறேன் என பதில் எழுதி அனுப்பியிருக்கிறாராம் மும்ஸ்.

(ஆறு வருடங்களுக்குப் பிறகு சென்னை ரோட்டில் பைத்தியமாக திரியப்போகிறார் அந்த மதுரைக் காரர்)



மீனா



பிரியங்கா-திரிவேதி
படம்: H2O

# வசுந்ராவின் அம்பலம்

ஆடல், பாடல் இரண்டிலும் வல்லவரான நடிகை வசுந்தரா தான் இப்போது தம்மடிப்பதிலும் உற்சாக பானம் அருந்துவதிலும் கூட சக்கை போடு போடுகிறார். அம்மணியின் லிமிட்டைப் பார்த்து சக நடிகர்களே மூக்கில் விரல் வைக்கின்றனர்! உடம்பு கெட்டுப் போகுமே என்று சொன்னால், ஏன், மனிஷா கொய்ராலாவுக்கு கெட்டாபோய் விட்டது? போமேன் என்கிறார்.

---

# படப்பிடிப்பில் உம்மா.....

இடையில் பேஷண்ட் போலிருந்த சிம்ரன் இப்போது பேஷாகிவிட்டார் என்ன காரணம், காதலர்களுக்கிடையில் அடிபட்டுக்கொண்டார்களாம். ஒருநாள் 'ஐ லவ் யூ டா' படப்பிடிப்பில் ராஜுவை புரட்டி எடுக்க ஆரம்பித்துவிட்டார் சிம்ரன். மொத்த யுனிட்டுமே வேடிக்கை பார்க்க, இந்த மல்யுத்தம் சில நிமிடங்கள் நீடித்தது. டைரக்டர் ஓடிவந்துதான் இருவரையும் பிரித்துவிட்டாராம்.

ஜாலியாகப் போகவேண்டிய படப்பிடிப்பு இருவரும் போட்டுக் கொண்ட சண்டையால் சிடுசிடுவென நகர்ந்தது. டூயட் காட்சிகளில் கூட அழுது வடித்தாராம் சிம்ரன். இப்படியே போனால் படம் பணாலாகிவிடும் என்று முடிவு செய்த டைரக்டர் மனோஜ்குமார் இரண்டுபேரையும் கூட்டி வைத்து சமாதானம் பேசிச் சண்டையைத் தீர்த்து வைத்தாராம். நீண்டநாள் கோபத்தை இருவரும் மனம் விட்டுப்பேசி உருகினார்கள்... நெருங்கினார்கள்... டைரக்டருக்கு எதிரிலேயே உம்மா கொடுத்துக்கொண்டார்கள். படம் நல்லா வர மாமா வேலை எல்லாம் பார்க்க வேண்டியிருக்கு என்று அழாத குறையாக புலம்புகிறார் டைரக்டர்.

# காதோடு சொல்...

பாபி நடிகை தன்னுடன் கூட நடிக்கும் நடிகர்களுடன் தாரா... தாராளமாகக் கறக்கும் யுக்தி தெரிந்தவர். ஆரம்பத்தில் வி... வாராம். ரொம்பக் கெஞ்சியபின்தான் ஓகே. சொல்வா... மூன்றுமாசம் என்றபடி வந்துதிற்பாராம். ... வாங்கிக்கொள்ளாமல் பேரமும் பேசுவாராம். இப்படி... ளவை காலிசெய்த நடிகர்கள் சங்கம் அமைக்காத ... டார்கள் ஒரு முறை சாப்பாட்டு வேளையில் இந்த ச... பேசிக்கொண்டிருந்தபோது அருகிலிருந்த காமெடி... வர் அவங்க அம்மாவும் இப்படித்தான் என்று சொ... உறைந்துபோனார்களாம் இந்த அல்டிமேட் அனுப...

தனக்கும் 'குஷி'தந்த டைரக்டருக்கும் லவ் இ... சொல்லிவிட்டார் பத்திரியின் நாயகி. ஆனால் பட... எட்டு மணியானால் போதும் கையில் செல்லுமா... ஒதுங்கிவிடுகிறாராம் மணிக்கணக்காகப் பேசிக்கொ... களிடம் சோட் ரெடி என்டால் கூட காதில் வாங்கி... கொஞ்சலைத் தொடர்கிறாராம். யாரிடம்? எதற்கு? புரி... இருக்கிறது யுனிட் ஆட்கள். முறிந்த காதல் தொடருமோ ... கத்தில் குஷி டைரக்டரைப் பற்றிப் பேசினால் அவன் கிடக்கா... ராம் ஸ்டைலான ஆங்கிலத்தில்.

## ...ப் புகழ்ந்தார்; ...கொதித்தார்

...' படப்பிடிப்பில் இருந்து ...விட்டு அந்தக் கட்டத்தில் ...த்தை யாரும் மறந்திருக்க ...ணியை நடிக்கவைக்க ...செய்த பஞ்சாயத்தையும் கேட்டு ...பை மாற்று என்று சொல்லி ... தேனப்பன்.

...ரின் பிடிவாதத்தாலும் ...பாத்திரத்தில் நடித்தார். ...ழுது என்கிறீர்களா? ...ம் மீட்டின்போது ...காமீது காட்டி

...வை வைத் ...பை புகழ்ோ ... தள்ளி ...லாமல் ... நீட்டி ...லாமல் ...காங்க ...பொது ...போது ...தைப் ...னைத் ...ராஜு ...பிடித்த



விஜயகாந்த்-பிரதியுஷா
படம்: தவசி

## குஷ்புவின் வழியில் கனகா

கோடீஸ்வரி மருமகள் என்று சின்னத்திரையில் புகுந்துவிளையாடும் குஷ்பு பெரிய திரையிலும் 'இரண்டுபேர்' என்ற படத்தில் ராம்கியின் ஜோடியாக நடிக்கிறார். குழந்தை பெற்ற பின் நீண்ட இடைவேளை விட்டே வந்துள்ள குஷ்புவுக்கு நல்ல மரியாதை உள்ளதாம்.

இதைப்பார்த்த தேவிகா தன் மகள் கனகாவை வைத்து தனியார் சேனல்களுக்கு நிகழ்ச்சி பண்ணிக் கொடுக்கப்போகிறாராம். நிகழ்ச்சியின் தலைப்பு என்ன தெரியுமா? கேடீஸ்வரி. மகளையும் அழைத்துக் கொண்டு அலையாய் அலைகிறாராம் தேவிகா.

## விஜய்யின் விளையாட்டு

நடிகர் விஜய் இயக்குநர்களுடன் ஒரு வித்தியாசமான விளையாட்டை விளையாடுகிறார். தன்னைத் தேடிவரும் இயக்குநர்களிடம் கால்ஷீட் இல்லை எனச் சொல்லாமல் அப்பாகிட்ட கதையச் சொல்லுங்கள் என்று சொல்லிவிடுவாராம். இப்படிச் சொன்னால் அந்த இயக்குநருக்கு கால்ஷீட் இல்லையென்று அர்த்தமாம். கதையும் இயக்குநரும் பிடித்திருந்தால் உடனே அப்பாவிடம் அழைத்துப்போய் அறிமுகம் செய்து வைத்துவிடுகிறாராம் விஜய். இதை வைத்தே புரிந்துகொள்ளவேண்டியது தான்.

## அஜித்தின் மாநாடு

அஜித் தனது ரசிகர்களை எல்லாம் ஒன்று திரட்டி ஒரு பெரிய மாநாடு நடத்தத் திட்டமிட்டுள்ளாராம். எதற்காக இந்த மாநாடு?

கடந்த வருடம் வெளிவந்த 'தீனா', 'சிட்டிசன்', 'பூவெல்லாம் உன்வாசம்' போன்ற படங்கள் எல்லாமே வெற்றிப் படமாக அமைந்ததுதான் காரணம். இனி நடிக்கும் படங்களிலும் என் ரசிகர்களின் எதிர்பார்ப்புக்கு ஏற்ப தரமான படங்களையே தருவேன் என்கிறார் அஜித்.

மாநாடு நடத்துவதற்காக ரசிகர் மன்ற நிர்வாகிகளை எல்லாம் அழைத்து ஆலோசனை நடத்தவுள்ளாராம். இந்த மாநாட்டை நிக் ஆட்ஸ் சக்கரவர்த்தி பொறுப்பேற்று நடத்தப்போகிறாராம்.

## சபாஷ் சாம்பார் இட்லி

'தமிழன்' படத்தில் விஜய்க்கு ஜோடியாக நடிக்கும் உலக அழகி பிரியங்கா சொப்ரா நம்மூர் சாம்பார் இட்லியை சரிபோடு போடுகிறார்.

220 தமிழ்நாட்டிலிருந்து **மயன்**

## ...யுடன் ஜல்சா செய்த இயக்குநர்

...லகட்டத்தில் இயக்குநர்கள் தங்களது படங்களுக்கான கதையில் கவனம் ...ளோ இல்லையோ படத்தில் ஒப்பந்தமாகும் ஹீரோயினின் உடம்பு சதையில் ...த் தவறுவதில்லை.

...வெளிநாட்டில் படப்பிடிப்பு என்றால் சொல்லவேண்டியதே இல்லை. ...தேவையான குறிப்பிட்ட நபர்கள் மட்டுமே பங்குபெறுவார்கள் அவர்களுக்கு ... அட்ஜஸ்மெண்ட் இருப்பதால் ஃபாரின் லொகேஷனில் ஒரே கூத்தும் ...தான். இதில் பாவப்பட்ட ஜென்மம் ஹீரோயின் நடிகைதான். ஹீரோ ...ாமல் இயக்குநரையும் அன்பான அட்ஜஸ்ட்மண்ட்டில் திருப்திபடுத்த ... சில வேளைகளில பணம் போட்ட தயாரிப்பாளரும் எதிர்பார்த்தால், ...ணம் கோணாமல் அவரையும் திருப்தி படுத்த வேண்டும். இப்படி ஆளாளுக்கு ...டம் பார்ப்பதால் நடிகையின் பாடுதான் வெகு திண்டாட்டமாக அமைந்து

...னவே 'ஜாப்' என்கிற தோல்விப்படம் மூலமாக இயக்குனராக அறிமுகமானவர் ...றெழுத்து நபர். ஏற்கனவே இவர் பெயரில் பிரபலமான நடிகர் ஒருவர் ... 'ஜெ' இன்ஷியல் கொண்ட இவர் இரண்டாவதாக அலைபாயும் நாயகனையும் ...நடிகையையும் வைத்து படம் இயக்கினார். சினேகம் ஏற்கனவே 'லவ்வு ... ஒப்பந்தமாகி இருந்தாலும் இவருக்கு இதுதான் அறிமுகப்படமாக அமைந் ...கமார் கலக்ஷன் தான்.

...லையில் பட வாய்ப்புகள் இல்லாமல் தவித்துக் கொண்டிருந்தார் இயக்குநர். ...த்தில் லோகமான ஒருவர் மாட்டிக்கொள்ள கேரளத்து சீனியர் வாரிச ...ையும் படத்திற்கான அறிவிப்பு வெளியானது. ஆனால் அதற்குள் என்ன ...யாரிப்பாளருக்கும், இயக்குனருக்கும் சிறிய லடாய். இதன் காரணமாக ...பாடு செய்த பத்திரிகையாளர் சந்திப்பு நிகழ்ச்சிக்கு கூட தயாரிப்பாளர் ...லை.

...ன் கதை மலேசியாவில் நடப்பதாக வடிவமைக்கப்பட ... பணியும் மலேசியா, சிங்கப்பூர், தாய்லாந்து போன்ற ...ில் நடைபெற இருக்கின்றன.

...லேசியா போய் இறங்கியதும் இயக்குனரின் சில்மிஷ ... ஆரம்பமானது. படத்தில் ஒன்று வாங்கினா ... இலவசம் என்ற ஸ்டைலில் இரண்டு நாயகிகள் ...பந்தமாகி இருந்தனர். ஒருவர் கன்னடத்து ...கை மற்றொருவர் மும்பை பைங்கிளி. ...இவர்கள் இருவருக்குள்ளும் ஆரம்பத் ...திலேயே நீயா நானா? போட்டி ஆரம்பமானது. இதில் கன்னடப் பார்ட்டி பலமாக அனுபவப்பட்ட பார்ட்டி, இயக்குனரிடம் ...கிட்டுமளவிற்கு அன்பைக் காட்ட மும்பை பார்ட்டிக்கு விளையானது.

ஃபாரின் லொகேஷனில் மும்பை பார்ட்டி இயக்குனரின் பார்வைக்கு கட்டுப்படாமல் முரண்டு பிடித்து ஒத்துழையாமை இயக்கம் நடத்தி இருக்கிறார். அந்த நேரத்தில் வாய்ப்பில்லாமல் வழக்கமான பிஸ்னஸில் பிஸியாக இருந்த மலேசிய நடிகை ஒருவர் இயக்குநரை சந்தித்து கட்டாய விருந்து வைத்து அசத்தி இருக்கிறார். ஃபாரின் தோளே படிந்து விட்டதில் கிறங்கிப் போன இயக்குநர் உடனடியாக மும்பை டிக்கெட்டை தூக்கி கடாசிவிட்டு மலேசிய மஜா பார்ட்டியை ஹீரோயினாக்கிவிட்டார்.

பெயரளவிற்கு நடிகை கால்ஷீட்டில் பிரச்சனை என கதை திரித்திருக்கும் இயக்குனர் இப்போது மலேசிய மங்கையின் மடியில்தான் ஆனந்தமாக துயில் கொள்கிறாராம். ஆள் மாறினாலும் கன்னடப் பார்ட்டி கவனிக்க வேண்டிய நேரத்தில் கவனித்து இடத்தை தக்க வைத்துகொண்டார். மும்பை பார்ட்டி சாபம் விட்டுவிட்டு பேக்கப்பாகிவிட்டார்.



ஜெயாரே

## ...ுகிறோம்

...ாசப் பழகி அவர்களிடம் ... கொடுக்காமல் பழகு ... பிறகு நான் இப்போ ...கிற பணத்தை ...மிடம் சிக்கி கஜா ...ாய் பெருகிவிட் ... மனம்விட்டுப் ...ான பெரிய ... அதிர்ச்சியில் ...ர்கள்.

... என்று ...ப்பில் ...லையில் ...ப்பவர் ...ாமல் ...ரிராக ... சந்தே ...கிறார்



ராஜு சுந்தரம்-மானஜி (அறிமுகம்)
படம்: [illegible]

## மினி சினி

★ நடிகர் முரளி 12 வருடங்களுக்குப் பிறகு ஒரு கன்னடப் படத்தில் நடிக்கிறார். இந்தப் படம் தமிழிலும் டப் செய்யப்படுகிறது.

★ மீனா மீண்டும் பிஸியான நடிகையாகிவிட்டார். தமிழில் 'தயா', 'தேவன்', 'கிளிக்', 'வல்வார்ன்', 'காதலே சுவாசம்' ஆகிய படங்களும், மலையாளத்தில் ஜெயராமுக்கு ஜோடியாக ஒரு படமும், தெலுங்கில் வெங்கடேஷிக்கு ஜோடியாக ஒரு படமும் என அரை டசின் படங்கள் இப்போது அவர் கைவசம் வைத்திருக்கிறார்.

★ சூப்பர் குட் பிலிம்ஸ் தயாரிக்கும் ஒரு படத்தின் பெயர் 'அற்புதம்'. அந்தப் படத்தை இயக்கும் டைரக்டரின் பெயரும் அற்புதமாம். படமும் அற்புதமாகத்தானே இருக்கும். எல்லாமே அற்புதம்.

★ தவசி படத்தை தயாரித்த சிஜெ. கம்பைன்ஸ் நிறுவனம் அடுத்து இயக்குநர் சீமான் டைரக்ஷனில் ஒரு படத்தை தயாரிக்க இருக்கிறது. படத்தின் பெயர் என்ன தெரியுமா 'திலீபன்'.

★ டி.ராஜேந்தரின் உதவியாளர் தேவிகுமார் 'சைட்' என்ற பெயரில் பிரசாந்தை வைத்து புதிதாக படம் டைரக்ட் செய்கிறார்.

★ 'சேது' படத்தை தயாரித்த தன் மூலம் விக்ரம், பாலா இருவருக்கும் நல்ல வாய்ப்பையும் வாழ்க்கையையும் ஏற்படுத்திக் கொடுத்தவர் ஷ்மதா புரொடக்ஷன்ஸ் சந்தசாமி. இவர் அடுத்ததாக 'மயில்', 'சந்திரா' என்ற இருவேறு பெயர்களில் படங்களைத் தயாரிக்க உள்ளாராம்.

## இனியும் நினையேனடி

பூவென நினைத்து
தண்டின் மேல்
மெல்ல மெல்ல
ஏறி வந்தவனை
முள்ளால் குத்தினாயே
இனியும் நினையேனடி...
***
புன்சிரிப்பை
பஞ்சாமிர்தம் என நினைத்து
சுற்றி சுற்றி
வந்தவனுக்கு
விஷமருந்தை அளித்தவளே
இனியும் நினையேனடி...
***
தேரென நினைத்து
தெருவோரம் காத்திருந்த என்னை
தெருக்கள்ளன்
என்று நினைத்து
கல்லால் அடிக்கவிட்டாயே
இனியும் நினையேனடி...
***
விளக்கேற்ற நீதான்
வரவேண்டுமென்று
வீடு தேடி வந்தவனை
வீதியிலே தள்ளியவளே
இனியும் நினையேனடி.
***
சிநேகிதர்கள் ஏசினாலும்
சிந்தையில் குடி கொண்டுவிட்டாய்
என்பதற்காக
சுற்றி சுற்றி வந்தவனை
சுட்டெரித்தவளே
இனியும் நினையேனடி...
***
அன்புக்கும் நீதான்
ஆசைக்கும் நீதான்
என்பதற்காக
அனுதினம் உன்னை
ஏந்தியவனை
கடைசியில் ஏசியே
மனதை புண்படுத்தியவளே
இனியும் நினையேனடி...
***
உனக்கு,
நான்தான் கணவனென்று
உயிரை விட்டவனை
உளி கொண்டு
அடித்தவளே... உன்னை
இனியும் நினையேனடி...

ப.விநாயகமூர்த்தி-புளும்பீல்ட்-
மஸ்கெலியா.

## எந்தப் பாதை எங்கே பயணம்...?

இதயத்தை உலுக்கியெடுக்கும்
உறவுகளை
காயமில்லாமல் உரசிப்பார்க்கும்
ஞானமிருந்திருந்தால்
மரணத்தை
மடியில் கட்டிக் கொண்டு
அவஸ்த்தைப்பட்டு
அழுது புலம்பியிருக்கமாட்டேன்!
•••
நேற்றும் இன்றும்
எனைச் சூழ்ந்திருந்த
உறவுகளால் ஆன
கவலைகள்
வாழ்வின் பூங்காவிற்குள்
நிரந்தரமாக
முகாமிட்டுக் கொண்டதனால்
வசந்தத்தின் வாசல்
வெற்று வானமாக...
ஒளியிழந்து போயுள்ளது!
•••
ஓராண்டுக்குள்
ஓராயிரம் சந்திப்புக்களோடு
உணர்வுகளை
அவள் நினைவுகளால்
வசந்தமாக்கியவளாக...,
இடைநடுவில்
விடை பெற்றதனை
கண்ணீரில்
கவிதையாக்காமல்
வேறு எப்படியண்ணா....?
•••
சிறகுகள் விழுந்திருந்தால்
விழித்துக் கொண்டிருப்பேன்!
உனக்கும்
சுமையிருந்திருக்காது?
வெட்டப்பட்டதனால்...
தீயில்
வெந்த கொண்டிருக்கின்றேன்
சிறகடிக்கமுடியாமல்...!
•••
உறவுகளை
சுட்டெரித்துச் செல்லும்
பிரவினை நினைத்து
அழாமல்- ஆசை தீர
சிரிக்கவா முடியும்?
•••
கவலைகளை-கருவில்
சுமந்து கொண்டு
நான்
பிரசவிக்கும் குழந்தைகள்
சிரித்தா பிறக்குமென்கிறாய்?
•••

முகம்மது ஹாரீத்-
அட்டாளைச்சேனை-11.

## யாருமில்லை

என் புன்னகைக்காக
எனக்கென
யாருமில்லை...
★
மனது சுருங்கிய
மனிதர்களுக்கு
மத்தியில்
மனித நேயம்
தேடுகிறேன்...
★
நிதர்சனமில்லா
உலகில்
நித்ய நேசம்
தேடுகிறேன்...
★
பொய்பேசி
பொழுது கழிப்பவர்களிடம்
உண்மை நட்பிற்கு
உறுதியில்லை...
★
காசிருந்தால்
காலனும்
நண்பனாகும்
காலத்தில்...
★
எல்லோருக்கும்
யாதுமாகி
நிற்கிறேன்...
★
என்றாலும்
என்
புன்னகைகாண
எனக்கென
யாருமில்லை....

ஆகஸா-கத்தார்.

## காலத்தின் கோலம்

என் இவளே...!
ஒருமுறை பார்த்தாலும் போதும்
உயிர் பெற்று எழும் சிலை நீ
***
ஒருமுறை பேசினாலும் போதும்
உள்ளத்தில் இனிக்கும் சுவை நீ
***
ஒருமுறை சிரித்தால் போதும்
மனதில் ஒளிவீசும் முத்தாரம் நீ
***
ஒருமுறை அசைந்தால் போதும்
என் உடலெல்லாம் மின்சாரத் தீ பாயும்.
***
பல முறை என் கனவுகள் பறந்தன
உன்னைத் தேடி...
***
பலமுறை என் நினைவுகள் மகிழ்ந்தன
உன்னை நாடி...
***
பலமுறை என் உணர்வுகள் பொலிந்தன
உன்னைக் கூடி.
***
கனவுகளாய் காலமெலாம் கழித்த பின்பு
கடற்கரையில் உனை ஒரு நாள் கண்ட போது
***
நீ கணப் பொழுதில் உணர்த்தி விட்டாய்
கண்களால் அன்று-நான்
காலமெல்லாம் படித்தும் மறந்துவிட்ட ஒன்று
அது காலத்தே பயிர் செய் என்று...!

ரி.எம்.ராஜா-
மட்டுநகர்.

## போதும் போதும்

விஞ்ஞானத்தை விஞ்சிய..
சோதிடத்தை நம்பி
சோடை போனது போதும் போதும்.
•••
வர்க்க உணர்வின்
வளர்ச்சியினால்
எதிர் கொண்ட
இன்னல்களும்
ஏற்பட்ட ஏமாற்றங்கள்
போதும் போதும்.
•••
ஆயிரமாயிரம் ஆண்டுகளாய்
அடங்கி அடிமைகளாய்
அல்லல் பட்டது போதும் போதும்.
•••
மகத்தான மானிடனே...
மடமையில் மாய்ந்து
மனிதத்தை தொலைத்தது போதும் போதும்
•••
சாதிக் கொடுமைக்கு..
சற்றும் சளைக்காத பெண்ணடிமை
சரித்திரம் படைத்தது போதும் போதும்
•••
வீழ்ந்தது போதும்
விழித்துக் கொள்
விடியல் உன் வரவுக்காய்
விருப்பம் கொண்டுள்ளது.

எஸ்.மனோஹரன்-
ஸ்ரீபாத கல்வியற் கல்லூரி.

## சகோதரத்துவ தினம்

சகோதரர்களாக
வாழப் போவதாகத் தான்!
ஆங்கில சாம்ராஜ்யத்திடம்
அன்று சொன்னோம்!
***
ஆனால்..! பங்காளிகளாகிச்
சண்டையிட்டுக்-கடைசியில்
பயங்கரவாதிகளோடு
சேர்க்கப்பட்டுவிட்டோம்!
***
உரிமைகளைத்
தாரைவார்த்துவிட்டு-இன்று
உருப்படாமல் போனோம்!
***
'நீல' வானின் கீழே
இன்பத்திற்கு எல்லையில்லை.
என்றார்கள்-தமிழர்
எல்லைகள் வரையும்
துயர்கள் நீண்டன!
***
இன்று! பச்சை என்றாலே
பசுமை தரும்! என்கிறார்கள்!
நம்ப நட!-ஆனால்
நம்பி நடவாதே! என்பார்களே!
தெரியும்.
***
தமிழ் உறவுகள்-இன்று
தம் சகோதரர்களை
இனம் கண்டுவிட்டார்கள்!
நாட்டின் சகோதரர்களை
நாம் விரைவில் காண்போமா?
***
ஜனவரி முதல்-நாம்
எல்லோருமே சகோதரர்கள்
தானா? இல்லை...
'ஜனவரி முதலில்'
மட்டும் தானா!-என்பது
கேள்விக் குறி!
***
ஓர மிருகத்தின் குட்டிகள்!
ஓர் பறவையின் குஞ்சுகள்!
எல்லாமே! தன்-தாய்
மொழியைத் தான்
பேசுகின்றன.
***
எந்தச் சகோதரங்கள்
ஆளுக்கொர தாய்மொழியை
பேசுகின்றார்கள்!-சரி
ஆகட்டும் பார்ப்போம்!

சம்பூர்-எம்.வதனரூபன்.

## தேன் கிண்ணம்

## அவளின் அசைவுகள்

'உன் ஓரக்கண்
பார்வை எனக்குப்
பிடிக்கும்'- 'அது
என்னைப் பார்ப்பதனால்..!
***
'உன் இதழ்கள்
பிடிக்கும்'- 'அது...
என் இதயத் துடிப்பை...
அதிகப் படுத்துவதால்...!
"சுற்றும் பூமியைப் போல்
சுழலும் உன்
வேல் விழி பிடிக்கும்"...
அது-என்னை...
வேட்டையாடுவதால்...!
***
உன் நடை
எனக்குப் பிடிக்கும்:
பஞ்சுப் பாதத்தால்-என்
நெஞ்செனும் நிழலை...
மிதித்துச் செல்வதால்...!
***
'உன் நாணம்
எனக்குப் பிடிக்கும்?...'
என மனதின் கேள்விகளுக்கு
நளினமாக-நீ
பதில் சொல்வதால்...
***
"உன் மௌனம்..
எனக்குப் பிடிக்கும்"
என் மனதின்
ஆசைகளுக் கெல்லாம்...
அது சம்மதம் தெரிவிப்பதால்...!
***

எஸ்.தமிழாம்பிகை ஜெகன்-
நானாட்டான்.

## உன்னால் ஒரு மாற்றம்


வந்து பார்த்தேன்
வசந்தத்தின் வாசலை...
வான் நிலவும்
வரண்டு போனது;
மணந்த மலர்கள்
வாடித் தெரிந்தது;
***
மேக முகடுகளை
மோதிப் பறித்த
மேட்டுச் சோலைகள்,
கானக் கவி பாடிய
கார்ங் குயில்
காற்றில் பிறந்த
வாடைத் தென்றல்
வஞ்சி எந்தன்
நெஞ்சில் அகன்ற
மாயம்...?
***
என்ன மாற்றம்
என்னு ளென்று
எண்ணத் தோன்றியது...
அடிமனம் அகழ்ந் தெடுத்த
விடை கூறியது;
கொஞ்சங் கொஞ்சமாய்
கொன்று வந்த-உன்
வஞ்சமில்லாத உறவு..
என் வசந்த கால
உணர்வுகளையே
மிஞ்சிப் போகிறதென..!

லைலா அக்ஷியா அக்ரம்-குருணாகல்.


## பேனா நண்பர்கள்



பெயர்: எஸ்.எல். நஸீர்
வயது: --
முகவரி:
227/1A, காயர் வீதி,
ஏறாவூர்-02
பொழுது போக்கு:
கிரிக்கட், பத்திரிகை,



பெயர்: சி.பார்த்தீபன்,
வயது: 20
முகவரி: ilgenweid
Str-4, 8840
Einsiedeln,
Switzerland.
பொழுது போக்கு:
பத்திரிகை,
வானொலி, T.V.



பெயர்:
ஏஸ். பிறேம்குமார்,
வயது: 26
முகவரி:
சுதுமலை தெற்கு,
மானிப்பாய்.
பொழுது போக்கு:
வழமையானவை.




## தடை செய்யும் கோபம்

**கோ**பம் என்பது உள்ளத்திலிருந்து பொங்கி வரும் உணர்ச்சி. சாம்பலுக்கு அடியில் மறைந்திருக்கும் அக்கினி போல உள்ளத்தின் அடியில் ஒளிந்து கொண்டிருக்கிறது.

இது நம் உடலில் ஒரே ஒரு அங்கத்தை முதலில் தாக்குகிறது. அந்த அங்கம் சினத்தின் பிடியில் சிக்கி அடிமையாகிவிட்டால் உடல் முழுவதும் அதற்கு அடிபணிய வேண்டியது தான். அந்த அங்கம் உள்ளம்தான்.

உள்ளம் பண்பட்டு விட்டால் அதிலே கோபம் வாலாட்ட முடியாது. உடல் பதறாது. விபரீதம் விளையாது. தனக்குத் தானே துயரத்தை உருவாக்காது.



நபிகள் நாயகத்திடம் "ஐயா எனக்கு ஒரு உபதேசம் செய்யுங்கள் செயலாற்றத் தகுந்த சிறந்த வழியைக் கூறுங்கள்" என்று ஒருவர் கேட்டார்.

உடனே நபிகள் நாயகம் கோபத்தை விட்டொழியுங்கள் என்றார். கேட்டவருக்கு திகைப்பு ஏற்பட்டது.

"நீங்கள் என்ன கூறுகிறீர்கள்" என்று திருப்பிக் கேட்டார். உடனே நபிகள் "கோபம் என்பது பொல்லாதது. கோபத்தை விடுவது நல்ல செயல். யார் மீதும் கோபப்படக்கூடாது. கோபம் ஏற்பட்டால் அடக்கிக் கொள்ளும். இது போதும்" என்றார்.

ஒரு முனிவர் மக்களிடம் கேட்டார் "வீரன் என்பவன் யார்?" கூடியிருந்தவர்கள் கூறினார்கள் "மற்போரில் அபிரிமிதமான வெற்றி பெறுபவனே வீரன்."

புத்தர் கொஞ்ச நேரம் அமைதியாக இருந்து விட்டு கூறினார் கோபத்தை ஒதுக்கிவிடுங்கள்.

கோபத்தால் உந்தப்பட்ட ஒருவன் எதைச் செய்வான், எதைச் செய்ய மாட்டான் என்று சொல்ல முடியாது. எனவே கோபத்தை அடக்கியாள வேண்டும் கோபமே சகல தீமைகளுக்கும் திறவுகோல்.

புத்தருடைய பொன் மொழியைக் கடைப்பிடித்தால் நிச்சயமாக நன்றாக வாழமுடியும். எந்த அறிஞர்களுடைய வாழ்க்கையை எடுத்துக் கொண்டாலும் கோபத்தை அடக்கிய பின்புதான் அறிஞர்களாகி இருப்பதை உணரமுடியும்.

அதனால் நம்முடைய வெற்றிகரமான வாழ்க்கைக்கு கோபம் தேவை இல்லை என்பதனைக் கட்டாயம் உணர்ந்து கொள்ளவேண்டும்.

முனிவர் இதைக்கேடடு சிரித்தார். மக்களுக்கு ஒன்றும் புரியவில்லை.

"நாங்கள் கூறியது சரியான விடை தானே" என்றார்கள். உடனே முனிவர் கூறினார். "நீங்கள் சொல்லுவது தவறு உங்கள் அபிப்பிராயத்தை மாற்றி அமைத்துக் கொள்ளுங்கள். சினம் பொங்கி வரும் போது தன் உள்ளத்தை அடக்கியாள்பவனே உண்மையான வீரன்" என்றார். இதைக்கேட்டு எல்லோரும் மகிழ்ந்தனர்.

## இந்தவாரம் உங்கள் பலன்

13.01.2002 தொடங்கி 19.01.2002 வரை

### சோதிட மாமணி தில்லை

### மேடம்:

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்,) புதிய முயற்சிகள் மேற்கொள்வதற்கு ஏற்றகாலம். பண வரவு, கௌரவம், புகழ் மேலோங்கி நிற்கும். உத்தியோகத்தில் உள்ளோர் மேலதிகாரிகளின் உதவிகளை பெறுவர். மாணவர்களுக்கு கல்வித் தடைகள் நீங்கும். விவசாயிகள், வியாபாரிகள் எதிர்பார்த்த இலாபம் வந்தடையும்.

அதிஷ்ட நாள் : புதன்.
அதிஷ்ட இலக்கம் : 03.

### இடபம்:

(கார்த்திகை பின்முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை,) தொழில் சிறப்பும், மன மகிழ்ச்சியும் உண்டாகும். பொருளாதார ரீதியான முன்னேற்றம் கிடைக்கும். உத்தியோகத்தில் ஏற்பட்டிருந்த பிரச்சனைகள் தீரும். மாணவர்களுக்கு கல்வியில் உயர்வு நிலை உண்டாகும். விவசாயிகள், வியாபாரிகள் உரிய இலாபடைவர்.

அதிஷ்ட நாள் : திங்கள்.
அதிஷ்ட இலக்கம் : 02.

### மிதுனம்:

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன்முக்கால்) காரியானுகூலம், தொழில் விருத்தி, பணவரவு என்பவற்றுக்கு இடமுண்டு. தொழில் பிரச்சனைகள் சிலருக்கு தீரும். உத்தியோக ரீதியாக இருந்து வந்த கஷ்டங்கள் குறையும். மாணவர்களுக்கு கல்வியில் முன்னேற்றம் உண்டு. விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம் அடைவர்.

அதிஷ்ட நாள் : செவ்வாய்.
அதிஷ்ட இலக்கம் : 04.

### கர்க்கடகம்:

(புனர்பூசத்து நாலாங்கால், பூசம், ஆயிலியம்,) கருமங்களில் வெற்றியுண்டு. பொருள்வரவு சிறந்து விளங்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். உத்தியோகத்தில் இருந்து வந்த கஷ்டங்கள் தீரும். மாணவர்களுக்கு கல்வியில் மாற்றம் ஏற்படும். விவசாயிகள், வியாபாரிகள் எதையும் திட்டமிட்டுச் செய்வது நல்லது.

அதிஷ்ட நாள் : புதன்.
அதிஷ்ட இலக்கம் : 05.

### சிங்கம்:

(மகம், பூரம், உத்தரத்து முதறகால்,) மனக்குறை நீங்கும். தொழிலில் இருந்து வந்த கஷ்டங்கள் தீரும். உத்தியோகஸ்தர்கள் தமது கருமங்களில் விழிப்புடன் நடந்துகொள்ளவும். மாணவர்களுக்கு கல்வி நிலையில் உயர்ச்சியுண்டாகும். விவசாயிகள் வியாபாரிகள் குறைந்த இலாபமடைவர்.

அதிஷ்ட நாள் : வியாழன்.
அதிஷ்ட இலக்கம் : 07.

### கன்னி:

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை,) மனக்குறை நீங்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். வெளியிடப் பிரயாணங்களால் தொல்லைகள் உண்டாகும். உத்தியோகஸ்தர்கள் மேலதிகாரிகளுடன் பகைத்துக் கொள்ளாமலிருப்பது நல்லது. மாணவர்களுக்கு கல்வியில் முன்னேற்றம் தென்படும். விவசாயிகள், வியாபாரிகள் இலாபம் பெறுவர்.

அதிஷ்ட நாள் : வியாழன்.
அதிஷ்ட இலக்கம் : 06.

### துலாம்:

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன்முக்கால்,) பெரியோர் உதவி, பணவரவு செய்தொழில் நன்மையுண்டு. பிரயாணங்களில் கவனமுடன் செயற்படவும் உத்தியோகத்தில் உள்ளோர் மாற்றங்களுக்கு ஆளாகுவர். மாணவர்களுக்கு கல்வியில் ஏற்பட்டிருந்த தடைகள் விலகும். விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம் அடைவர்.

அதிஷ்ட நாள் : செவ்வாய்.
அதிஷ்ட இலக்கம் : 05.

### விருட்சிகம்:

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை,) புதிய முயற்சிகளில் வெற்றியுண்டாகும். குடும்பத்தில் ஏற்பட்டிருந்த கஷ்டநிலை மறையும். உத்தியோகத்தில் உள்ள சிலருக்கு மேலதிகாரிகளினால் கஷ்டங்கள் தோன்றும். மாணவர்களுக்கு கல்வியில் மாற்றங்களை தரும். விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபமடைவர்.

அதிஷ்ட நாள் : திங்கள்.
அதிஷ்ட இலக்கம் : 02.

### கிரக நிலை

| | |
|---|---|
| மகரம் | - சூரியன், புதன். |
| மீனம் | - செவ்வாய். |
| இடபம் | - சனி. |
| மிதுனம் | - வியாழன், இராகு. |
| தனு | - வெள்ளி, கேது. |

சந்திரன்: தனு, மகரம், கும்பம், மீனம் இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்

### தனு:

(மூலம், பூராடம், உத்திராடத்து முதற்கால்) வீண் மனக் கசப்புக்களுக்கு இடம் தரும். வெளியிடங்களில் பிரயாணம் செய்வதை தவிர்க்கவும். பொருள்வரவு மந்தமாகும். உத்தியோகஸ்தர்கள் மேலதிகாரிகளை பகைத்துக் கொள்ளாமலிருப்பது நல்லது. மாணவர்களுக்கு கல்விச் சிறப்புண்டு. விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபமடைவர்.

அதிஷ்ட நாள் : புதன்.
அதிஷ்ட இலக்கம் : 02.

### மகரம்:

(உத்தராடத்துப் பின்னரை, திருவோணம் அவிட்டத்து முன்னரை) தொழில் கஷ்டங்கள் மறையும். பொருள் வரவு, பெரியோர் உதவி கிடைக்கும். உத்தியோக ரீதியாக ஏற்பட்டிருந்த சிரமங்கள் மறையும். மாணவர்களுக்கு கல்வி கஷ்டங்கள் குறையும். விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம் அடைவர்.

அதிஷ்ட நாள் : வெள்ளி.
அதிஷ்ட இலக்கம் : 07.

### கும்பம்:

(அவிட்டத்து பின்னரை, சதயம், பூரட்டாதி முன்முக்கால்) மனக்குறை நீங்கி மகிழ்ச்சி பெருகும். குடும்ப கஷ்டங்கள் மறையும். பொருள்வரவு சுமாராக இருக்கும். உத்தியோகஸ்தர்களுக்கு இருந்து வந்த சிரமங்கள் மறையும். மாணவர்கள் கல்வியில் கூடிய கவனமெடுப்பது நல்லது. விவசாயிகள், வியாபாரிகள் இலாபமடைவர்.

அதிஷ்ட நாள் : செவ்வாய்.
அதிஷ்ட இலக்கம் : 03.

### மீனம்:

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி ரேவதி,) மனதில் ஏற்பட்டிருந்த கலக்கங்கள் மறையும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். பெரியோர் உதவியுண்டு. உத்தியோகஸ்தர்கள் மேலதிகாரிகளுடன் இணைந்து நடப்பது நல்லது. மாணவர்களுக்கு கல்வியில் உயர்ச்சி உண்டாகும். விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம் பெறுவர்.

அதிஷ்ட நாள் : செவ்வாய்.
அதிஷ்ட இலக்கம் : 04.

# லேடீஸ் ஸ்பெஷல்

லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல்

## மனசே ரிலாக்ஸ்...

**பொ**துவாகவே பெண்களுக்கு வேலைப்பளு அதிகம். அதுவும் வேலைக்குப் போகும் பெண்களைப் பற்றி சொல்லவே வேண்டாம். காலையில் எழுந்து குளித்து, கணவனுக்கும், குழந்தைகளுக்கும் டிபன் கொடுத்து... மதிய உணவையும் பேக் செய்து... ஏதோ கொஞ்சம் சாப்பிட்டு, அரக்கப் பரக்க ஆபீசுக்கு ஓடுவார்கள். இப்படிப் பட்ட அவசர வாழ்க்கை முறையில் பெண்களுக்கு களைப்பு, டென்ஷன் இதெல்லாம் ஏற்படுவது சகஜம்தான்! இந்த மன இறுக்கத்தைப் போக்க ஒரு எளிய வழி மூச்சை நன்றாக இழுத்து விடுவது. அப்படி நீங்கள் மூச்சை நன்றாக உள்ளிழுக்கும் போது... உங்கள் உடம்பின் ஒவ்வொரு செல்லுக்கும் ஆக்சிஜன் கிடைக்கிறது. இதனால் உங்களுக்குப் புதுத்தெம்பும், புத்துணர்ச்சியும் ஏற்படுகிறது.

ரிலாக்ஸ் கிடைக்க 10 நிமிடம் வாக் போகலாம். பரபரப்பான வாழ்க்கையில் இருந்து ரிலீப் கிடைக்கும் கீழ்க் கண்ட வழிகளைக் கையாளலாம்.

★ உங்களைச் சுற்றி இருக்கும் விஷயங்களை ரசியுங்கள்.

★ இயற்கையைப் பார்த்து மகிழலாம்.

★ இருப்பதைக் கொண்டு திருப்தியடைய வேண்டும்.

★ கடந்தகாலத்தையே நினைத்து வருந்தாமலும், எதிர்காலம் பற்றி கனவு காணாமலும், தற்காலத்தில் வாழப் பழக வேண்டும்.


★ உங்களுக்குப் பிடித்தமான கலரில் டிரஸ் பண்ணுங்கள். உற்சாகமாக இருக்கும்.

★ உங்களுக்கு ஊக்கமும், உற்சாகமும் கொடுக்கக் கூடிய நபர்களுடன் சேர்ந்திருக்க முயற்சிக்க வேண்டும்.

★ சோர்வாக இருக்கும்போது குளிர்ச்சியாக ஒரு ஜூஸ் குடிக்கலாம்.

★ ரொம்பவே களைத்துப் போயிருந்தால்... ஒரு குட்டித் தூக்கம் போடுங்கள்.

## ஆபரணங்களைப் பராமரிப்பது எப்படி?



### முத்துப் பராமரிப்பு

முத்து நகைகளை எப்போதும் ஸ்பிரிட்டில் நனைத்த பஞ்சால்தான் துடைக்க வேண்டும். அரிசி மாவுகூட முத்து நகைகளை சுத்தப்படுத்த உதவும். செயற்கை முத்துக்களை பஞ்சில் சுற்றி, தண்ணீர்படாமல் வைத்திருந்தால் தான் எப்போதும் புதிது போலப் பளபளக்கும். செயற்கை முத்து நகைகளை வாங்கியதுமே அவற்றின் மேல் கலர் லெஸ் நெயில்பாலிஷால் ஒரு கோட் தடவி வைத்து விட்டால் பளபளப்பு குறையாமலிருக்கும். முத்து நகைகளை வைரத்துடன் சேர்த்து வைத்தால், முத்து பாதிக்கப்படும். வெள்ளைப் பூசணிக் காயின் சாறுகூட முத்தை சுத்தப்படுத்த உதவும்.

### தங்கப் பராமரிப்பு

தங்க நகைகளை எப்போதும் மென்மையான, சுத்தமான துணியால் முதலில் துடைக்க வேண்டும். சிறிதளவு மஞ்சள்பொடியை நகைகளின் மேல் தடவித் தேய்த்தால் அவை புதிது போலப் பளபளக்கும். வினிகர் கலந்த தண்ணீரில் ஒரு மணி நேரத்திற்கு ஊற வைத்தும் தங்க நகைகளை சுத்தப்படுத்தலாம். பழைய டூத் பிரஷ்ஷால் தேய்த்துக் கழுவலாம். பூந்திக் கொட்டையை ஊற வைத்து தண்ணீரில் அவற்றைப் போட்டு சுத்தப்படுத்தினால் பாலிஷ் போட்டது போல இருக்கும். கல் பதித்த நகைகளை வெள்ளை நிற வெல்வெட் தணியில் சுற்றி நீராவி படும்படி வைத்திருந்து துடைத்தால் அவை பளபளக்கும்.


## செல்வாஸின் 7 சல்வார் பரிசுப் போட்டி

நவநாகரீக மங்கையர்
தரமான சல்வார்களுக்கு
தலைநகரில் நாடும் ஒரே இடம்

SELVAS

No. 4, Nelson Place (Near H.N.B)
Wellawatta, Colombo-06. Tel: 552328

மகளிர் மட்டும் : மகளிர் மட்டும்



★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே சல்வார் பரிசு வழங்கப்படும்.

★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**செல்வாஸின் வாரம் ஒரு சல்வார் 8**

பெயர்:......................
முகவரி:......................
......................
தொழில்:......................

உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப் படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 19-01-2002
அனுப்பவேண்டிய முகவரி:- 'செல்வாஸின் வாரம் ஒரு சல்வார்', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

## இந்த வாரம் யாருக்கு சல்வார்?
## மாளிகாவத்தை வாசகிக்கு அதிஷ்டம்!

இவ்வாரம் சல்வார் பரிசுபெறும் வாசகி இவர்தான்

ஜோ. சோபினி,
மாளிகாவத்தை, கொழும்பு-10.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்
அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!
இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.


# அனிதாவின் காதல்கள் 27



"**வ**ார்றப்பதான் பார்த்துட்டு வரேன். உங்க அம்மா இப்ப நல்லாயிருக்காங்க. நீட்டா, காட்டரைஸ் பண்ணிட்டு ப்ளாஸ்திரி ஒட்டி இன்ஜெக்ஷன் போட்டாச்சு. ரெண்டு நாள்ல சரியா போயிரும்.. வா. பளிச்சுன்னு ஏதாவது மாடர்ன் டிரஸ் பண்ணிக்கிட்டு வா. மது அன்னிக்குப் போட்டுக்கிட்டு வந்தாளே- அது என்ன... காகராவா- தாகராவா... அது போல ஏதாவது போட்டுக்கிட்டு வா... இல்லைன்னா க்ளப்ல உன்ன விட மாட்டாங்க" என்ற வைரவன், அனிதாவின் முகம் மாறுவதைக் கவனித்து "சும்மா வெளையாட்டுக்குச் சொன்னேன். கிளப்பே அப்பாவதுதான். நீ வெள்ளைப் புடவையில போனாக்கூட உள்ள விடுவாங்க. கவலைப்படாதே. உங்கிட்ட தமாசாவே பேச முடியாது போலிருக்கே. போன் ஒர்க் பண்ணுதா? 'தத்கால்' முறையிலே அவசர கனெக்ஷனுக்கு முப்பதாயிரம் கொடுத்து உனக்குன்னு நம்பர் வாங்கி வெச்சிருக்கேன். இங்க ஒரு ஃபாக்ஸ் மெஷின் வெச்சுர்றேன். தினப்படி உனக்கு ஆபீஸ்லருந்து நான் லெட்டர் எழுத..."

"உங்கப்பா அந்த நாயைச் சுட்டுட்டார்" என்றாள் அனிதா.

"ஆமாம், கேள்விப்பட்டேன்! சில வேளைங்கள்ல இந்த மாதிரி கிறுக்குத்தனமா ஏதாவது செய்யும்! வயசாயிடுச்சில்ல.. அதான்! அம்மா வந்தப்புறம் இருக்கு. பயப்படாதே.. உன்னை ஒண்ணும் செய்துட மாட்டாரு..." வைரவன் பேசிக்கொண்டே கடிதங்களைப் படித்துக் கொண்டிருந்தான்.

"ஆபீஸுக்கு ஒரு முறை கூட்டிட்டுப் போறேன்..." என்றான்.

"நான் வந்திருக்கேன்...மது கூட" அனிதா சொன்னாள்.

"அது ராதாகிருஷ்ணன் சாலை ப்ராஞ்சு! ஹெட் ஆபீஸ் சோழா பக்கத்தில இருக்குது... அங்கதான் அப்பா வந்து உக்காருவாரு. நம்மகிட்ட எத்தனை கம்பெனி இருக்கு தெரியுமா? பதினெட்டு! இன்னிக்குப் புதுசா ஒண்ணு அறிவிக்கப் போறோம். பேரு என்னன்னு தெரியுமா?"

அனிதா 'தெரியாது' என்பது போல தலையாட்டினாள்.

"அனிதா ஸின்தட்டிக்ஸ்'னு உம்போல! முதல் ஒரு லட்சம் 'கன்வர்ட்டபிள் டெபன்சர்ஸ்' இஷ்யு பண்ணி ஷேர் வெளிய விடறோம். எல்லாம் தங்கம் மாதிரி! ஜப்பான்காரனோட கொலாபரேஷன்னு அறிவிச்ச ஒரு மணி நேரத்தில் ஓவர் ஸப்ஸ்க்ரைப் ஆயிரும்."

"நீங்க சொல்றது எதுவும் புரியலை" என்றாள் அனிதா.

"புரியாட்டி ஒண்ணும் தட்டுக்கெடலை" என்றபடி முதுகில் முத்தமிட்டான்.

"அனிதா அதிக நேரமில்லை... சின்னதா ஒரு செஷன் போடலாமா!" என்றான் கண்களில் குறும்புடன்!

அப்படியே அனிதாவின் இடுப்பை அணைத்துப் படுக்கையில் வீழ்த்தினான். அவள் முகத்தில் முகத்தை அழுத்தி முத்தமிட்டபோது உதட்டுக்கு ரத்தம் கசியும் அளவுக்கு அத்தனை வேகம் இருந்தது.

"தாடி குத்தறது."

"ஓ.. இன்னிக்கு ஷேவ் பண்ணிக்கலையா?" என்று எழுந்தான். அனிதா தன் கலைந்த உடைகளைச் சரி செய்து கொண்டாள்.

"நீ என் அம்மாவைச் சந்திக்கலை இன்னும்" என்றான் வைரவன்

"பாத்தேனே காலைல."

"சரோஜாம்மா எனக்குச் சித்தி. அப்பா ரெண்டாம் கல்யாணம் பண்ணிக்கிட்டாரு என் அம்மா இறந்துட்டாங்க. போட்டோ காட்டறேன்... கொஞ்சம் அதிர்ச்சியா இருக்கும்" என்றபடி அறையை ஒட்டியிருந்த மற்றொரு அறைக்கு அனிதாவை அழைத்துச் சென்றான்.

கீழே வினைல் பரவி இரும்பு பீரோக்கள் வரிசையாக வைத்திருந்த அந்த அறையில் மாலை போட்டு ஒரு படம் வைக்கப் பட்டிருந்தது. படத்தை எடுத்துத் தூசி தட்டி ஜன்னலைத் திறந்து வெளிச்சத்தில் அதைக் காட்டினான்.

"பாத்த முகமா தெரியுது இல்லையா? இதுதான் எங்கம்மா..." என்றான், வைரவன்.

அனிதா "அப்படியா!" என்றாள்.

"சரியா பாரு... யார் மாதிரி இருக்கு?"

"தெரியலை...." என்றாள்.

"ம்... வந்து... உன் முகம்! அனிதா உனக்குத் தெரியலையா? என்ன ஒரு ஸிமிலாரிட்டி-அதிசயமான ஒரு பொது ஒற்றுமை அதே தாடை, கன்னம், கண்ணு..."

★★★

**கி**ளப்பில் வைரவனைப் பலர் சூழ்ந்து கொள்ள அனிதா தனியாக நின்று கொண்டிருந்தபோது, "ஐ'ம் தாமு... என்னை அந்தக் கூட்டத்தில் பார்த்திருப்பியே... ஞாபகம் இருக்கா? நான் மதியக்காவுடைய ஹஸ்பண்டு..." என்று தன்னை அறிமுகம் செய்து கொண்டான் தாமு.

"சொன்னாங்க..." என்றாள் அனிதா.

"யாரு?"

"சிவகாமிக்கா.." என்றாள்.

"எதுவும் சிலாக்கியமா சொல்லியிருக்க மாட்டாளே? 'தாமுகிட்ட சாக்கிரதையா இரு'ன்னுதானே சொல்லிருப்பா... நம்ம வீட்டைப் பத்தி என்ன நெனைக்கிறே?"

"எதுவும் புரியலை..."

"மூலவரு பேசிட்டாரா?" -தாமு கேட்க.

"மூலவர்னா?!" அனிதா கேட்டாள்.

"அதான்... லட்சுமணன். மூலவர் இவரு... வைரவன் உற்சவரு... மற்ற எல்லாரும் இந்தக் குடும்பத்துல குட்டி தெய்வங்க... மூலவர் காலைல நாயைச் சுட்டுட்டாராமே... நல்லவேளை, கோபத்துல அண்ணாமலையைச் சுடாம இருந்தாரே! ஏதாவது சாப்பிடறியா.. ஜின்... ஏதாவது?" என்றான்.

"வேண்டாம்..." என்றாள், அனிதா.

வைரவன் தூரத்தில் தீவிரமாகப் பேசிக் கொண்டிருக்கும் போது, அனிதாவை நோக்கிக் கையைக் காட்டினான். அவர்கள் இருவரும் அருகில் வர, "என்னதாமு மாமா... என் பொண்டாட்டிகிட்ட என்ன உபதேசம்?" என்றான்.

"ஜின் சாப்பிட மாட்டாங்களாம்..."

"சாப்டும்... சாப்டும்... இப்பதானே நம்மகூட சேர்ந்திருக்குது. அனிதா... இது நவீன். நம்ம ட்ராவல் ப்ளான் எல்லாம் இவன்தான் பாத்துக்கறான். காமன் வெல்த் விசாவில் எதோ கோளாறு போல இருக்கு. அதுக்காக நம்ம ஹனிமூன் ட்ரிப்பை ஒரு வாரத்துக்குத் தள்ளிப்போட வேண்டியிருக்கு. அதோட நம்ம கம்பெனிக்கு டெலிகேஷன் வருது கொரியாலருந்து! 'மெப்ஸ்'ல ஒரு நவீனமான ஃபாக்டரி வெக்கறோமில்லை... உம்போல..." என்றான் வைரவன்.

அனிதா அந்தப் பாஷையின் பல வார்த்தைப் பிரயோகங்கள் புரியாமல், மையமாகப் புன்னகைத்துக் கொண்டிருந்தாள். பல பேர் வந்து போக, அவளைத் தயக்கமில்லாமல் கைகுலுக்க, கை சோர்ந்து வலிக்க ஆரம்பித்தது.

"உன் ஒய்ஃப் கை ரொம்ப மென்மையா இருக்குது. மத்ததெல்லாமும் அப்படித் தானா?" என்று ஒருவர் போதையில் வைரவனைக் கேட்க, வைரவன் சிரிப்பால் சமாளித்துக் கொண்டே அனிதாவைப் பார்த்தான். 'கண்டுக்காதே' என்பது போல் கண்ணால் சொன்னான்.

யார் முக்கியம், யார் முக்கியமில்லை என்று பாகுபடுத்த முடியாமல் தவித்தாள் அனிதா.

"எப்போடா கிளம்புவோம்னு ஆயிடுத்து.." என்றாள். திரும்ப காரில் போகும் போது!

"அம்மாவைப் பார்த்துட்டுப் போகலாமா?" என்றாள்.

"நாளைக்குப் பார்த்துக்கலாம். இன்னிக்கு நான் கொஞ்சம் டயர்டா இருக்கேன்..." என்றான் வைரவன்.

"எனக்கு அம்மாவைப் பார்க்கணும் போல இருக்கு.." அனிதா சொல்ல.

"அம்மா இஸ் ஆல்ரைட் அனிதா! நான்தான் சாயங்காலம் பார்த்துட்டு வந்தேனே... இந்நேரம் அவங்கள தூக்கத்திலருந்து எழுப்பணும்கறியா... போன்ல பேசிக்கலாமே?"

"நான் அம்மாவைப் பார்க்கணும்.."

"பாரு... புதுப் பெண்டாட்டியா இருக்கியேன்னு பார்க்கறேன். எனக்கு இந்தப் பிடிவாதம் உதவாது தெரியுமா?"

"நான் கொஞ்ச நாள் அங்க இருந்துட்டு அம்மாவுக்குச் சரியானப்பறம் வரேன்..." என்றாள் அனிதா.

"அனிதா... நமக்குக் கல்யாணமாகி ஒரு வாரம்கூடம் ஆகலை தெரியுமா?" என்றான். வைரவன்.

## நவீன எழுத்துலக வேந்தன் சுஜாதா

மறுநாள் காலை முதன் முறையாக வைரவனின் அறைக்குள் நுழைந்தாள். கண்ணாடி மேஜைமேல் அனிதாவின் போட்டோ, ப்ரேம் போட்டு வைத்திருந்தது. அலமாரியில் பிஸினஸ் புத்தகங்கள் நிறைந்திருந்தன. குட்டியாக ஒரு பாக்ஸ் மெஷினும், லாப்-டாப் என்ற அடக்கமான கம்ப்யூட்டரும் இருந்தன. பேனா பென்சில்கள் அனைத்தும் தயாராக காத்திருந்தன. பேப்பர் கட்டர் இருந்தது. அலமாரியைத் திறந்தபோது வைரவன் சட்டென்று உள்ளே வந்து "என்ன நோண்டறே...?" என்றான்.

"நீங்க ஆபீஸ் போகலையா..?"-அனிதா கேட்க,

"ஆபீஸ் போய்ட்டேன்னு நினைச்சு அலமாரியை நோண்டறீங்களா...?" என்றான் வைரவன்.


[அனிதா வருவாள்...]

# பாப்பா முரசு சிறுகதை

# கோபம்

அது ஒரு அடர்ந்த காடு. அங்கு ஏராளமான மிருகங்கள் வசித்து வந்தன. காட்டை ராஜ வர்மன் என்ற சிங்கம் ஆட்சி செய்துவந்தது. அது எல்லோரிடமும் அன்போட பழகி எல்லோரது குறைகளையும் போக்கி வந்தது. அந்த சிங்கத்தின் ஆட்சியில் அந்த காடே அமைதிப் பூங்காவாக திகழ்ந்தது.

ராஜ வர்ம சிங்கத்திற்கு இரண்டு ஆண் சிங்கங்கள் பிறந்தன. ஒரு மகன் பெயர் வீரசிங்கன். மற்றவன்



வெற்றி சிங்கன். வீரசிங்கன் கோபக் குணத்தோடும், வெற்றி சிங்கன் சாந்தக் குணத்தோடும் வளர்ந்து வந்தனர்.

வீர சிங்கன் எதற்கெடுத்தாலும் கோபம் கொள்வான். காட்டில் உலா வருகையில் எந்த மிருகமாவது லேசாக சத்தம் போட்டாலே போதும். உடனே அந்த மிருகத்தை அடித்து கொன்று விடுவான். இவனது போக்கு ராஜவர்ம சிங்கத்திற்கும், வெற்றி வர்மசிங்கத்திற்கும் கொஞ்சம்கூட பிடிக்கவில்லை.

அன்றும் அப்படித்தான். ஒரு எலிக்குஞ்சு வீரசிங்கன் தூங்கும்போது அதன்மீது குதித்து ஓடியது. உடனே கோபத்தால் துள்ளியெழுந்த வீர சிங்கன் எலிக் குஞ்சை துரத்திக் கொண்டு ஓடினான். சிங்கத்தின் குகையில் எலி பதுங்கிக் கொண்டது. வீர சிங்கன் எங்கு தேடியும் எலியைக் காணாது கோபத்தில் கத்தினான்.

"ஏ, எலியே! இந்தக் குகையிலிருந்து உன்னை உயிரோடு வெளியே போக விடமாட்டேன்" என்றபடி அந்தக் குகையை தீ வைத்துக் கொளுத்தி விட்டான்.

இதைக் கண்ட ராஜ வர்ம சிங்கம் துடித்துப்போனது. இப்படியே தன் மகன் வீர சிங்கனை விட்டுவிட்டால் நாளை இந்தக் காட்டையே அழித்து விடுவான் என வருந்தி, தனது மந்திரியான அறிவு என்ற நரியிடம் தன் கவலையைக் கூறி, "இதற்குத் தாங்கள்தான் ஒரு நல்ல முடிவுதர வேண்டும். இல்லையேல் வீர சிங்கன் இந்தக் காட்டையே அழித்துவிடுவான்" எனக் கேட்டுக்கொண்டது. அறிவு நரி அரசருக்கு உதவ சம்மதித்தது.

வீர சிங்கனும், வெற்றி சிங்கனும் காட்டை சுற்றிப் பார்த்துக்கொண்டு வரும்போது யானையொன்று படுத்துக் கிடந்தது. உடனே வீரசிங்கன், "வெற்றி சிங்கா... இந்த யானைக்கு எவ்வளவு கொழுப்பு பார்த்தாயா? இளவரசர்கள் வருகிறார்கள் என்ற பயமே இல்லாமல் அது எப்படி படுத்திருக்கிறது பார்த்தாயா? இப்போதே போய் அதன் தலையில் அடித்து கொல்கிறேன். பார்" என கோபத்தில் குதித்தது.

"பொறுமையாக இரு வீர சிங்கா... யானையின் நிலையைப் பார்ப்போம். அதன் பிறகு விசாரித்துக் கொள்வோம்" என வெற்றி சிங்கன் எடுத்துக் கூறி, யானை அருகே சென்றது. அங்கே விஷ முள் குத்தி மயங்கிக் கிடந்த யானையைக் கண்ட வெற்றி சிங்கன் யானைக்கு முதலுதவி செய்தது. சிறிது நேரத்திற்குப் பிறகு யானை எழுந்தது. தன்னைக் காப்பாற்றிய இரண்டு சிங்கங்களுக்கும் நன்றி கூறியது.

அப்போது அங்கே மந்திரி அறிவு நரி வந்தது. "இளவரசர்களே உங்களது சேவையைக் கண்டு நான் மகிழ்கிறேன். வெற்றிசிங்கனைப் போல் வீரசிங்கனும் சாந்தமாக இருந்தால் காடே மகிழும்" என மந்திரி நரி கூறினார்.

"மந்திரியே நான் கோபப்படுவதால்தான் வீரனாக இருக்கிறேன். எதிரிகளை எதிரிகளாக எண்ணி அவர்களை அழிக்கவேண்டும் என கோபத்தோடு போர் செய்வதால் தான் நான் எதிரிகளைவென்று வருகிறேன். கோபம் இருந்தால் தான் சாதிக்க முடியும்" என வீரசிங்கன் கூறினான்.


மந்திரி நரி தூரத்தில் ஒரு மானைக் காட்டி, "வெற்றி சிங்கா எனக்கு அந்த மான் வேண்டும்" என கூறினார்.

வெற்றி சிங்கன் கொஞ்சம் யோசித்தவிட்டு மெதுவாக ஓடி மூன்று மணிநேரம் கழித்து மானோடு வந்தான். அதைப் பார்த்து கேலி செய்தது வீர சிங்கன். "ஐந்தே நிமிடத்தில் மானைப் பிடிப்பதை விட்டு மூன்று மணிநேரம்" என சிரித்தது.

உடனே வீர சிங்கனிடம் ஒரு முயலைக் காட்டி, "அதைப் பிடித்துவா" என்றது மந்திரி நரி. வீர சிங்கன் உடனே துள்ளி ஓடியது. முயல் குதித்து குதித்து ஓட, வீர சிங்கன் கோபத்தில் அதன் மீது பாய, வீர சிங்கன் பாய்ந்த இடம் ஒரு பாழடைந்த கிணறு. அதற்குள் விழுந்த வீரசிங்கன் கத்தியது.

மந்திரி நரியும், வெற்றி சிங்கனும் கிணற்றிலிருந்து வீரசிங்கனை காப்பாற்றி "வீர சிங்கா, வெற்றி சிங்கன் அந்த மானை விரட்டும்போது பாதை நல்ல பாதையா? எப்படிப் போனால் அதை மடக்கலாம் என சிந்தித்துப்போய் மானோடு வந்தான். ஆனால் நீ எடுத்த எடுப்பிலே கோபம் கொண்டு வெறி கொண்டு எதையும் சிந்திக்காமல் தோல்வியும் கொண்டாய். உயிரையும் விடப்பார்த்தாய்." என மந்திரி கூற, அதன் பிறகு திருந்திக் கோபப்படுவதையே விட்டது வீர சிங்கன், ர்ராஜ வர்மா மகிழ்ந்து நரியைப் பாராட்டினார்.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **19.01.2002.**


வர்ணம் தீட்டும் போட்டி இல: **429**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.


### வர்ணம் தீட்டும் போட்டி இல: 427

பரிசுக்குரியவர்:
அ. யாழினி,
சண்முக வித்தியாலயம், திருமலை.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| எஸ். தயாபரன், ஸ்ரீ இராமகிருஸ்னா மத்திய கல்லூரி, கலஹா. | எம். ஹேமரூபினி, பிரின்ஸஸ் கேட், கொழும்பு-12. |
| எஸ்.டி. பிரியதர்சினி, இந்து தேசிய கல்லூரி, புஸ்ஸல்லாவ. | கு.கௌசிகா, இறம்பைக்குளம் மகளிர் மகா வித்., வவுனியா. |
| நிரஞ்சன் பிரட்சிக், சென். அந்தனீஸ் கல்லூரி, கண்டி. | எம்.எஸ். ரமீஷா, பது/பசறை தமிழ் மகா(தே.பா.),பசறை. |
| எஸ். ஜனகன், நெளுக்குளம் நலன்புரி நிலையம், வவுனியா. | ம.சிவாஜினி, அட்டப்பள்ளம், நிந்தவூர்-01. |
| யோகராஜா தர்ஷிகா, சென் மேரிஸ் மத்திய கல்லூரி, பொகவந்தலாவ. | வி.ராகுலன், பரமனைனார் கோவில் வீதி, ஆரையம்பதி-01. |





புள்ளிகளை இணைத்து மறைந்துள்ள உருவத்தைக் கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்.

## தெரிந்துகொள்ளுங்கள்

வைரஸ் என்பதற்கு லத்தீன் மொழியில் நஞ்சு என்று பொருள்.

கிரமபோனை கண்டுபிடித்தவர் தாமஸ் அல்வா எடிசன்.

பெட்ரோலியத்தை சுத்திகரிக்கப் பயன்படும் அமிலம் கந்தக அமிலம்.
சுருங்கும் கடல் ஏரல் கடல்.
கோள்களில் மிக அழகானது சனி.

## பாம்பு



பாம்பு ஊர்ந்து செல்லும் உயிரினத்தைச் சேர்ந்தது. இதில் சுமார் 3000 வகைகள் உண்டு. பாம்பிற்கு கால்கள் இல்லை; இதன் கண்களுக்கு இமைகளும் இல்லை; பாம்புக்குச் செவியே கிடையாது. ஆனால், தரையின் வழியாக வரும் அதிர்வுகளை இது நன்றாக உணர்ந்து கொள்கிறது.

பாம்பின் பற்கள் கூரிய முள் போன்று உள்நோக்கி வளைந்திருக்கும். நஞ்சுள்ள பாம்புகளுக்கு மேல் தாடையில் இரண்டு நச்சுப் பற்கள் உண்டு. பாம்பு தீண்டும் போது, இந்தப் பற்களின் வழியாக நஞ்சு இறங்கிக் கடிபட்ட பிராணியின் ரத்தத்தில் கலக்கும். ஓராண்டில் பலமுறை தோலுரிக்கும் பாம்பு.

தவளை, எலி, சிறு பறவை, பூச்சி, முட்டை முதலியவற்றை தின்னும் பாம்பு. பிற பாம்புகளும் அதற்கு உணவாகும். கடற்பாம்பு பெரும்பாலும் மீனைத் தின்னும். மலைப் பாம்பு தனக்கு இரையாகும் பிராணியின் உடலை இறுகச் சுற்றி அழுத்தி, மூச்சுவிடாதபடி செய்து கொன்று விழுங்கும்.

சில பாம்புகள், இரையின் உடலில் நஞ்சைச் செலுத்திய பின் அதை விட்டுவிடும். பின்பு அப்பிராணி இறந்து கிடக்கும் இடம் தேடிச் சென்று அதைத் தின்னும்.

கீரி, ராஜாளி, முள்ளம்பன்றி ஆகியவை பாம்புடன் சண்டையிட்டு அதைக் கொல்லக்கூடும். நஞ்சுள்ள சில பாம்புகள் சீறும் பொழுது நச்சுத் துளிகள் சிதறி எதிரியின் கண்களில் தெறித்து அதை மயக்கமுறச் செய்யும். இவ்வகைப் பாம்பு ஆப்பிரிக்காவில் உள்ளது.

பாம்பு கடித்தால் உடனே சிகிச்சை செய்ய வேண்டும். நஞ்சு ரத்தத்தின் மூலமாக உடலில் பரவுவதைத் தடுக்க வேண்டும்.

## துணுக்குகள்

இன்று கேமரா, பிலிம் என்றெல்லாம் சொன்னால் உங்களுக்குத் தெரியும்! 'பிலிம்' என்ற வார்த்தை எப்படி உருவானது தெரியுமா உங்களுக்கு? கிரேக்க மொழியில் 'பெல்மா' என்றால் காலுக்கு கீழே உள்ள மெல்லிய தோல் என்று பொருள். இந்த வார்த்தை ஆங்கிலத்தில் 'பில்மென்' என்று அழைக்கப்பட்டது. பல நூற்றாண்டுகளுக்கு பிறகு பில்மென், 'பிலிம்' ஆகிவிட்டது. மெல்லிய தோல் போல் இருப்பதால் இதை பிலிம் என்கின்றனர்.

விண்வெளியில் அதிக கதிரியக்கம், குறைவான ஈர்ப்புவிசையில் வைக்கப்பட்ட விதைகளை பயிரிட்டு, சீன விவசாயிகள் மிகப்பெரிய காய்கறிகளை விளைவிக்கின்றனர்.

பெரும்பான்மையான தாவரங்கள் தங்களுள் ஆண்-பெண் இரண்டையும் கொண்டிருக்கின்றன. செடிகளில் ஆண்-பெண் என தனித்தனியே இருப்பவைகளை எண்ணுவது கடினமான விஷயமேயல்ல. இந்த ரகத்தில் சேருபவை ஜின்கோ மரம், சணல், வாகை, மலைப்பூண்டு, முசுக்கட்டைச் செடி போன்றவை.

அமெரிக்காவில் சான் பிரான்சிஸ்கோவில் உள்ள லீவி ஸ்டிராசஸ் கம்பெனி சமீபத்தில் ஒரு ஜீன்சை விலைக்கு வாங்கியது. இந்த கம்பெனியே கடந்த 1880ம் ஆண்டு தயாரித்து விற்பனை செய்த ஜீன்ஸ் அது. 46 ஆயிரத்து 532 டொலர் கொடுத்து அந்த ஜீன்சை வாங்கியது. மிகவும் பழமையான ஜீன்ஸ் இது என்று கருதப்படுகிறது.

அமெரிக்காவில் மசாசூசெட்ஸ் நகரை சேர்ந்த 'ரிபீட்டிங் லைட் கம்பெனி' என்ற நிறுவனம் 1865ம் ஆண்டு நவம்பர் ஏழாம் திகதி முதல் சிகரெட் லைட்டரை உருவாக்கியது.

உலகின் முதல் சூப்பர் சானிக் விமானமான கன்கார்ட் விமானம், பிரான்ஸ் நாட்டில் டலவ்ஸ் விமான தளத்தில் இருந்து 1967ம் ஆண்டு டிசம்பர் 11ம் திகதி வெளியே வந்தது.

# தீர்ப்பு

"ஐயா! இனிமே நான் இந்தப் பொன்னம்மா கூட வாழமாட்டேன். நான் கட்டின தாலியை பாதுகாவலாய் வச்சுக்கிட்டு, அவள் விரும்பிய ஆண்களுடன் தொடர்பு வச்சுக்கிறா! என்னையும் அவளையும் 'தீர்த்து' விட்டிடுங்க!"

சங்கரன் தீர்மானமாகச் சொன்னான். அவன் மனைவி பொன்னம்மாவைப் பார்த்தார், பஞ்சாயத்து தலைவர். பொங்கி வழியும் கண்ணீரோடு அவள் பரிதாபமாக நின்றாள்.

"பொன்னம்மா! உன் கணவனோட குற்றச்சாட்டுக்கு நீ என்ன பதில் சொல்றே?"

பஞ்சாயத்து தலைவர் பரமசிவம் கேட்டதும் சற்றே தலை நிமிர்ந்தாள் பொன்னம்மாள்.



"ஐயா... நான் களங்கம் இல்லாதவள். அவர் எம்மேல அபாண்டமாய் பழி சுமத்துகிறார். எங்கள பிரிச்சிடாதீங்க...!" கெஞ்சினாள்.

தீர்ப்பை நாளை சொல்வதாக, பரமசிவம் அறிவிக்கவும், பஞ்சாயத்துக் கூட்டம் கலைந்தது.

அன்று இரவு. மணி பதினொன்றை நெருங்கிக் கொண்டிருந்தது. ஊர் அடங்கி நிசப்தம் நிலவியது. வீட்டில் தனியாகப் படுத்திருந்த பொன்னம்மாவுக்கு தூக்கம் வரவில்லை. கண்ணீர் பெருகி வர, பாயில் புரண்டு புரண்டு படுத்தாள்.

அப்போது கதவு தட்டப்படும் ஓசை கேட்டது. தன் கணவன் தான் வந்து தட்டுகிறான்... என்று ஆர்வமாகச் சென்று கதவைத் திறந்தாள்.

அங்கே நின்றிருந்த பரமசிவத்தைக் கண்டதும் அவள் அதிர்ச்சியில் உறைந்தாள்.

சென்ட் வாசனை, தூய வெள்ளை ஜிப்பா, வாயில் வேட்டி, வலது கையில் நெருக்கமாகச் சுற்றிக் கட்டப்பட்டிருந்த மல்லிகைச் சரம், 'பெண் போதை'யில் பல் இளித்து நின்று கொண்டிருந்தார் பஞ்சாயத்து தலைவர்.

"ஐயா..! நீங்க... எங்கே... இங்க....?" பயத்தில் குளறியபடி கேட்டாள் பொன்னம்மாள்.

நமட்டுச் சிரிப்பு சிரித்தபடி குடிசைக்குள் வந்து கதவைச் சாத்தினார் பரமசிவம்.

"ஏ... புள்ளே... பொன்னம்மா! உன் மேல ரொம்ப நாளா எனக்கு ஒரு கண்ணு. உம் புருசனே சொல்றான், நீ யார் யார் கூடவெல்லாமோ போறேன்னு. முரண்டு புடிக்காமே என் ஆசைக்கு உடன் படு. இதுக்கு பலனா நாளைக்கு பஞ்சாயத்திலே, உன் விருப்பப்படியே நான் தீர்ப்புச் சொல்றேன்!" பரமசிவம் முன்னேறினார்.

"ஐயா... ஐயா.. வேண்டாம்... என் புருசனோட மட்டும் தான் நான் மானத்தோடு வாழ்ந்துக்கிட்டு இருக்கேன். அநியாயமா என்னை கெடுத்துடாதீங்க!" பொன்னம்மாள் விலகிச் சென்றாள்.

பின் சென்ற அவள் காலில் ஏதோ தட்டுப்படவும் குனிந்து பார்த்தாள். ஆபத்திற்கு உதவ வந்தது போல் அரிவாள் ஒன்று கிடந்தது. சட்டென அந்த அரிவாளை அவள் எடுத்துக் கொண்டாள்.

"யோவ்! பரமசிவம்... மரியாதையா வெளியே போயிடு... இல்லேன்னா இந்த அரிவாளுக்குப் பலியாகி விடுவே."

பொன்னம்மாவின் வீராவேசம் பரமசிவத்திற்கு மகிழ்ச்சியைத் தந்தது.

"மானத்தைக் காக்க... கொலையும் செய்வாள் பத்தினின்னு சொல்வாங்களே, அது சரிதான்! உண்மையாகவே நீ ரொம்ப நல்லவள்" என்றவர் வாசல் பக்கம் திரும்பி, "சங்கரா! உள்ளே வா" என்றார்.

## கு. அருணாசலம்

தொங்கிப் போன முகத்துடன் சங்கரன் உள்ளே வந்தான்.

"என்னை மன்னிச்சிருங்க ஐயா! என் மனைவி உத்தமிங்கிறதை உணர்ந்திட்டேன்.. வீணா சந்தேகப்பட்டு சங்கடப்பட்டுட்டேன்!"

பொன்னம்மாள் அருகில் சென்று நின்றான் சங்கரன்.

பொன்னம்மாள், மிரட்சியிலிருந்து இன்னும் விடுபடாமல் பரமசிவத்தைப் பார்த்தாள்.

"என்ன பொன்னம்மா, அப்படிப் பார்க்கிறே? நீ மாசு மருவற்றவள்னு உன் கணவனுக்குக் காட்டத்தான் நான் அப்படி 'நாடகம்' போட வேண்டியதாச்சு. என்னுடைய தீர்ப்பு நியாயமானதாக இருக்கணும்னு தான் உனக்கு ஒரு பரீட்சை."

"ஐயா! நீங்க நல்லா இருக்கணும். எனக்கு மறுவாழ்வு தந்த தெய்வம் நீங்க!"

பரமசிவத்தின் காலடியில் விழுந்து வணங்கினாள் பொன்னம்மாள்.

# சந்தேகம்


"மச்சான், செல்வி நீ நினைக்கிற மாதிரியில்ல அவள் மோசமான ஆள் நான் மட்டும் இல்ல இந்த ஊரே சொல்லுது" என என் நண்பன் ஜெகன் சொன்ன அந்த வார்த்தையை என்னால் நம்பவும் முடியவில்லை நம்பாமல் இருக்கவும் முடியவில்லை. செல்வி எனக்கு தூரத்து சொந்தம். ஊருக்குள்ள அவளைப் பற்றி நல்ல அபிப்பிராயம் இல்லை. தினமும் காலையில் கைப்பை யொன்றுடன் போறாள் வாறாள் எங்க என்று தான் தெரியுதில்லை. அதைவைத்து ஊர்ச்சனம் அவளை பிழையாக கதைக்கிறது. அவள் நான் அறிய எந்த ஆணையும் நிமிர்ந்து கூட பார்த்ததில்லை. இருந்தாலும் எனக்கொரு சந்தேகம் செல்வி அந்த மாதிரி ஆள்தானோ என்று. "இண்டைக்கு அவள் எங்க போறாள் என்று பார்க்கத் தான் வேணும்" என நினைத்துக் கொண்டு வீதிக்கு வந்தேன். செல்வி வந்து கொண்டிருந்தாள்.

குனிந்த நடை கையில் கைப்பையுடன் வந்த அவள் என்னைக் கடந்து போய்க் கொண்டிருந்தாள். "போ நீ, எங்க போகப் போறா எண்டு பாக்கத்தான் போறன் அப்படி ஏதும் எண்டா கையும் மெய்யுமாக பிடிச்சி காட்டுகிறேன்" என எனக்குள் நினைத்துக் கொண்டு அவள் பின்னால் சென்றேன்.

நாவமரத்தடி சந்திக்குப் போன அவள் வேன் ஒன்று வர நிறுத்தி ஏறிக் கொண்டாள். நானும் ஓடிப் போய் ஏறிக்கொண்டேன். வேன் நாவற்குடாவால் போய்க் கொண்டிருக்கும் போது வேனை நிறுத்தி இரு இளம் பெண்கள் ஏறிக் கொண்டனர். அவ்விருவரும் செல்விக்கு அருகில் வந்தனர். "என்ன செல்வி இண்டைக்கு அங்க தானா இல்ல வேறு இடத்திலா?" அந்த ஒரு பெண்களில் ஒருவள் கேட்டாள். "சீச்சீ... அவனிட்ட இனி நான் போக மாட்டேன் அவன் தார காசி எனக்கு கட்டாது. நாள் ஒன்றுக்கு முந்நூறு ரூபா போதுமா? என்ன வேறு ஒருவர் வரச் சொல்லிருக்காரு அங்க போகப் போறேன்" என்றாள் செல்வி.

செல்வியின் அந்த பேச்சில் என் நண்பன் சொன்னது சரி என்றே எனக்குப் பட்டது. "ம்... இண்டைக்கு என்னிட்ட தப்ப முடியாது." என எண்ணிக் கொண்டேன்.

வேன் கல்லடியால் போய்க் கொண்டிருந்தது. வேனை நிறுத்தி நடுத்தர வயது மதிக்கத்தக்க ஒரு ஆண் ஏறிக் கொண்டான். ஏறிய அவன் செல்வியை கண்டு விட்டான். "செல்வி நான் நினைத்தேன் இண்டைக்கு வரமாட்டிங்க வீட்ட போய்த் தான் கூட்டி வர வேணும் எண்டு. நல்லதா போயித்து நீங்களாக வந்திட்டிங்க" என்றான்.



## சி. நாகேந்திரன் — ஆரையம்பதி

நீங்க தார காசிக்கு உங்கட்ட வர முடியாது நான் வேற இடத்துக்கு போகப் போறேன். "என்றவள் எங்களால் நல்லா உழைக்கிறீர்கள் தானே கொஞ்சம் கூட்டித் தந்தால் என்ன" என்று கேட்டாள் செல்வி."

"சரி...சரி கூட்டித்தாறேன்." என்றான் அந்த நடுத்தர ஆண். செல்வி மீது எனக்கு இருந்த சந்தேகம் மேலும் வலுப்பெற்றது. வேனை நிறுத்தி அவர்கள் இறங்கிக் கொண்டார்கள். நானும் இறங்கிக் கொண்டேன். செல்வி என்னைக் கணக்கெடுத்ததாக தெரியவில்லை.

இறங்கிய அவர்கள் கடைத் தொகுதி ஒன்றின் பின் பக்கமாக சென்றனர். நான் பதுங்கி பதுங்கி சென்று அவர்களை அவதானித்தேன். அவர்கள் அக் கடைத் தொகுதியில் இருந்த கடை ஒன்றினை திறந்து அதற்குள் நுழைந்து கொண்டனர்.

பதுங்கி பதுங்கி சென்று அந்த கடையில் இருந்த துவாரம் வழியாக எட்டிப் பார்த்தேன். அது ஒரு தையல் கடை. செல்வியும் அவளுடன் வந்த பெண்களும் தையல் வேலைகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர்.

"ஓடிப் போய் செல்வியின் காலில் விழுந்து மன்னிப்பு கேட்க வேண்டும் போல் இருந்தது. என்னை அறியாமலே என் கண்கள் கலங்கி கண்ணீர் முகத்தை நனைத்தது. இழக்க முடியாத ஒன்றை இழந்து விட்ட சோகத்துடன் பஸ் ஏறுகிறேன் வீட்டை நோக்கிவர.

# சண்டைக்காரன்

காலை ஐந்து மணி பஸ்பிடித்து கொழும்பில் போய் இறங்கிய நேரம் பத்து மணி. புண்டுலோயாவில் நல்ல மார்கழி குளிருக்கு நடுங்கிய உடம்பு, கொழும்பு வெய்யிலுக்கு ஈடு கொடுக்க முடியாது திணறியது. கைப்பார்சலை எடுத்துக் கொண்டு பம்பலப்பிட்டி செல்ல பஸ் எடுப்பதற்காக பிரைவேட் பஸ்தரிப்பு நோக்கிப் புறப்பட்டபோது எதிரில் வந்து நின்றான் அவன். முகத்தை உற்றுப் பார்த்தேன் எங்கேயோ பார்த்தது போலவும், பார்க்காதது போலவும் ஒரு தடுமாற்றத்தைக் கொடுத்தது.

பின்லாடன் போன்ற தாடியோடு கம்பீரமாய் டிசேர்ட் அணிந்து, ஜீன்ஸ் காற்சட்டையோடு ஒரு வில்லனின் சாயலில் இருந்தான். உருவம் பரிச்சயத்தைக் கொடுக்காவிட்டாலும் முகம் எங்கேயோ பார்த்தது போல மின்னலடித்துக் கொண்டிருக்க, என்னைப் போலவே அவனும் என்னை அலசி ஆராய்ந்து கொண்டிருக்கிறான் என்பதை உணரக் கூடியதாக இருந்தது. ஒரு சிறிய மௌனத்தின் பின்னர் அவன் "நீ.. நீ பூபாலன் தானே..!" என்றான். "ஆம். நீங்க யார்?" "என்ன தெரியலியா...! நல்லா பார். நான் தாண்டா சிரஞ்சீவி." என்றான். எனக்கு அவன் பேரைக் கேட்டதும் என் உயிர் என்னிடம் இல்லை. 'ஐய்யய்யோ ரொம்ப நாளைக்குப் பிறகு கொழும்பிற்கு வந்து முதன் முதலில் இவனிடம் மாட்டிக் கொண்டேனே'. என்ன நடக்குமோ என்ற பீதியோடு கைகுலுக்கினேன்.

சாதாரண வெய்யிலுக்கே அதிகம் வியர்க்கும் எனக்கு கொழும்புச் சூட்டின் காரணமாகவும் இவனைச் சந்தித்ததாலும் குளித்தது போலாகிவிட்டது. மேற்கொண்டு இவனோடு என்ன பேசுவது என்ற நிலையில் நின்றிருந்த என்னை "வாடா. வா ஒரு ஓரமாய் போய் அமர்ந்து பேசுவோம் என்று ஒரு ஹோட்டலுக்குக் கூட்டிச் சென்று இரண்டு குளிர்பானத்திற்கு ஓடர் செய்தான்.

இவனும் நானும் ஒரே வகுப்பில்தான் கல்வி கற்றோம். என்றாலும் இவனுக்கு படிப்பு மண்டையில் அவ்வளவாய் ஏறாததால் யாரோடும் எப்போதும் சண்டை பிடிப்பதையே வழக்கமாக்கிக் கொண்டிருந்தான். யாரும் இவனைப் பற்றி எதுவும் சொல்லிவிட முடியாது. சமயம் பார்த்து அடித்து நொறுக்கி விடுவான். இவன் படிக்கும் காலத்திலேயே குண்டாகத்தான் இருப்பான். ஒருமுறை சகமாணவி ஒருத்தியின் மேல் ஏடாகூடமாய் போய் இடித்து விட்டான். இடித்தது மல்லாமல் அவளிடம் சண்டைக்குப் போன இவனை அவள் "போடா இட்லி" என்று திட்டிவிட இவன் பேசிய கெட்ட வார்த்தைகள் அகராதியில் இல்லாதவைகள்.

எதற்கெடுத்தாலும் முரட்டுத்தனம். யாரோடும் சண்டை என்றிருந்த இவன் வகுப்பில் எப்போதும் என் ஆசனத்திற்கு நேரே பின்னால் அமர்ந்திருப்பான். ஒருமுறை நான் எதற்காகவோ எழுந்து நின்றிருந்தபோது எனது நாற்காலியை



## பூண்டுலோயா-மெய்யன் நட்ராஜ்

இடம் மாற்றி வைத்துவிட நான் என் வேலையை முடித்துக் கொண்டு உட்கார்ந்தபோது தரையில் கிடந்தேன். அந்நேரம் வகுப்பில் ஒரே சிரிப்பொலி. சினிமாவில் விவேக் வரும்போது ஏற்படும் சிரிப்பைப் தியேட்டரில் கேட்டது போல் கேட்ட எனக்கும் ஆத்திரம் எழ கையில் இருந்த பென்சிலால் அவன் கையை பதம் பார்த்தேன். அதன்பின் பிரச்சனை அதிபரிடம் போக குற்றம் அவன் மீது என்பதால் ஒருவாரம் அவன் பாடசாலைக்கு வரக்கூடாதென தண்டனை வழங்கப்பட்டது.

அதன் பின்பு பாடசாலைக்கு வந்து ஒரு சில மாதங்கள் கல்வி கற்று, சண்டைப் பிடித்து குழப்பம் செய்து கொண்டிருந்தவன் அவனது அப்பாவின் தொழில் மாற்றம் காரணமாய் எங்கோ ஊர்மாறிப் போனதாக அறிந்தேன் . அதன் பின் இன்று தான் சந்திக்கிறேன். இப்போது எப்படி இருக்கிறானோ தெரியவில்லை. பழைய மாதிரி தானோ என ஒரு நீண்ட நினைவுகளின் பின் அவனைப் பார்க்கிறேன்.

"எப்படிடா சுகமாய் இருக்கிறாயா? நம்ம கிளாஸ் மேட்ஸ் எல்லாம் எப்படி இருக்கிறாங்க? ஊர் எப்படி இருக்கிறது" என்று விசாரிக்கத் தொடங்கினான். நான் என்னையும் குடும்பத்தைப் பற்றியும் ஊரைப்பற்றியும் கூறினேன். பழைய நினைவுகளை மீட்டினேன். இவன் மிகவும் மகிழ்ச்சியுற்றான். இவனது சந்தோசத்தினூடேயே "டேய் நீ இப்போ என்ன செய்கிறாய்? ஊரைவிட்டு வந்த பிறகு உன்னைப் பற்றிய தகவல் எதுவுமே இல்லையே!" கேட்டுவிட்டு பதிலுக்காய் அவன் முகத்தை பார்த்தபோது அந்த முரட்டு முகத்தில் கவலையின் நிழல் படர்ந்தது.

சர்வர் கொடுத்த கொக்கா கோலாவை ஒருமுறை உறிஞ்சிவிட்டு பேசத் தொடங்கினான். "நாங்க போன புதிய ஊர்ல ஒரு நாள் யாருக்கும் தெரியாமல் சிகரெட் குடித்துப் பார்த்தேன். முதல் பழக்கம் என்பதால் இருமல் வர இருமினேன். அந்நேரம் அவ்வழியே வந்த எங்கள் பக்கத்து வீட்டுக் காரன் இதைக் கண்டுவிட்டான். நேராக எங்கப்பாவிடம் போய் சொல்ல, திடீரென அப்பா என்னைத் தேடி வந்தார். அப்பாவைக் கண்டதும் என் கையில் இருந்த சிகரட்டை பின்புறமாக மறைத்துக் கொண்டு நின்றேன். நான் மறைத்ததைக் கண்ட அவர் "கையை நீட்டுடா" என்றார். நான் சிகரட்டை வலதுகைக்கு மாற்றி இடதுகையை காண்பித்தேன். "இரண்டு கையையும் காட்டுடா" என்றதும் நான் வாயில் சிகரட்டை வைத்து விட்டு விட்டு கைகளைக் காட்ட என் கன்னத்தில் "பளார்.. பளார்"கள் விழுந்தன. அதன் பின்பு இதை காட்டிக் கொடுத்த பக்கத்து வீட்டுக்காரனின் மண்டையை கல்லால் அடித்து உடைத்தேன். இதன் காரணமாய் வீட்டில் அப்பா என்னை சோபமாக "இனிமேல் நீ வீட்டுப்பக்கம் வராதே" என்று விரட்டிவிட்டார்."

"பிறகு." "நான் ஊரைவிட்டு தெரிஞ்ச ஒருத்தரோட கொழும்புக்கு வந்தேன். கொழும்புக்கு வந்ததும் தான் எனக்கு என் தவறுகள் தெரிய வந்தன. சரியாக படிக்காத எனக்கு யாரும் வேலை தர முன்வரவில்லை. கடைசியாக என்னை கூட்டிட்டு வந்தவரு ஒரு கராட்டே ஸ்கூல் மாஸ்டருக்கு எடு பிடி ஆளாக என்னை சேர்த்து விட்டார். அங்கு சேர்ந்த பிறகு அவர் மற்றவர்களுக்கு கற்றுக் கொடுக்கும் வித்தைகளை தெரியாமல் கற்று வந்தேன். ஒரு நாள் நான் தனியாக பயிற்சி எடுத்துக் கொண்டிருந்த மாஸ்டர் என் ஆர்வத்தை கண்டு எனக்கு "கராட்டே, குங்ஃபூ ஜூடோ என்று பலவிதமான சண்டைகளை கற்றுக் கொடுத்தார். அவர் தயவால் தான் இன்றைக்கு இரண்டு பிள்ளைகளோட பெற்றோரையும் வைத்துக் கொண்டு குடும்பத்தைக் கொண்டு போகிறேன்.

அன்று இந்த மாஸ்டர் மட்டும் எனக்கு வழி காட்டாவிட்டால் என் வாழ்க்கை எப்படி அமைந்திருக்கும் என்று எனக்கே தெரியாது." "அப்படீன்னா நீ இப்ப என்னதான் செய்து கிட்டிருக்காய்?" "எந்த சண்டை கூடாது என்று என்னை வீட்டை விட்டு துரத்தினார்களோ அதே சண்டை தான் இன்று எனக்கு சோறு போட்டு ஒரு கௌரவத்தையும் புகழையும் கொடுத்திருக்கு. நீ சினிமா பார்க்கிறதா இருந்தா உனக்குத் தெரிந்திருக்கும். டைட்டல்ல சண்டைப் பயிற்சி, "சிங்கம் சிரஞ் சீவின்னு போடுவாங்களே அது நான் தான்!" "அடே... அது நீதானா. வெரிகுட் வெரிகுட். சண்டையை வைத்தே சம்பாதிக்கிறியே." என சந்தோசத்தோடு அவனது கையை குலுக்கிவிட்டு அவனிடம் இருந்து விடை பெற்றபோது சின்ன வயதில் நாம் என்ன முறையில் வளர்கிறோமோ அதற்கேற்றால் போலத்தான் நமது தொழிலும் வாழ்க்கையும் அமையும் என்பதை இவன் மூலம் அறியக் கிடைத்தது மனதுக்கு மகிழ்ச்சியாக இருந்தது.

# கண்ணாமூச்சி ரே... ரே... 7

## பட்டுக்கோட்டை பிரபாகர்

"அதாவது... நான் சினிமால ஹீரோயினா அறிமுகம் ஆகிறதுக்கு முன்னால என்னை சந்தன்ங்கிற போட்டோகிரா:பர் கொஞ்சம் செக்ஸியால்லாம் படம் எடுத்தார். இப்போ அந்த படங்கள் தன் கிட்டே இருக்கிறதா யாரோ மாதுங்கிறவன் போன் செஞ்சி பத்திரிகைகளுக்குத் தந்துடுவான்னு மிரட்டினான். தாராளமா தந்துக்கோ, ஐ டோண்ட் கேர்ன்னு சொல்லிட்டேன்..."

"அப்புறம்?"

"மறுபடி அவன்கிட்டேர்ந்து போனும் இல்லை. வேற எந்த வகையிலயும் தகவலும் இல்லை."

"அந்த படங்கள் எந்த பத்திரிகையிலே வந்திச்சு மேடம்..."

"நான்சென்ஸ், படங்கள் வெளி வரலை. எனக்கு இப்போ அந்த பனி ரெண்டு படங்கள் நெகடிவ்ஸோட வேணும்."

"சந்தனைப் பார்த்துக் கேட்டா முடிஞ்சிப் போச்சே கதை."

"இந்த யோசனை எனக்குத் தெரியாதா? சந்தனை எனக்கு அவ்வளவு பழக்கம் கிடையாது. ஒரு குறிப்பிட்ட வீட்ல தான் என்னையும் இன்னும் ரெண்டு பேரையும் படம் எடுத்தார். நான் வறுமையில வாடின நேரம் அது. ஒன்பது வருஷத்துக்கு முன்னாடி நடந்தது இது. நல்லா நினைவிருக்கு. ஜஸ்ட் இருபது ரூபா பணத்துக்காக அப்படி ஒரு அவலம் எல்லாம் சந்திச்சேன் நான். உங்களுக்கு எவ்வளவு பணம் வேணாலும் கேளுங்க தர்றேன். அந்த படங்களும், நெகடிவ்சும் எனக்கு வேணும்."

"ஒரு நிமிஷம் வண்டியை ஓரமா நிப்பாட்றிங்களா?" என்றாள் திடீரென்று சுசிலா.

"என்னாச்சி? ஏன்?"

"நிறுத்துங்க, சொல்றேன்."

மதுலதா காரை பாதையோரமாய் புரியாமல் நிறுத்த, சுசிலா அவசரமாக இறங்கி, முன் பக்கக் கதவைத் திறந்து, "பரத், இறங்குங்க சொல்றேன்..."

"சுசி, என்ன? ஏன் இப்படி?"

"இறங்குங்க... அப்புறம் கேளுங்க..."

பரத் கீழே இறங்கி, "என்ன?"

சுசிலா காரின் கதவை மூடத் தயாராய் வைத்துக் கொண்டு, "இந்த பாருங்க நடிகையம்மா.. இந்தகேஸை நாங்க எடுத்துக்கிறதா இல்லை. நீங்க வேற ஆளைப் பாருங்க." என்று டப்பென்று கதவைச் சாத்தினாள்.

"அய்யய்யோ, என்ன இது, சுசி.." என்று பதறின பரத் அவசரமாக காரின் கதவைத் திறந்து, "மேடம் அவ என்னமோ வாய் தவறி..."

விருட் என்று கார் புறப்பட்டுச் சென்று விட்டது.

பிளாட்பாரத்தில் இளநீர் வாங்கி ஸ்ட்ரா போட்டு குடிக்க ஆரம்பித்து விட்ட சுசிலாவை நெருங்கி, "சுசி, உனக்கு மூளை கெட்டுப் போச்சா? ஒரு நல்ல பிஸ்னெசைக் கெடுத்துட்டே. ஏன் அப்படி செஞ்சே! அட! சொல்லிட்டுக் குடி" என்று ஸ்ட்ராவைப் பிடுங்கி கையில் வைத்துக் கொண்டான்.

> "ம்கூம். மதுலதாவைப் பழி வாங்கறேன்னு சொன்னாரு. நம்மை கல்யாணம் பண்ணிக்கிட்ட ஜோடியா நடிக்கச் சொன்னாரு. இன்னிக்கு கூப்பிட்டு விட்டு புருஷனுக்கும் பொண்டாட்டிக்கும் இனி சதா சண்டை வரணும். சுத்தி குடி இருக்கிறவங்க நம்பற மாதிரி சண்டை போடுங்கன்றாரு. ம்கூம்... தலையும் புரியலை... வாலும் புரியலை..."

"பரத், அவ பாலீஷா சொல்றா. அவ நிர்வாண போஸ் எல்லாம் கொடுத் திருக்கா அந்த சந்தனுக்கு.."

"இருக்கட்டுமே... :பிகர் உள்ளவ போஸ் கொடுக்கறா!"

"என்னது?"

"நமக்கென்ன சுசி?"

"இந்த கருமாந்திர கேஸ் எல்லாம் நமக்கு வேணாம்."

"காத்தாடி வித்த காசு பறந்து போய்டுமா? அது மாதிரி..."

"எனக்கு உதாரணம் எல்லாம் தேவையில்லை. ஒரு டாக்ஸி. பிடிச்சி நான் ஏஜன்சி போறேன். நீங்க வர்றிங்களா, இல்லையா?"

"பாவி! இண்ட்ரெஸ்ட்டிங்கா கேஸ் வருது. அதுவும் வேணாம். இண்ட்ரெஸ்டிங்கா ஷூட்டிங் இன்னைக்கு. அதுவும் வேணாம். உன்னை..."

அதற்குள் தூரத்தில் நின்ற டாக்ஸியை நோக்கி சுசி போயிருக்க...

"சாமி இளனீக்கு காசு கொடுங்க..."

"யோவ், நானாய்யா குடிச்சேன்..?"

"உங்க புருஷன், பொண்டாட்டி சண்டையில நஷ்டப்பட நான்தான் கிடைச்சனா?"

"பொண்டாட்டியா? இவளையா? காதலிக்க மட்டும்தான்யா லாயக்கு."

எரிச்சலாய் பர்சைத் திறந்தான் பரத்.

❀ ✸ ❀

மின்சார ரயிலில் இருந்து இறங்கிக் கொண்டார்கள் சேதுவும், துர்க்காவும். கையில் பிளாஸ்டிக் கூடை. அதில் மளிகை சாமான்கள்.

தங்கள் வீட்டை நோக்கி நடந்தார்கள்.

"துர்க்கா, சங்கரதாஸோட நோக்கம் என்னண்ணே எனக்குப் புரியலை. உனக்கு எதாச்சும் புரியுதா?"

"ம்கூம். மதுலதாவைப் பழி வாங்கறேன்னு சொன்னாரு. நம்மை கல்யாணம் பண்ணிக்கிட்ட ஜோடியா நடிக்கச் சொன்னாரு. இன்னிக்கு கூப்பிட்டு விட்டு புருஷனுக்கும் பொண்டாட்டிக்கும் இனி சதா சண்டை வரணும். சுத்தி குடி இருக்கிறவங்க நம்புற மாதிரி சண்டை போடுங்கன்றாரு. ம்கூம்... தலையும் புரியலை... வாலும் புரியலை..."

"பணத்துக்கு அஞ்சாத புள்ளிங்கிறது மட்டும் புரியுது."

"நமக்கென்னங்க சேது. கை நீட்டி காசு வாங்கிட்டோம். இன்னும் லட்ச லட்சமா தர்றேன்னும் சொல்லியிருக்கார். நடிக்கச் சொல்ற மாதிரி நடிச்சிட்டுப் போறோம்."

வீடு வந்து சேர்ந்ததும், துர்க்கா அவனைப் பார்த்து கை அசைவு செய்ததும்..

சேது சத்தமாய் கத்த ஆரம்பித்தான்.

"என்னடி நினைச்சிட்டிருக்கே உன் மனசில? புருஷன்ங்கிற மரியாதை மனசில இருக்கட்டும். எல்லாத்துக்கும் எதிர்த்து எதிர்த்து பேசினே பல்லு பல்லா பேர்த்துடுவேன். சாவியை எடுடி. கதவைத் திற..."

"முடியாது. இன்னிக்கு எனக்கு பதில் தெரிஞ்சாகணும். நீங்க சுயமா சம்பாதிச்சி வாங்கிப் போட்ட தோடா இருந்த அடகு வைங்க, வித்துட்டு வேணும்னாலும் வாங்க. உங்களுக்கு உரிமை இருக்கு. எங்க ஆத்தா போட்ட தோட்டை என்னை ஒரு வார்த்தை கேக்காம எப்படி நீங்க அடகு வச்சி சீட்டு ஆடலாம்?"

துர்க்காவின் குரல் உயர...

முதலில் எதிர் வீட்டு ஜன்னல் கதவு திறந்தது. பிறகு பக்கத்து வீட்டு வாசல் கதவு திறந்தது. ரோடில் சென்ற காய்கறி வண்டிக்காரன் நின்று வேடிக்கை பார்க்க ஆரம்பித்தான்.

"என் இஷ்டம்... நான் அப்படித்தாண்டி செய்வேன். நான் ஆம்பளை.."

"ஆம்பளைன்னா என்ன அநியாயம் வேணாலும் செய்யலாம். அதைப் பார்த்துக்கிட்டு நாங்க வாயையே திறக்கக் கூடாதா குட்ட குட்ட குனியணுமா? தோட்டை மீட்டுட்டு வீட்டுப் படியை மிதிங்க."

"என் வீட்டை நான் மிதிக்க நீ என்னடி கண்டிஷன் போடறது நாயே..."

"என்ன சொன்னிங்க... என்ன சொன்னிங்க?"

"நாய்ன்னேன்... என்ன பண்ணுவே?"

"அப்புறம்.. பதிலுக்கு புருஷன்னு கூடப் பார்க்காம திட்டிடுவேன் தெரியுமா?"

"திட்டுவியா? அவ்வளவு தூரத்துக்கு திமிர் ஏறிப் போச்சா உனக்கு?"

சேது துர்க்காவின் பின் கூந்தலைக் கொத்தாகப் பிடித்து "எங்கே திட்டுடி பார்க்கலாம். திட்டற வாயை பிளேடு வச்சி கிழிச்சிடுவேன். தெரியுமா?"

பக்கத்து வீட்டுப் பெரியவர் வந்து சேதுவை இழுத்து "என்னப்பா இதெல்லாம். விடு அவளை. மொதல்ல கையை எடு சொல்றேன்."

"என்ன பேச்சு பேசினா பார்த்திங்களா சார்?"

"எதுவா இருந்தாலும் இப்படித்தான் வீட்டு வாசல்ல நின்னு சண்டை போட்டுக்கணுமா? இந்தாம்மா, முதல்ல கதவைத் திறந்து உள்ளே போ. நீங்க அமைதியா இருங்க தம்பி சுமுகமா பேசித் தீர்த்துக்க வேண்டிய விவகாரத்தை வீதியில் வச்சிக்கிட்டு வேடிக்கைப் பார்க்க விடலாமா? யோவ்! போங்கய்யா... இங்க என்ன வித்தையா காட்றாங்க? உங்க வீட்ல சண்டை போட்டுக்க மாட்டிங்களா?"

சமாதானமாகப் பேசி சேதுவின் முதுகில் தட்டிக் கொடுத்து உள்ளே அனுப்பி விட்டு அவர் தன் வீட்டுக்குள் சென்றதும்...

வீட்டுக்குள் வந்த சேது, "எப்படி நம்ம முறுக்கு?" என்றான்.

"ஜமாய்க்கிறீங்க சார். இன்னைக்கு இது போதும்.. இதே சண்டையை நாளைக்குக் காலையில இன்னும் கொஞ்சம் தீவிரமா வச்சிக்கலாம். என் நடிப்பு எப்படின்னு சொல்லவே இல்லையே?"

"பிச்சி உதறிட்டே போ. வாங்கின காசுக்கு வஞ்சனை இல்லாம நடிக்கிறே..."

"எனக்கு ஒரு முறை மாமன் இருக்கான். கொஞ்சம் ஷோக் பேர்வழி. பத்து பவுன் போடறியா கட்றேன்னு எங்காத்தாவைக் கேட்டான். தினம் பத்து ரூபாய்க்கு திண்டாறப்போ கல்யாணம் ஒரு கேடான்னு கேட்டான். லட்ச லட்சமா சம்பாரிச்சதும் அவனைப் போய் பார்த்து நூறு பவுன் கூட இப்ப போடற வசதி இருக்கு. ஆனா என்னைக் கட்டிக்க உனக்கு தகுதி இருக்கான்னு கேக்கணும்னு இருக்கேன்" என்றாள் துர்க்கா.

சங்கரதாஸ் தன் அறையில் சட்டை போடாமல், உதட்டில் சிகரெட் தொங்க, கூரையிலிருந்து உதிர்ந்த சங்கீதத்திற்கு ஆடிக்கொண்டிருந்தான்.


இண்ட்டர்காம் இடைமறித்தது.

*(கண்ணாமூச்சி தொடரும்)*



---

## கபில் ஹீரோ! வில்லன்...?



ஹரியானா மாநிலத் தைச் சேர்ந்த சாதாரணக் குடும்பத்தில் பிறந்து பின்னர் உலகம் போற்றும் கிரிக்கெட் வீரரான கபில் தேவின் கதை சினிமாவாகப் போகிறது.

இந்தி, ஆங்கிலம் என இரு மொழிகளில் தயாரா கப் போகும் இப்படத்துக்கு வசனகர்த்தா 'சத்யா', 'வாட்டர்', 'நாயக்' போன்ற படங்களில் பணியாற்றிய காஷ்யப்.

"நான் கபில்தேவின் ரசிகன். மிகச் சின்ன வயதிலேயே கிரிக்கெட் விளையாடத் தொடங்கிய கபில், பின்னர் கிரிக்கெட் மூலம் உலகளாவிய ஒரு த்ரில்லை உண்டாக்கியவர். அவருடைய லைஃப் ஸ்டோரிதான் இந்தப் படம். கபில்தேவ் எங்கெல்லாம் சரித்திர சாதனைகள் புரிந்தாரோ அங்கெல்லாம் போய் படம் பிடிக்கவுள்ளோம்" என்கிறார் காஷ்யப்.

படம் பற்றிய தகவல் சொல்ல கபில் கூட்டிய நிருபர் கூட்டத்தில் முக்கியக் கேள்வியே, "படத்தில் வில்லன் மனோஜ் பிரபாகரா?" என்பதுதான்.

கபில் கொஞ்சம் சமாளித்துக் கொண்டு, "நானும் மனோஜும் பத்து வருட நண்பர்கள்... அவரை எதிரியாக ட்ரீட்செய்யமாட்டேன். நண்பனாகவே அணுகுவேன்" என்றவரிடம் தொடர்ந்து நிருபர்கள், "மனோஜ் பிரபாகர் உங்கள் வாழ்க்கையில் விளையாடியவர்தானே? அவருடைய காரெக்டர் இல்லாத படமா?" என்று மடக்கினர்.


கபில், "அது உண்மைதான்.. ஆனால், அது படத்தில் சிறிய அளவில் இருக்கும் விஷயம். அதற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டாம்."

"மாடச் ஃபிக்சிங் விவகாரத்தில் ரிப்பேர் ஆன பெயரை சரிசெய்வதற்கு இந்தப் படமா?" என்றோம்.

"ஐயோ... அதற்கும் இதற்கும் சம்பந்தமில்லை. நான் எப்பவுமே பாஸிட்டிவ் திங்கர். அதனாலதான் முன்னுக்கு வந்தேன். என் வாழ்க்கையில் தொண்ணூறு சகவிகிதம் பாஸிட்டிவான விஷயங்கள்தான். இதை விட்டுவிட்டு பத்து சதவிகிதம் நெகட்டிவ்வாக நடந்த விஷயத்துக்காக போய் ஏன் நான் படம் எடுக்க வேண்டும்? இது கிட்டத்தட்ட டாகுமெண்டரி படம் மாதிரி. முழு 'ஸ்க்ரீன் பிளே' தயாரான பின்னர்தான் எதுவும் தெரியும்" என்று கூறியவர், "இந்தப் படம் நன்றாக ஓடினால் போதும். அது என் வாழ்க்கையில் முழுத் திருப்தி. இதில் வரும் லாபத்தைப் பல்வேறு வகையான ஸ்பான்ஸர்ஷிப்புக்கும் புதிதாக கிரிக்கெட்டுக்கு வரும் இளைஞர்களின் ஸ்காலர்ஷிப்புக்கும் தரத் திட்டமிட்டிருக்கிறேன்" என்றார் கபில்.

---

## தனது மூலிகைப் பெற்றோலுக்கு 'பேட்ரன்' அனுமதி கேட்கிறார் ராமர் பிள்ளை!



தனது மூலிகை பெட்ரோலுக்கு 'பேட்ரன்லைசன்' கேட்கிறார் சிறையிலிருந்துவந்த ராமர் பிள்ளை!

'மூலிகை எரிபொருள்' என்று உலகையே ஒரு கலக்கு கலக்கி கடைசியில் சி.பி.ஐ-யிடம் சிக்கிக்கொண்ட ராமர் பிள்ளை, அடுத்த ரவுண்ட் பரபரப்புக்குத் தயாராகிவிட்டார்!

'ராமர் பிள்ளையின் மூலிகை எரிபொருள் உண்மையா, பொய்யா?' என்று சோதனைச் சாலைகள் அக்குவேறு ஆணிவேறாக அலசி, பட்டிமன்றம் போல் வெவ்வேறு தீர்ப்புகள் தர... இதற்கிடையே சந்தடியில்லாமல் சில காரியங்கள் செய்திருக்கிறார் ராமர்பிள்ளை.

'மூலிகை என்ற பெயரில் ரசாயனப் பொருட்களைப் பயன்படுத்தி பெட்ரோல் தயாரிக்கிறார்' என்று சொல்லித்தான் சி.பி.ஐ. அவரை சிறைப்பிடித்தது. அந்த வழக்கு ஒரு பக்கம் நடந்து கொண்டிருக்க, பிணையில் வெளியே வந்து தனி டிராக்கில் தனது பெட்ரோலுக்கு அவர் காப்புரிமை வாங்கியிருக்கிறார். இந்த விஷயத்தில் இவருக்கு முழு பக்கபலமாக இருந்து உதவியிருப்பது ஆர்.எஸ்.எஸ். இயக்கம்!

இது தொடர்பாக ராமர் பிள்ளை கூறியிருப்பதைக் கேளுங்கள்

"நான் சிறையிலிருந்து வந்தவுடன், ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் தமிழக தலைவர் சம்பத்கமர் மூலம் அகில இந்தியத் தலைவர் சுதர்சன்ஜியைச் சந்தித்தேன். என் நிலையைச் சொன்ன பிறகு, 'உங்கள் காப்புரிமைக்கு நாங்களாச்சு' என்று நம்பிக்கை தந்தார். அந்த அமைப்பினரிடம் பழகியபின்தான் இந்தத் தேசத்தின் மீது அக்கறை கொண்ட இயக்கத்திடம் சரியாகச் சேர்ந்திருக்கிறோம் என்ற திருப்தி கிடைத்தது.

என் மூலிகை எரிபொருள் ஃபார்முலா முழுவதையும் அவர்களிடம் ஒப்படைத்தேன். அந்த அமைப்பைச் சேர்ந்த விஞ்ஞானிகளான டாக்டர் ஜ்யோதிஷி மற்றும் ஜம்பேகர் இருவரும் என் ஃபார்முலாபடி மூலிகை எரிபொருள் தயாரிக்க, அது வெற்றிகரமாக அமைந்தது.

அவர்களின் முயற்சியின் பேரில், மத்திய மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சர் முரளி மனோகர் ஜோஷி முன்பாக நடந்த சோதனையிலும் வெற்றிகிடைக்க...

அந்தப்பெரு முயற்சிகளின் விளைவாக, என் மூலிகை எரிபொருளுக்கு இந்திய அளவில் காப்புரிமை கிடைத்து விட்டது! இது, கடந்த வருடமே நிகழ்ந்து விட்டது.

ஆனால், நான் காத்திருந்தது அகில உலகக் காப்புரிமையை பெறுவதற்காக. அதற்காக நாங்கள் எடுத்த முயற்சியிலும் வெற்றி அடைந்து விட்ட நிலையில்தான், இப்போது இதை உங்களிடம் கூறுகிறேன்..." என்றார் ராமர் பிள்ளை. ராமர் பிள்ளை, அவரது வளர்ப்புத் தாயார், விஞ்ஞானிகளான ஜ்யோதிஷி மற்றும் ஜம்பேகர் ஆகிய நான்கு பேர் பெயரிலும்தான் பேட்டண்ட் பதிவாகியுள்ளதாம்!

"உங்களிடம் மூலிகை பெட்ரோல் ஏஜென்ஸிக்காக பணம் கட்டி ஏமாந்து விட்டதாக புகார்செய்த பழைய டீலர்களின் நிலை என்னாகும்?" என்று அவரிடம் கேட்டால்,

"அவர்கள் அனைவர் பற்றியும் ஒரு பட்டியல் தயாரித்து ஆர்.எஸ்.எஸ். அமைப்பினரிடம் கொடுத்து, உரிய மாநில மூலிகை எரிபொருள் விநியோக உரிமையை எனக்குத் தரும்படி கேட்டுள்ளேன். அவர்கள்தான் எல்லாவற்றையும் முடிவு செய்யப் போகிறார்கள். அவர்களது கட்டுப்பாட்டில் இருப்பதே எனக்குப் பாதுகாப்பாக இருக்கும் என நம்புகிறேன்..." என்று பதில் வந்தது.

ஆக, மீண்டும் ராமர் பிள்ளையைப் பற்றி பேச்சு எழுந்திருக்கிறது. ராமர் பிள்ளையின் இந்த புத்தாண்டு இன்னிங்ஸ் எத்தகைய திருப்பங்களை உண்டாக்கப் போகிறது என்பது போகப் போகத்தான் தெரியும்.

# எஸ்.டி.எஸ். தொடர் 81

இலங்கையில் இனக்கலவரம் என்றதும் முதலில் 1958ம் ஆண்டு இடம்பெற்ற இனக்கலவரம்தான் முதலில் கருத்தில் தட்டும். ஆனால் 1956ம் ஆண்டு சிங்களம் மட்டும் சட்டமூலம் பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்டதைத் தொடர்ந்து இடம் பெற்ற இனக்கலவரம் பற்றிய நினைவு பலருக்கும் வருவதில்லை.

இனக்கலவரம் என்று பெயர் கூறப்படுவதனால் இலங்கையின் தற்கால வரலாற்றை எடுத்துக் கொண்டால் 1919ல் சிங்களவர்களுக்கும் முஸ்லிம்களுக்குமிடையில் இடம் பெற்ற கலவரத்தைத்தான் இந் நாட்டில் மூண்ட முதலாவது இனக் கலவரம் என்று கூறுவது பொருந்தும். இரண்டாவது இனக் கலவரம் 1956ல் நடந்ததுதான்.

1956ம் ஆண்டு இடம்பெற்ற இனக்கலவரமும் 1958ம் ஆண்டு நடைபெற்ற இனக்கலவரமும் மட்டக்களப்பில்தான் முதன்முதலில் தொடங்கின. இவ்விரு கலவரங்களும் தமிழ் பேசும் மக்கள் வாழும் பிரதேசத்திலிருந்துதான் பொறிதட்டின என்று கூறப்படுவதால் இவ்விரண்டுக்கும் மூலகாரணம் தமிழ் பேசும் மக்களேதான் என்று இட்டுக்கட்டிவிடமுடியாது.

அநீதி நடைபெறுவதைச் சுட்டிக்காட்டி, அதனை நீக்குவதற்கு சாத்வீக நெறியில் போராடி நீதி கேட்ட சந்தர்ப்பங்களிலெல்லாம், அவ்வாறு நீதி கேட்டவர்களுக்கு கெல்லாம் அடியும் உதையும் அக்கிரமங்களும்தான் தீர்வாகக் கிடைத்தன. சிறுபான்மையினருடைய உரிமைகளைப் பறித்தெடுக்கும் பணியில் மும்முரமாக ஈடுபடும் ஆதிக்க வெறி பிடித்தவர்கள் அராஜகத்தை அவிழ்த்து விடுவதே வழக்கமாகவிருந்து வந்துள்ளது.

திரு.சிங்காரவேல் அவர்களால் ஜூன் 5ம் திகதி மாலையில் தாக்கப்பட்டவர்கள் எழுந்து முதன் முதலில் பஸார் வீதியில் அப்போதிருந்த 'லேக், வியூ ஹொட்டலுக்குச் சென்றுள்ளனர். இந்த நிறுவனத்துக்கு உரிமையாளர் திரு.குருநேரு என்பவர். நீண்ட நெடுங்காலம் மட்டக்களப்பில் வாழ்ந்தவர். அங்குள்ள சகல மக்களுடனும் எதுவிதமான பேதமுமின்றிப் பழகுவார்.

இன்று 'நல்லையாவீதி' என்றழைக்கப்படும் முன்னைய கோணல் தெருவில் திரு.சபாபதி என்பவருக்குச் சொந்தமான வீட்டில் குடும்பத்துடன் வாழ்ந்து வந்தார். இந்த வீட்டிலேயே பௌத்த வாலிபர் சங்கத்தையும் (Y.M.B.A.) நிறுவியிருந்தார்.

திரு.குருநேரு அவர்களும் அவருடைய நெருங்கிய உறவினருமான திரு.தனபால் அவர்களும் எப்பாகுபாடுமில்லாமல் பழகுவார்கள். அவர்கள் இருவரும் கடையில் இல்லாத நேரம் தாக்கப்பட்ட வாலிபர்கள் இருவரும் லேக் வியூ ஹோட்டலுக்குச் சென்றார்கள். அவர்கள் உடலில் காயங்களும் இருந்தமையினால் கடையிலிருந்தவர்கள் இருவரையும் சைக்கிள்களில் ஏற்றிக்கொண்டு ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்றனர். அவ்விருவரும் பணி புரிந்த கட்டட நிர்மாண ஒப்பந்தக்காரருக்கும் நிலைமை தெரிவிக்கப்பட்டது.

வதந்தி என்பது எத்தகைய விபரீதமானது என்பதை விளக்க ஏதுவான சம்பவம் இதனைத் தொடர்ந்து இடம் பெற்றது.

கல்லோயாக் குடியேற்றத்தில் தென் இலங்கையிலிருந்து பல்லாயிரக்கணக்கில் விவசாயிகள் என்ற பெயரில் பெரும்பான்மையின மக்கள் குடியேற்றப்பட்டிருந்தனர் அல்லவா? மட்டக்களப்பில் இடம்பெற்ற சம்பவம் அடுத்த நாளே கல்லோயா பள்ளத்தாக்கில் புயல் வேகத்தில் பல உருவங்களில் பரவத் தொடங்கியது.

மட்டக்களப்பில் ஐம்பதாம் ஆண்டுகளின் ஆரம்பத்தில்தான் தொலைத்தொடர்புப் பணிகள் ஓரளவு விரிவுபடுத்தப்பட்டன. மத்தியகல்லூரிக்கும் வின்சன்ட் மகளிர் பாடசாலைக்குமிடையில் அப்போது மட்டக்களப்பு பிரதான தபாலகம் அமைந்திருந்தது. இக்கட்டடத்தின் பின் பகுதியில் தொலைபேசி அழைப்புகளை ஒழுங்கு செய்யும் பணியகம் அமைந்திருந்தது. மட்டக்களப்பு நகரிலிருந்து ஏனைய பிற பகுதிகளுக்கும் தொலைபேசி அழைப்பு எடுப்பதானால், தனியார் தொலைபேசி வசதியுள்ளவர்கள் முதலில் தபாலகத்துடன் இணைந்திருந்த தொலைத் தொடர்பகத்துடன் தான் தொடர்பு கொள்ள வேண்டும்.

தொலைத் தொடர்புகளை ஒழுங்குபடுத்துவதற்காக இரு யுவதிகள் பணிக்கு அமர்த்தப்பட்டனர். இவர்களில் ஒருவர் தமிழ்ப்பெண். அடுத்தவர் ஒரு சிங்களப்பெண்.

சில ஆண்டுகளுக்கு முன்னர்தான் கம்பஹாவிலிருந்து குடியேறி சிறு சிறு வியாபாரங்களைச் செய்து கொண்டிருந்த ஒருவரின் மூத்த மகள்தான் தொலைபேசி அழைப்பு தொடர்பாளர் பதவியை ஏற்ற சிங்களப் பெண்.

மட்டக்களப்பில் இரு சிங்கள இளைஞர்கள் தாக்கப்பட்ட சம்பவத்தைத் தொடர்ந்து கல்லோயா பள்ளத்தாக்குக்கு அனுப்பி வைக்கப்பட்ட பயங்கரமான செய்தி வருமாறு:

**'தொலைபேசித் தொடர்புப் பணியில் சேர்க்கப்பட்ட சிங்கள யுவதியை நிர்வாணமாக்கி, அவளுடைய மார்பகங்களையும் அரிந்து, உயிரற்ற அவருடைய உடலை மட்டக்களப்பு கோட்டை முனைப்பாலைத்தின் நடுவே நிறுத்திவைத்துவிட்டார்கள்.'**

இத்தகைய கொடிய செயல் பற்றிக் கேள்விப்பட்ட எவருக்குத் தான் இரத்தம் கொதிக்காது. அமைதியாக இருந்த குட்டையைக் குழப்பி குழப்பத்தைத் தூண்டிவிட யாரோ விஷமிகள் இவ்வாறான ஒருவதந்தியை, பெரும்பான்மை இனத்தவர்கள் செறிந்துவாழும் கல்லோயப் பள்ளத்தாக்கில் பரப்பியுள்ளனர் .

இவ்வாறு பரப்பப்பட்ட வதந்தியால் வீறு கொண்டெழுந்த சிங்கள மக்கள், தங்கள் கண்களில் தென்படும் தமிழ் மக்கள் மீது பாய்ந்து தாக்கத் தொடங்கினர். கல்லோயா பள்ளத்தாக்கு எங்கும் வாழ்ந்த தமிழர்கள் மீது பலதரப்பட்ட தாக்குதல்களும் வரம்புமீறி நடைபெற்றன. சிலர் கொல்லப்பட்டனர். பலர் படுகாயங்களுக்குள்ளானார்கள்.

அம்பாறை நகரம் கல்லோயக்குடியேற்றத்தில் ஒரு பிரதான நகரமாக விளங்கியது. தமிழர்கள் பலரும் அங்கு குடியேறி இருந்தனர். நகர நிர்மாணப் பணியியீடுபட்டிருந்த அரச அலுவலகங்களில் பணிபுரிந்த நூற்றுக் கணக்கான அரச ஊழியர்கள் அம்பாறை நகரில் தங்கள் குடும்பங்களுடன் வாழ்ந்து வந்தனர்.

குடியேற்றத் திட்டங்களில் குடியேறிய பெரும்பான்மை சமூகத்தினர் பொல்லுகள், தடிகள், இரும்புச் சட்டங்களுடன் திரண்டுவந்து அம்பாறை நகரில் குடியிருந்த தமிழர்களை அடித்து உதைத்து வதைத்தனர். புறநகர்ப்பகுதிகளில் குடியிருந்த சிலர் கொல்லப்பட்டனர். தமிழர்களின்

## இரா.பத்மநாதன்

உடமைகள் கொள்ளையடிக்கப்பட்டன. குடியிருந்த வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன. அம்பாறை நகருடன் நின்று விடாமல் தமிழ் விவசாயிகள் குடியேறியிருந்த குடியேற்றத் திட்டக் குடிசைகளுக்கும் கலவரம் பரவியது.

திடீரென ஏற்பட்ட இக்குழப்பத்தினால் செய்வதறியாத குடியேற்ற வாசிகள் அயலிலுள்ள காடுகளுக்குள் புகுந்தனர். குடியிருப்புகளை அண்மித்தாக இருந்த கிராமங்களுக்கும் அகதிகள் இடம்பெயர்ந்தனர். காரைதீவு, கல்முனை, பாண்டிருப்பு, நீலாவணை, துறைநீலாவணை ஆகிய கிராமங்களில் திடுதிப்பென்று இடம் பெயர்ந்த மக்கள் புகுந்தமையினால் கிராமங்களில் வாழ்ந்த மக்கள் பல சங்கடங்களை எதிர்கொள்ள வேண்டியதாயிற்று.

இடம்பெயர்ந்த அகதிகளுக்கு உதவுவதற்கென இன்று எத்தனையோ தொண்டு நிறுவனங்களும் சமூக சேவை அமைப்புகளும் இன்றிருப்பது போல் அன்று இருக்கவில்லை. அரச நிறுவனங்களும் இத்தகைய இடம் ஒன்றை கனவில் கூட நினைத்திருக்கவில்லை. இத்தகைய காரணங்களால் விருந்தோம்பலில் முன்னணியில் இருப்பவர்கள் என்று புகழ் பெற்ற மட்டக்களப்புக் கிராம மக்கள் இப்பொழுது செய்வதறியாது தவித்தனர்.

சிங்களக் குடியேற்ற வாசிகள் தமிழ்க்கிராமங்களில் புகுந்து கொலை, கொள்ளை போன்ற வன்முறைகளில் ஈடுபட ஆரம்பிக்கவிருக்கின்றனர் என்ற வதந்திகள் ஒவ்வொரு வேளையும் புதுப்புது உருவங்களைப் பூண்டு பரவத் தொடங்கின. இதனால் தமிழ்க் கிராமவாசிகள் இரவு வேளைகளில் தங்கள் தூக்கத்தையே மறந்தார்கள். கிராமங்களிலெல்லாம் ஊர்காவற் படைகளை ஊர்ப்பிரமுகர்களே தெரிவு செய்து, கிராம மக்களையும் உடைமைகளையும் பாதுகாக்க ஏற்பாடு செய்தனர். அத்தோடு மட்டும் நின்று விடாமல், கிராமங்களுக்கு அம்பாறையிலிருந்தும் குடியேற்றத் தொகுதிகளிலுமிருந்தும் செல்லும் பாதைகளில் எத்தகைய போக்குவரத்தும் நடைபெறாமல் தடுப்பதற்கு ஏதுவாக பெரிய மரங்களை வெட்டி பாதைகளுக்குக் குறுக்கே போட்டு வைத்தனர். பாதைகளிலிலுள்ள தாம்போதிகள் சிறு சிறு பாலங்கள் எல்லாம் உடைக்கப்பட்டன.

இதே காலகட்டத்தில் திரு. இராசதுரை அவர்களின் பெயருக்கு அம்பாறை தபால் நிலையத்திலிருந்து அனுப்பப்பட்ட ஒரு தந்தி வந்து சேர்ந்தது. அதன் வாசகம் இதுதான்:

IF TAMILS GOING TO BOYCOTT SINGLESE 250000 SINGLESE WILL MARCH TOWARDS BATTICALOA.

இத்தந்தியை அனுப்பியவர் 'திரி சிங்கள' என்று காணப்பட்டது. 'தமிழர்கள் சிங்களவர்களைப் புறக்கணித்தால் இரண்டு இலட்சத்து 50 ஆயிரம் சிங்களவர்கள் மட்டக்களப்பு நோக்கிப் படையெடுப்பர்' என்பதுதான் இத்தந்தியின் தமிழாக்கம்.

இத்தந்தி கிடைத்ததும் இதனை எடுத்துக் கொண்டுபோய் மட்டக்களப்பு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியிடம் ஒப்படைத்தேன். அப்போதிருந்த நிலையப் பொறுப்பதிகாரியும் ஏனைய சில அதிகாரிகளும் எனது முறைப்பாட்டைப் பொருட்படுத்தவுமில்லை, முறைப்பாட்டைப் பதிவு செய்யவுமில்லை. பலவாறாக என்னைக் கிண்டல் பண்ணி பல வேண்டாத கேள்விகளையும் கேட்டு விட்டு என்னை அனுப்பி விட்டனர்.

தமிழ்க் கிராமங்களில் பாதுகாப்பு அரண்கள் அமைக்கப்பட்டு, ஊர் காவற்படை அமைக்கப்பட்டு இரவு வேளைகளில் கண்காணிப்புகள் நடைபெற்றமையினால் பல அனர்த்தங்கள் தவிர்க்கப்பட்டன. சில கிராமங்களை நோக்கி இரவு வேளைகளில் காடையர்கள் படையெடுக்கவே செய்தனர். ஆனால் அவர்களுடைய நோக்கம் ஈடேறவில்லை. தக்க பதிலடி கொடுத்து அவர்கள் விரட்டியடிக்கப்பட்டனர்.

அதே காலகட்டத்தில் மட்டக்களப்பு நகரிலும் ஒரு துர்ப்பாக்கிய சம்பவம் நடைபெற்றது. கோட்டை முனையில் திருமலைவீதி, ரயில்நிலைய வீதி மற்றும் அருணகிரி வீதி ஆகிய வீதிகள் சந்திக்கும் நாற்சந்தியில், அருணகிரி வீதி திருமலை வீதியைத் தொடும் மூலையில் ஒரு கடை பல நாட்களாக மூடப்பட்டிருந்தது. இக்கடையின் பின்புறமாக கீற்றுக் கொட்டகை ஒன்றிருந்தது. ஒரு நாள் மாலை இக்கொட்டகை தீப்பற்றி எரியத் தொடங்கியது.

தீப்பிடித்து எரிவதை அறிந்த சுற்று வட்டாரத்திலிருந்த பலர், தீயை அணைக்க உதவும் நோக்குடன் அங்கு ஓடிச் சென்றனர். நாலா திசைகளிலிலுமிருந்து மக்கள் அக்கடையை நோக்கி ஓடியபோது அக்கட்டடத்தின் மாடியிலிருந்து சரமாரியாக ஒருவர் துப்பாக்கி ரவைகளை வெளியேற்றிக் கொண்டிருந்தார். இத்திடீர்த் தாக்குதலால் பலர் நிலத்தில் சுருண்டு விழுந்தனர். இத்தாக்குதலின்போது மூன்று இளைஞர்கள் உயிர் துறந்தனர். பலர் காயமடைந்தனர்.

'எருவில் மூர்த்தி' என்ற புனை பெயரில் அருமையான கவிதைகளைப் புனைபவரான திரு.ஏரம்ப மூர்த்தி அவர்கள் படுகாயமடைந்தார்.

ஒரு கண்ணுக்கூடாக உட்புகுந்த துப்பாக்கி ரவை அடுத்த கண்ணின் பார்வையையும் அபகரித்து அவரை இரு கண்களுமற்றவராக ஆக்கிவிட்டது. அழகான இளைஞராகத் துடிப்புடன் வாழ்ந்த வந்த அவருடைய வாழ்விலும் இருள் சூழ்ந்தது.

கூட்டுறவுத் துறையில் திரு. ஏரம்பமூர்த்தி பணிபுரிந்து வந்தார். பார்வை இழந்த போதிலும் அவர் வாழ்வில் ஒளி ஏற்ற சிவயோகம் எனும் நங்கை நல்லாள் துணிந்தாள். இதனால் மூர்த்தி அவர்களுடைய வாழ்வு ஒளிபெற்றது. ஒரு பெண் மகவினைப் பெற்றெடுத்தார். யாழ் மருத்துவக்கல்லூரியில் பயின்ற திரு.திருமதி மூர்த்தி தம்பதியினரின் ஒரே மகள் இப்பொழுது கனடாவில் தன் கணவருடன் வாழ்ந்து வருகிறார்.

இந்தக் கண்மூடித்தனமான தாக்குதலில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினராகவிருந்து, இனந்தெரியாத சிலரின் துப்பாக்கிக்குப் பலியான திரு.சாம் தம்பிமுத்து அவர்களின் தந்தையான திரு.ஈ.எல்.தம்பிமுத்து அவர்களும் காயமடைந்தார்.

# வாரம் ஒரு வார்த்தை!

## தென்கச்சி – கோ.சுவாமிநாதன்

### 48. புகழ் மயக்கம்!

புகழுக்கு மயங்காதவங்க யாரு இந்த உலகத்துலே? ஒருத்தரைப் பார்த்து இன்னொருத்தர் சொன்னார்:

"சார்! இந்த அகில உலகத்துலேயும் புகழுக்கு மயங்காதவர் நீங்க ஒருத்தர் தான் சார்!" அப்படின்னார்.

இதைக் கேட்டதும் அவர்,

"அப்படியா? ரொம்ப ரொம்ப தேங்க்ஸ்"-ன்னு சொல்லி அசடு வழிஞ்சார்.

அப்படின்னா என்ன அர்த்தம்?

அதுக்கே அவர் மயங்கிட்டார்ன்னு அர்த்தம்!

ரெண்டுபேர் பேசிக்கிட்டிருந்தாங்க. அந்த ரெண்டு பேர்லே ஒருத்தர்கிட்டே பணம்அகதிகமா இருந்தது! இன்னொருத்தர்கிட்டே அறிவு அதிகமா இருந்தது! இது ரெண்டும் ஒரே இடத்துலே இருக்கறதுதான் அபூர்வமாச்சே!

பணம் அதிகமா வச்சிருக்காரே.. அவருக்கு ஒரு ஆசை! யாராவது நம்மளைப் புகழமாட்டாங்களா?-ன்னு!

பக்கத்துலே இருக்கிற அறிவாளியோ ரொம்ப ஏழை! பார்த்தார் அவர்!

சரி... இவருகிட்டே காசு குடுத்தாவது நம்மளைப் புகழ வைப்போம்...ன்னு நினைச்சார். அந்த ஏழையைப் பார்த்துச் சொன்னார்?

"இதோபாரு... என்கிட்டே ஆயிரம் பொற்காசுகள் இருக்கு. அதுலே ஒரு நூறு பொற்காசுகளை உன்கிட்டே குடுத்துடறேன். நீ கொஞ்சம் என்னைப் புகழ்ந்து பேசணும்! செய்வியா?"ன்னு கேட்டார்.

"இது நேர்மையான பங்கீடு இல்லேநு நீங்க பங்கு போடறதுலே நேர்மை இல்லாததுனாலே நான் உங்களைப் புகழ்ந்து பேச மாட்டேன்!"ன்னுட்டார் அவர்.

"அப்படியா சொல்றே? சரி... அப்படின்னா ஆளுக்குப் பாதியா எடுத்துக்குவோம். என்கிட்டே இருக்கறது 1000. இதிலே உனக்கு 500 எனக்கு 500.. இப்படி பிரிச்சிக்குவோம்.. இப்பவாவது கொஞ்சம் என்னைப் புகழ்ந்து பேசுவியா?"ன்னு கேட்டார்.

இவரு பார்த்தார்:

என்கிட்டே 500- உங்ககிட்டே 500 இருந்தா நாம ரெண்டு பேரும் சமம்ன்னு தானே அர்த்தம்?

அப்படியிருக்கும்போது எனக்கு சமமா பணம் வச்சிருக்கிற உங்களை நான் எப்படி புகழ்ந்து பேச முடியும்? அப்படின்னார்.

"சரி நான் வச்சிருக்கிற அவ்வளவையும் உன்கிட்டே குடுத்துட்டா அப்பவாவது என்னை புகழ்ந்து பேசுவீயா?"ன்னு கேட்டார் அவர்.

நீங்க உங்க கிட்டே இருக்கிற எல்லாத்தையும் குடுத்துட்டா நான் செல்வந்தன் ஆயிடுவேன்! நீங்க ஏழை ஆயிடுவீங்க! செல்வந்தனான நான் ஒண்ணுமே இல்லாத ஏழையாகிய உங்களை எப்படிப் புகழ்ந்து பேசுவேன்?" அப்படின்னார் இவர்.

அதுவும் நியாயம்தானே!

ஒண்ணுமில்லாதவனைப் புகழ்ந்து என்னத்துக்கு ஆவப்போவது?

இப்பதான் அந்த பெரிய மனுஷன் யோசிச்சார்.

நாம் என்ன செஞ் சாலும் இந்த ஏழை யின் வாயிலேயிருந்து புகழ் மொழிகளை வாங்க முடியாது-ன்னு புரிஞ்சிக் கிட்டார்.

புகழ் மொழிகளை விலைக்கு வாங்கி விடமுடியாது!

அப்படி வாங்கணும்ன்னு நினைச்சா அதனாலே எந்த பிரயோஜனமும் இல்லே!

புகழ்ங்கறது தானா வந்து சேரணும்ன்னா அதுக்குத் தகுந்த மாதிரி நல்ல காரியங்களை செய்யணும்! அது தான் முறை.

அதை விட்டுட்டு காசு குடுத்து புகழ வைக்கிறதோ... கடுதாசியிலே அச்சடிச்சி சுவத்துலே ஒட்டறதோ... எத்தனை நாளைக்கு நிலைக்கும்ன்னு நினைக்கிறீங்க?

ஒருத்தன் அப்படிதான் ஒரு சுவத்திலே ஒரு பெரிய போஸ்டரை ஒட்டிக்கிட்டிருந்தான். கிட்டே போயி அந்த போஸ்டர்லே என்ன எழுதியிருக்குன்னு பார்த்தேன்!

"பிறந்தநாள் காணும் பெரியவரே..! நீங்கள் வாழ்க பல்லாண்டு!" அப்படின்னு எழுதியிருந்தது. நான் அந்த ஆளைப்பார்த்து.

ஏங்க நீங்க பிறந்த நாள் வாழ்த்து தெரிவிக்கணும்ன்னா நேரா அந்தப் பெரியவரையே பார்த்து சொல்லப்புடாதா? இப்படி இந்த சுவத்துலே உங்க வாழ்த்தை பசை தடவி ஒட்டு நீங்களே... நீங்க இங்கே இப்படி ஒட்டுறது அந்தப் பெரியவருக்குத் தெரியுமா?ன்னு கேட்டேன்.

"தெரியும்!" ன்னார்.

"எப்படி?"ன்னேன்.

"அந்தப் பெரியவரே நான்தானே!" அப்படின்னான் அந்த ஆள்!

(வார்த்தைகள் தொடரும்)

# ஸ்போர்ட்ஸ்

## முரளியின் சாதனை தொடர்கிறது



இலங்கை கிரிக்கெட் அணியின் நட்சத்திர சூழல் வந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன், ஓர் இன்னிங்சில் பத்து விக்கட் எள்ற சாதனை பட்டியலில் இணையும் வாய்ப்பை மயிரிழையில் தவற விட்ட போதிலும் ஒரு போட்டியில் அதிக தடவை 10 அல்லது 10இற்கு மேற்பட்ட விக்கெட் எடுத்தவர் என்ற சாதனையை ஏற்படுத்தியுள்ளார்.

அண்மையில் கண்டி அஸ்கிரிய மைதானத்தில் நடைபெற்ற இலங்கை-சிம்பாப்வே அணிகளுக்கிடையிலான 2வது டெஸ்ட் போட்டியின் முதல் நாள் ஆட்டத்தில் சிம்பாப்வே அணியினரின் முதல் ஒன்பது விக்கெட்டுகளையும் சரித்த முரளி, இரண்டாம் நாள் ஆட்டத்தில் 10வது விக்கெட்டையும் வீழ்த்தி சாதனை படைப்பார் என அனைவரும் எதிர்பார்த்திருந்த போதும் இறுதி விக்கெட்டை வாஸின் பந்து பதம் பார்த்ததால் அவ் அரிய வாய்ப்பை முரளி இழந்தார். இதே போன்று 1998ம் ஆண்டு லோட்ஸ் மைதானத்தில் நடைபெற்ற இங்கிலாந்துக்கு எதிரான போட்டியிலும், முரளி ஒன்பது விக்கெட்டுகளை வீழ்த்திய போதும் இங்கிலாந்து அணித் தலைவர் அலெக் ஸ்டுவேட் 'ரன் அவுட்' முறையில் ஆட்டம் இழந்தமையால் சாதனை வாய்ப்பை இழந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இருந்த போதும், இரண்டாவது இன்னிங்சில் 4 விக்கெட்டை கைப்பற்றியதன் மூலம் ஒரு டெஸ் போட்டியில் 13 விக்கெட்டுகளை வீழ்த்தி, 10 தடவைகள் பத்துக்கும் மேற்பட்ட விக்கெட்டை வீழ்த்தியவர் என்ற சாதனையை தனதாக்கிக் கொண்டார். இதற்கு முன்பு ஒன்பது தடவைகள் போட்டி ஒன்றில் பத்திற்கும் மேறபட்ட விக்கெட்டுக்களை கைப்பற்றி நியூசிலாந்து வீரர் ரிச்சட் ஹட்லி சாதனையாளராக திகழ்ந்தார். இவர் 86 டெஸ் போட்டிகளில் பங்கு பற்றி ஏற்படுத்திய சாதனையை முரளி தனது 71 வது போட்டியில் முறியடித்துள்ளமை சிறப்பம்சமாகும்.

சர்வதேச கிரிக்கெட் வரலாற்றில் ஓர் இன்னிங்கில் 10 விக்கட் பெற்றவர்கள் என்ற பெருமையை இங்கிலாந்து வீரர் ஜிம் லேக்கர், இந்திய வீரர் அனில் கும்பே ஆகிய இருவர் மட்டுமே பெற்றுள்ளனர்.

எனினும், தனது டெஸ்ட் வாழ்க்கையில் 395 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ள முரளி, இன்னும் சில நாட்களில் ஆரம்பமாகவுள்ள ஸிம்பாப்வேயுடனான முன்றாவது டெஸ்ட் போட்டியின் போது மேலும் ஐந்து விக்கெட்டுகளை கைப்பற்றுவதன் மூலம் மிக குறைந்த போட்டிகளில் பங்கேற்று 400 விக்கெட்டுகளை கைப்பற்றிய சாதனைக்கு சொந்தக்காரன் ஆவார் என்று அனைவராலும் எதிர்பார்க்கப்படுகிறது.

# இலக்கிய நயம்

## ரகசிய ஆயுதங்கள்

"அமெரிக்கர்கள் முட்டாள்கள்" என்றான் கபிலன். கோகிலா விழிகளை உயர்த்திப் பார்த்தாள். அவள் கண்களையே ஊடுருவியபடி இருந்தான்.

"என்ன?" என்றாள் ஏதும் புரியாத குழப்பத்தில் "ஆப்கானிஸ்தானில் அமெரிக்கர்கள் காசைக் கரியாக்குகிறார்கள்..." என்றான் கபிலன் யோசனையோடு.

"ம்க்கும்" என்றாள். அவன் ஏதோ உளறுகிறான் என்ற சலிப்போடு. அவனையே பார்த்தபடி இருந்தாள்.

"மலைக் குகைகளைத் துளைத்து ஒஸாமாவின் ஆட்களை அதிர வைக்க அமெரிக்கர்கள் குண்டுகளுக்கு வீண்செலவு செய்துகொண்டிருக்கிறார்கள்" என்றான்.

'உனக்கென்னவாம்' என்று பார்வையிலேயே அவனைக் கேட்டபடி மௌனமாயிருந்தாள் கோகிலா.

அவளை நெருங்கி அமர்ந்து அவள் மோவாயைப் பிடித்து உயர்த்தினான்.

"அத்தனை குண்டுகளையும் விட அதி சக்திவாய்ந்த ஆயுதம், இந்தக் கண்களை அவர்கள் காணவில்லை" என்று அவள் கண்களுக்குள் பார்த்தபடியே சொன்னான்.

கோகிலா இமைகளைத் தாழ்த்தினாள்.

உளற ஆரம்பித்துவிட்டான் என்றால் அவனுக்கு உருவேறிவிட்டது என்பது அர்த்தம் என்று அவள் அறிவாள்.

கபிலன் இரு கைகளாலும் அவள் கன்னங்களைப் பற்றிப் பிடித்தான். அந்த மிருதுவான ஸ்பரிசத்தில் முளைக்குள் தேன்வடித்துச் சிதறுவதை உணர்ந்தான்.

"மலைகளை ஊடுருவி குகைகளைத் தகர்க்க இந்தக் கண்கள் போதும். செலவில்லாத ஆயுதம் என்பதுடன் திரும்பத் திரும்பவும் பாவிக்கலாம்" என்றான்.

அவள் மௌனம் அவனை மேலும் மேலும் பிதற்ற வைக்கும் சோக சௌந்தர்யமாயிருந்தது.

பார்வையைக் கீழே இறக்கியவன், "கண்கள் மட்டுமில்லை... ஆயுதக் களஞ்சியமே இருக்கிறது ஐயோ!" என்றான்.

அவன் பார்வை செல்லும் இடங்களை அறிந்து சற்றே அசைந்தாள். அவசரமாகத் தன் கைகளால் ஆடைகளைச் சரிசெய்துகொள்ளவும் முற்பட்டாள். அவன் கன்னத்திலிருந்து கைகளை எடுக்காமல், "மலைகளே மலைகளைத் தகர்க்குமா?" என்றான்.

அவள் ஏதோ சொல்ல உதடுகளை அசைத்தாள்.

சத்தம் வெளிவரவில்லை. பின் அவற்றை உள்ளே மடித்து அழுத்தமாக மூடிக்கொண்டாள்.

அந்த இதழ்களைப் பார்த்தான்.

"நீ சொன்ன கவிதையை நான் கேட்க வேண்டும்" என்றான்.



அவள் விழிகளில் வியப்பைக் காட்டி, மௌனத்தைத் தொடர்ந்தாள்.

"நீ உச்சரித்த கவிதை வரிகள் இதோ இதழ்களில் வந்து உட்கார்ந்திருக்கின்றன. மீண்டும் அசை. அதை நான் கேட்க வேண்டும்" என்றான்.

அவள் உதடுகள் பளபளத்தன. இளம் ரோஸ் நிறத்தில் குழந்தையினுடையதைப் போல ஈரத்தில் ஊறி வீங்கி திரண்டிருந்தன.

"அந்தக் கவிதையைப் படிக்க எனக்கு வேறு வழியும் இருக்கிறது" என்றான்.

அவள் கண்களை மூடிக் கொண்டாள்.

அவன் தன் இதழ்களால் அவள் கவிதையைப் படித்தான்.

அவள், அதுவரை இருந்த இறுக்கம் எல்லாம் தளர்ந்து உடல் துவண்டு அவனுடலில் படிந்தாள்.

நனைந்த புடவையெனச் சரிந்து விழவிருந்த அவள் உடலைத் தன்னோடு சேர்த்து இறுக்கிக் கொண்டான்.

"ம்..." அவள் போதையோடு முனகினாள்.

அவன் இறுக்கத்தை அதிகரித்தான்.

அவள் கன்னத்தின் மென்மையைத் தன் கன்னங்களில் உணர்ந்தபடி, "நான் ஆயுதங்கள் மீது தீராக் காதல் கொண்ட மனநோயாளி" என்றான்.

உளறல் அதிகரிக்க அதிகரிக்க உணர்ச்சிக் கடலினுள்ளே அவன் மூழ்கிக் கொண்டிருக்கிறான் என்பதவள் அறிவாள்.

"இந்த ஆயுதங்கள் என்னைத் துளைத்துச் சின்னாபின்னமாக்கிவிடட்டும்.. ஆயுதங்களுக்கு நான் அடிமை... என் உயிரை எடுத்துவிடு... அல்லலறுத்து ஆனந்தம் ஆக்கிவிடு..." என்று ஏதேதோ புலம்பினான்.

அவள் தோளில் முகம் சாய்த்துக் குழந்தையாய் செல்லம் செய்தான்.

அவள் அவன் காது மடல்களை உதடுகளால் வருடினாள். அவன் கூச்சத்தில் காதுகளை அவள் கன்னத்தில் தேய்த்தான்.

தோள்களைக் கைகளால் பற்றிப் பிடித்தான். "கண்கள் மட்டுமல்ல இவையும்.." என்று முணுமுணுத்தான்.

"என்ன?" என்று அவள் சிணுங்கினாள், இவன் அர்த்தம் புரியாத வார்த்தைகளையே பேசிக்கொண்டிருக்கிறான் என்ற சலிப்பில்.

"கண்டார் உயிருண்ணும் கண்கள் பின்னர்தாமே மறுபார்வையால் அந்த உயிரைத் திரும்ப வழங்கி விடுகின்றன. அதுபோல, இந்தத் தோள்களும் எனக்குத் தழுவும் போதெல்லாம் புத்துயிரளிக்கத் தவறுவதில்லை.."

அவள் அவன் முகத்தை எடுத்து நெஞ்சோடு சாய்த்துக் கொண்டாள்.

அவன் அவள் கண்களை ஏறிட்டபடி சொன்னான்:

"உன்னைத் தழுவும் போதெல்லாம் எனக்குள் புத்துயிர் தளிர்ப்பதை உணர்கிறேன். ஒருவனுக்குப் புத்துயிரளிக்க வல்லது அமிழ்தம்தான். இந்த அழகிய தோள்கள் அமிழ்தத்தால் செய்யப்பட்டிருக்க வேண்டும். அதனால்தான் உன்னைத் தழுவும் போதெல்லாம் நான் புதிய உயிர் ஆகின்றேன்."

**உறுதோ றுயிர்தளிர்ப்பத்**
**தீண்டலாற் பேதைக்**
**கமிழ்தின் இயன்றன தோள்.**

*(குறள்: 1106)*

தருவது முழுடில்யன்

# சிந்தியா பதில்கள்

**★ சென்றவார சிந்தியா பதிலில் வந்த கந்தசாமியின்கதை முடிந்ததாகத் தெரியவில்லையே?**

எம்.பாயிஸ், கொழும்பு-10.

*ஆமாம். கந்தசாமிக் கிழவனின் பதிலை அச்சு இயந்திரம் விழுங்கி விட்டது. இந்தியா போவதற்காகப் புறப்பட்டு, கல்லுடன் கட்டப்பட்ட படகில் சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருக்கும் கந்தசாமியிடம் அடுத்தநாள் வருகிறார்கள் உறவினர்கள். பனி மூட்டத்தில் ஒன்றும் சரியாகத் தெரியவில்லை. வந்தவர்களில் ஒருவன் "ஹலோ கந்தசாமி எப்படி இருக்கிறீர்கள்?" என்று கத்தினான்.*

*"இந்தியாவில் உள்ள உங்களுக்கு என் பெயர் எப்படித் தெரிந்தது?" என்று படகிலிருந்து கத்தினான் கந்தசாமிக் கிழவன்.*

*இப்போது கதை முடிந்துவிட்டது. நம்மிடமும் பல கந்தசாமிக் கிழவர்கள்.*

❀❀❀

**★ காதலில் வெற்றிபெற என்ன வித்தையைக் கையாள வேண்டும்?**

ஹுதா றஸாக், காத்தான்குடி-03.

*நீங்கள் தபாலட்டையில் செய்திருப்பது போல ரோஜாப் பூ படத்தை வெட்டி ஒட்டி அனுப்புவதெல்லாம் அந்த வித்தைகளில் அடங்கும்தான். ஆனால் கீழே புனைபெயராக 'ஒஸாமா' என்று போட்டு மிரட்டுவது தேவையில்லை.*

❀❀❀

**★ தமிழ்த் திரைப்பட நடிகர்களில் அதிகம் முத்தம் கொடுப்பதில் பெயர் பெற்றவர் பத்மஸ்ரீ கமல்ஹாசன் என்பது தெரியும். நடிகைகளில் அதிகம் முத்தம் வாங்கிய (படங்களில்) நடிகை யார்?**

பெ.கோகிலன், மேபீல்ட், ஹட்டன்.

*வேறு யார் ஷாலினிதான். இற்றைக்கு பதினைந்து வருடங்களுக்கு முன்பு.*

❀❀❀

**★ உங்கள் வாழ்க்கையில் நீங்கள் செய்த சாதனை என்று உங்களால் உறுதியாகச் சொல்ல முடிவது எது?**

எம்.ஏ.றிபாத், பஸ்யாலை.

*என் முதல் பத்துவருடங்களில் இந்த சமூகம் சொல்கிற எந்தக் கெட்ட பழக்கமும் என்னிடம் இருந்ததில்லை என்பது.*

❀❀❀

**★ சிம்ரனின் கடைசித் தங்கையைப் பற்றி விபரம் ஏதாவது தர முடியுமா?**

சி.ஜீவிதா, கல்கிசை.

*இருந்தாலும் அந்த நடனக்காரருக்கு இவ்வளவு கொடூர மனம் இருக்கக்கூடாது. 12B பா.பரவசத்திலெல்லாம் வாடிப்போன முகமும், வாளிப்பை இழந்த இடையும், "குறுகுறு' நீங்கிய விழிகளும், பின்புறமாய்ப் பார்த்தால் லேசாகக் கௌதமிபோல் ஆகிவிட்ட தோற்றமுமாக... அடடா, கண்கொண்டு பார்க்கவே முடியாம... என்ன கேட்டீர்கள்? தங்கையா? நாசர் இயக்கும் 'பாப்கார்ன்' படத்தில் நடிக்கிறதாம். படம் வரட்டும். மனம் ஆறுகிறதா பார்ப்போம்!*

❀❀❀

**★ சேது திரைப்பட இயக்குனர் பாலா பற்றி என்ன நினைக்கிறீர்கள்? அவரது முகவரியை தரமுடியுமா?**

சு.லோகேஸ்வரன், கொழும்பு.

*எடைபோடுவதற்கு அவரது பேட்டியொன்றிலிருந்து ஒரே வரி: "எனக்கு எல்லா உயிர்களும் விலை மதிக்க முடியாத உயிர்கள்தான்; சிங்களவர்கள் செத்தாலும் வருத்தப்படுவேன் நான்..."*

பாலாவின் முகவரி: 2/16
லோகைம்மா காலனி, சாலிகிராமம்,
சென்னை, இந்தியா
தொலைபேசி: 044-3761634

❀❀❀

**★ ஞாயிற்றுக்கிழமைப் பேப்பர்களில் பத்தி எழுத்துக்களை எழுதுவோரிடம் புதுவித உற்சாகம் கொப்பளிப்பதைக் கவனித்தீர்களா?**

இரா.கணேசன், கொழும்பு-13.

*அவர்களிடம் என் தாழ்மையான விண்ணப்பம் ஒன்றுண்டு; 94ல் எழுதியவர்கள் எட்டு மாதங்களிலேயே கனடாவுக்கும் காணாமலும் போய்விட்டதைப் போல் உங்களையும் எங்கே என்று தேடும்படி ஆகிவிடக்கூடாது. குறைந்தது 2003 ஜனவரி வரைக்குமாவது மக்கள் தொடர்ந்து உங்கள் பத்தி எழுத்துக்களைப் பார்க்கும் பாக்கியத்தைத் தரவேண்டும். அரசியல்வாதிகளின் தேர்தல் சமய உற்சாக விநியோகிப்புகளைப் போலவே ஆட்சி மாற்றக் கட்டங்களில் மட்டும் சமாதானத்திட்ட விளக்கங்களும், இரு தரப்புக்கான ஆலோசனைகளுமாக கொப்பளித்துவிட்டு பிறகு வாய்மூடி ஒதுங்கிப் போய்விடக்கூடாது என்பது எமது மக்களின் வேண்டுகோளும் அக்கறையுமாகும்.*

❀❀❀

**★ இந்தியாவுக்கு அமையப்போகும் தரைவழிப் பாதையில் போய் சுற்றிப் பார்த்துவிட்டுத் திரும்ப ஆசையாக இருக்கிறது. எப்போது நிறைவேறும்?**

எஸ்.சுகந்தன், மாங்கேணி.

*நீங்கள் இருப்பதை விட்டுவிட்டு பறப்பதைப் பிடிக்க ஆசைப்படுவதை நிறுத்தும் போது.*

❀❀❀

**★ இப்போதைய அரசு இனப்பிரச்சனைத் தீர்வு விடயத்தில் இன்று காட்டும் அக்கறையை பொ.ஐ.மு. ஆட்சிக்காலத்தில் காட்டி இருந்தால் எப்போதோ தீர்வு வந்திருக்குமல்லவா?**

க.கமால்தீன், ஏறாவூர்-03.

*சரி, இருவரும் சேர்ந்து எதைத் தந்தால் தீர்வு என்று ஏற்றுக் கொள்வீர்கள் என்பதைச் சொல்லவே இல்லையே!*

❀❀❀

**★ "சிஹல உறுமய" பற்றி இரண்டு சொற்களில்..?**

எம்.எஸ்.குட்டி, கதியப்புழை.

*"பதில் உறுமல்".*

**★ எழுத்தாளர் பாலகுமாரனின் முகவரியை தருவீர்களா? (இரண்டாவது முறையாக கேட்டு எழுதுகிறேன்)**

க.கமலதாசன், வந்தாறுமூலை.

101/8-ஏ, வெங்கடாசலம் தெரு
(ஜம்மி பில்டிங்ஸ் பின்புறம்),
சென்னை 600 004.

*இரண்டாவது முறையாக என்ன, இருபதாவது முறையாகவும் முகவரியைப் பெற்றே தீருவது என்று அடம்பிடிப்போரின் எண்ணிக்கையைப் பார்க்கும்போது, இதற்கென்றே தனிப் பத்திரிகை ஒன்று தொடங்கிவிடலாம் என்று தோன்றுகிறது.*

❀❀❀

**★ சில படங்கள் எடுத்து முடித்துத் திரைக்கு வந்த பிறகு, மீண்டும் அதன் முடிவில் மாற்றங்கள் செய்து வெளியிடப்படுவதாக செய்திகளில் பார்க்கிறோம். இது ஏன்சிந்தியா?**

ஆர்.மாலதி, கொழும்பு-05.

*"மனித சுவாவத்தையொட்டி சாரங்கதாரா நாடகத்தைத் துக்கரமாகவே முடித்தேன். அதனை முதன் முதலில் எங்கள் சபையோர் பெங்களூரில் நடித்துக் காட்டினார்கள். சாரங்கதரன் வெட்டுண்டவுடன் நாடகத்தை முடித்தோம். திரை விழுந்தது. சபையில் இருந்தவர்கள் ஒரே ஆரவாரம் செய்தனர். என்னவென்று விசாரித்தோம். 'நாங்கள் நாடகத்தைப் பார்த்துவிட்டுத் துக்கத்துடன் வீட்டுக்குப் போக விரும்பவில்லை. சாரங்கதரனுக்கு உயிர்கொடுங்கள்' என்று சிலர் கூச்சலிட்டனர். குழப்பத்தை அடக்க முடியவில்லை. உடனே அவசர அவசரமாக ஒரு நடிகனுக்கு ரிஷி வேடம் போட்டு சாரங்கதரனுக்கு உயிர்கொடுக்கச் செய்தோம். சாரங்கதரனாக நடித்த நான் உயிர்பெற்று எழுந்தவுடன், மிகுந்த குதூகலத்துடன் ரசிகர்கள் கைகொட்டிக் களிப்படைந்தார்கள்!"*

*1930 களில் நேர்ந்த அந்த அனுபவம் தனது நாடக நினைவுகளை மீட்டிய பம்மல் சம்பந்த முதலியார் எழுதியது. எமது வெகுஜனங்கள் அப்போதைய நிலைமையிலிருந்து ஒன்றும் மாறிவிடவில்லை என்று தெரிகிறது.*

❀❀❀

**★ தமிழர்களுக்கென்று இப்போதிருக்கும் ஒரே அமைச்சரிடம் அரச நிறுவனங்களில் நடக்கும் ஆட்சேர்ப்பு, பதவி மாற்றங்கள் தொடர்பாகப் பல விடயங்கள் பேச வேண்டும். எப்படித் தொடர்பு கொள்ளலாம் என்று எனக்கு உதவுவீர்களா?**

பி.குமார் கொழும்பு-05.

*யாழ்ப்பாணத்தின் பிரபல பத்திரிகையாளரைப் பிடியுங்கள். அவர்தான் அமைச்சருக்கு எல்லாம்.*

❀❀❀

# மன்னாதி மன்னன் 89

## பவளக்கொடிக்கு மறுமணம்

**இராஜகுமாரன்**

பவளக்கொடியின் கெட்டித்தனத்தை அறிந்துகொள்வதற்காக மன்னர் விக்கிரமாதித்தனும் அமைச்சர் பட்டியும் திட்டமிட்டனர். இரவு வேளைகளில் பவளக்கொடியை மஞ்சத்தின் நடுவில் படுக்க வைத்துவிட்டு அவர்கள் இருவரும் பவளக்கொடியின் இருமருங்கிலும் படுத்திருப்பார்கள்.

பவளக்கொடியின் ஆடைகளைச் சலவை செய்ய முற்பட்டபோது அந்த ஆடைகளிலிருந்து எழுந்த நறுமணத்தால் கவரப்பட்ட சலவைத் தொழிலாளப் பெண்ணின் மகன் ஆலமர விழுதுகளைப் பிடித்து கோட்டை மதிலின்மேல் ஏறி அந்தப்புரத்துக்குள் நுழைந்து பவளக்கொடியை அணுகி விடுகிறான். பவளக்கொடியின் அருகில் இருப்பவன் யார் என்பதை அறிந்து கொள்ள முடியாமல் மன்னரும் அமைச்சரும் ஒருவர்மீது மற்றவர் சந்தேகம் கொள்ள நேரிடுகிறது. பொழுது புலர்வதற்கு முன்னர் அந்த இளைஞனை வேறோர் அறைக்குள் கொண்டு போய்விட்டு கதவைப் பூட்டி விடுகிறாள்.

அடுத்த நாள் அதிகாலையில் விக்கிரமாதித்தனுக்கும் அமைச்சர் பட்டிக்குமிடையிலேற்பட்ட சந்தேகம் மறைகிறது. பவளக்கொடியுடன் முதல் நாளிரவு இருந்தவன் யார் என்பதை அறிந்து கொள்வதற்காக அமைச்சர் பட்டி கோட்டைக்குள்ளிருந்த பூந்தோட்டத்தில் உலவினார். அங்கே ஓர் அதிசயம் நடைபெறுவதைக் கண்டு வியப்புற்றார்.

வான மண்டலத்தில் சஞ்சரித்த இரு முனிவர்கள் அரண்மனை அருகிலிருந்த பூங்காவிற்குள் வந்து இறங்கினர். இருவரும் தங்களுடைய சடா முடியை அவிழ்த்து விட்டதும் அவற்றுள்ளிருந்து அழகான இரு இள மங்கையர் வெளியேறினர். அவ்வாறு வெளியே வந்த மங்கையர் இருவரும் நீராடுவதற்கு ஒரு மரத்தின் மறைவில் சென்று



தங்கள் ஆடைகளைக் களைந்தனர். ஆடைகளில் ஒளித்திருந்த இரு இளைஞர்களும் வெளியே வந்தனர். அவர்களை மறைவான ஓரிடத்தில் நிறுத்திவிட்டு முனிவர்களிருவருடனும் சேர்ந்து பொய்கையில் நீராடினர்.

இக்காட்சியைக் கண்ட அமைச்சர் பட்டி உடனடியாக அந்தப்புரம் சென்று பவளக்கொடியிடம் பத்துப் பேருக்கு உணவு தயாரிக்குமாறு பணித்தார். மன்னர் விக்கிரமாதித்தன், அமைச்சர் பட்டி ஆகியோருடன் தான் மட்டுமே அங்கு இருக்கும்போது அமைச்சர் பத்துப் பேருக்கு உணவு தயாரிக்கச் சொல்கிறாரே என்று யோசித்த பவளக்கொடி எதுவுமே கூறாமல் நேராக சமயலில் இறங்கலானாள்.

அமைச்சர் பட்டி பொய்கைக்கரையை வந்தடைந்ததும் முனிவர்கள் இருவரும் நீராடிவிட்டு, அவர்களுடைய சடாமுடியில் அவர்களுடன் வந்திருந்த பெண்களையும் சடாமுடிக்குள் மறைத்து விட்டிருந்தனர். அவர்களுக்கு வணக்கம் செலுத்திவிட்டு பட்டி, "முனி சிரேஷ்டர்களே, தங்கள் இருவருக்கும் அரண்மனையில் மதிய உணவு தயாராக இருக்கிறது. தயவு கூர்ந்து இருவரும் என்னுடன் வந்து பசியாறி விட்டுச் செல்ல வேண்டும்" என்று பணிவாக விண்ணப்பித்தார்.

அமைச்சர் பட்டியின் வேண்டுகோளை மறுக்கமுடியாத முனிவர்கள் இருவரும் அமைச்சரைத் தொடர்ந்து அரண்மனை சென்றனர்.

உணவு பரிமாறும் இடத்தில் பத்து இலைகள் போடப்பட்டிருந்தன. முனிவர்கள் இருவரும் இலைகளின் முன் அமர்ந்ததும், அவர்களிடம் அணுகிய அமைச்சர் பட்டி, "முனிபுங்கவர்களே, தாங்கள் இருவர் மட்டும் உணவருந்தினால், பாவம் உங்களுடன் வந்திருக்கும் இரு கன்னியர்களும் உணவு கொள்ளலாகாதா? ஆகவே தங்கள் சடாமுடிகளை அவிழ்த்து அக்கன்னியர்களையும் உணவு உட்கொள்ள அனுமதியுங்கள்," என்று கோரினார்.

பட்டியின் கூற்றைக் கேட்ட முனிவர்கள் துணுக்குற்றனர் எனினும், தங்கள் அந்த ரங்க லீலை எப்படியோ இவருக்குத் தெரிந்து விட்டமையினால், மறு வார்த்தை எதுவும் கூறாமல் அவ்விரு மங்கையரையும் வெளியே விட்டனர். அவர்கள் இருவரையும் உணவருந்த இலைகளின் முன் அமருமாறு பட்டி கூறியதும் அவர்களும் அமர்ந்து கொண்டனர். அவர்கள் அருகில் சென்ற அமைச்சர் பட்டி, கன்னியரே நீங்கள் மட்டும் பசியாறினால் உங்களுடன் ஒளித்துக் கொண்டிருக்கும் இளைஞர்கள் பசியுடன் இருப்பார்களல்லவா? அவர்களையும் வெளியே வரச் சொல்லுங்கள். அவர்களும் உங்களுடன் சேர்ந்து உணவருந்தட்டும்," என்று கூறினர்.

வெட்கமும் சோகமும் ஆச்சரியமும் ஒருங்கே கொண்ட அம்மங்கையர் இருவரும் எழுந்து மறைவிடத்துக்குச் சென்று ஆடைகளைக் களைந்ததும், மறைந்திருந்த இரு இளைஞர்களும் வெளியே வந்தனர். அவர்களையும் உணவு உட்கொள்ளுமாறு பட்டி கேட்டுக் கொண்டதும் அவர்கள் அமர்ந்து கொண்டனர்.

அது வரை நடைபெற்ற சம்பவங்களை அவதானித்துக் கொண்டு நின்ற மன்னர் விக்கிரமாதித்தன், அமைச்சர் பட்டியின் விசித்திரமான ஆற்றலை வியந்த வண்ணம் நின்றிருந்தார். பட்டி அரசரையும் பந்தியில் அமருமாறு கேட்டுக் கொண்டு, மன்னரின் அருகில் இரு இடங்களைக் காலியாக விட்டுவிட்டு மூன்றாவது இலையின் முன் அமர்ந்தார். பவளக்கொடியை அழைத்து அனைவருக்கும் உணவு பரிமாறுமாறு கூறினார். அவருறும் அனைவருக்கும் உணவு பரிமாறினாள். இலைகள் பத்திலும் உணவு பரிமாறப்பட்டதும், பவளக்கொடியை அரசருக்கருகில் உள்ள இலையின் முன் அமருமாறு கேட்டுக் கொண்டார். அவளும் அமர்ந்தாள். மொத்தம் ஒன்பது இலைகளின் முன்னாலும் ஒன்பது பேர் அமர்ந்திருந்தனர். ஓர் இலையின் முன் எவரும் இல்லாமல் காலியாக இருந்தது. இதனால் அந்த இலையின் முன் யார் அமரப் போகிறார் என்று அனைவரும் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்த வேளையில், பட்டி "பவளக்கொடி," என்று அழைத்ததும் அவள் திகைப்படைந்ததுடன் உடல் நடுக்க முற்றாள்.

"பவளக்கொடி, நீ மறைத்து வைத்திருக்கும் உன் காதலனையும் அழைத்து வந்துவிடு. நம் எல்லோருடனும் அவனும் அமர்ந்து உணவு உட்கொள்ளட்டும்."

இவ்வாறு அமைச்சர் பட்டி கூறியதும் நாணத்துடன் தலை குனிந்த வண்ணம் மன்னர் விக்கிரமாதித்தனிடம் சென்றாள். அவரும், "உம்... சரி போய் அவனை அழைத்துவா" என்றார். பவளக்கொடி சலவைத் தொழிலாளப் பெண்ணின் மகன் ஒளிந்து கொண்டிருக்கும் இடத்துக்குச் சென்று அவனையும் அழைத்துக் கொண்டு வந்தாள். அனைவரும் எதுவிதமான பேச்சு வார்த்தையுமில்லாமல் உணவினை உட்கொண்டனர்.

அமைச்சர் பட்டியின் இத்தகைய செய்கைகளால் வியப்புக்கு மேல் வியப்படைந்த மன்னர் விக்கிரமாதித்தன், பட்டியை இறுகக் கட்டித் தழுவி தனது வியப்பையும் நன்றியையும் தெரிவித்தார்.

"அடுத்த நடவடிக்கை என்ன?" என்று மன்னர் வினவியதும் பட்டி, "சலவைத் தொழிலாளப் பெண்ணின் புதல்வனை பவளக்கொடிக்கே மணம் முடித்து வைப்போம். முனிவர்கள் அழைத்து வந்த இளமங்கையரை என்ன செய்வது என்று அவர்களே முடிவெடுக்கட்டும்" என்று கூறினார்.

அம் முனிவர்கள் இருவரும் எதுவித கருத்தும் கூறாமல் அவ்விடம் விட்டு தலை குனிந்த வண்ணம் வெளியேறினர். அந்த இளைஞர்கள் இருவரையும், அவர்களை தங்கள் "ஆடைகளுக்குள் ஒளித்து வைத்திருந்த பெண்களை மணந்து கொள்கிறீர்களா?" என்று கேட்டதும் மறுவார்த்தை எதுவும் கூறாமல் சம்மதமளித்தனர். அம்மங்கையரும் மகிழ்ச்சியுடன் அவ்விளைஞர்களை மணக்க ஒப்புதலளித்தனர்.

அடுத்த நாட்காலையில் பவளக்கொடிக்கும் சலவைத் தொழிலாளப் பெண்ணின் மகனுக்கு முறைப்படி திருமணம் நடந்தேறியது. அந்த இளைஞனையே காலகண்டபுரக் கோட்டையின் அரசனாக மன்னர் விக்கிரமாதித்தன் முடி சூட்டி வைத்தார். அதே முகூர்த்தத்தில் முனிவர்களுடன் வந்த மங்கையர் இருவருக்கும், ஆடைகளில் ஒளித்து வந்திருந்த இளைஞர்களுக்கும் திருமணம் நடந்தேறியது. அந்த இளைஞர்கள் இருவரையும் கால கண்ட புர மன்னருக்கு மந்திரிகளாக மன்னர் விக்கிரமாதித்தன் பதவி அளித்தார்.

இத்தனை சம்பவங்களும் மன்னர் விக்கிரமாதித்தனுடைய காடாறுமாத காலக்கெடுவுக்குள் நடந்தேறின. அடுத்த நாட்காலையில் மன்னர் விக்கரமாதித்தனும் அமைச்சர் பட்டியும் வேதாளத்தின் தோளில் ஏறிக்கொண்டு உஜ்ஜயினி மாகாளி பட்டனம் போய்ச் சேர்ந்தனர். ஊரின் எல்லையிலிருந்த அவர்களின் குலதெய்வமான காளிகாம்பாள் ஆலயம் சென்று அன்னையின் அருளை வேண்டிக் கொண்டு அரண்மனையை அடைந்தனர்.

விக்கிரமாதித்த மாமன்னரின் அரியணையிலிருந்த ஒன்பதாவது படிக்குக் காவலாக நின்றிருந்த நவரத்தின வல்லிப்பதுமை இவ்வாறு விக்கிரமாதித்த மன்னரினதும் அவருடைய மதியுக மந்திரி பட்டியினதும் வீரதீரப் பராக்கிரமங்களை கதையாகக் கூறி முடித்துவிட்டு, போஜ மன்னரிடம், "போஜமாமன்னரே, விக்கிரமாதித்த மாமன்னரின் இத்தகைய பெருமைகளில் ஒரு சிறி தளவேயாவது தங்களிடம் இருக்குமானால், தாங்கள் மேலே செல்லலாம்" என்று கூறியது.

இக்கதை முழுவதும் கூறி முடிப்பதற்குள் கதிரவன் தன் கிரகணங்களை ஒடுக்கிக் கொண்டு மேற்கே மறைந்துவிட்டான். எனவே மேற்கொண்டு எஞ்சியுள்ள படிகளை ஏறிக்கடக்க முடியாதனெ எண்ணிய போஜ மன்னர் தனது அரண்மனை திரும்பினார்.

(தொடரும்)

# காதல்னா என்ன?

**கிறுக்கல்கள் என்ற கவிதைத் தொகுப்பு மூலம் இலக்கிய உலகில் தனக்கென தனியானதொரு இடத்தை பிடித்துள்ள நடிகர் ரா.பார்த்திபன் தென்னிந்தியாவில் இருந்து வெளிவரும் பிரபல சஞ்சிகைகளில் பல்வேறு தலைப்பிலான மினி கட்டுரைகளை எழுதிவருகிறார். ஆழமான கருப்பொருளொன்றை சுவையாகவும், சரளமாகவும் திறம்பட எழுதுகிறார். பார்த்திபனின் அவ்வாறான மினி கட்டுரை ஒன்றை கீழே தருகிறோம்.**

*'காதலை'ப் பற்றி எதாவது எழுதுங்களேன். 'பற்றி' எரியும் காதலைப்பற்றி எழுதச்சொல்லி நிறைய கடிதங்கள், தொலைபேசிகள்..*

*இல்லாததைப்பற்றி என்ன எழுதுவது..?*

*இல்லாததா..?*

*ஆம்! இருப்பதல்ல அப்படியே!*

*அப்படியென்றால்வருவதா..?*

*வருவதுமல்ல.. வந்து கொண்டேயிருப்பது.*

*விளக்கமாக...*

*'வழிநெடுக காதல் பூக்கும்' என்ற பெயரில் எழுதவுள்ளேன். எனவே, இப்போதைக்குத் தீபாவளி நல்வாழ்த்துக்கள்!*

*நான் எழுதுவது அநேகமாக உண்மையாகவும் நேர்மையாகவும் இருப்பதால், அது உள்ளுக்குள் நிறையப் பேருக்குப் பிடித்துப்போகும்- வெளியே சொல்லாமல்.*

*சென்ற வாரம், பாண்டிச்சேரியிலிருந்து ஒரு போன்..*

*"'காதல்'ன்னா என்னான்னு க்ரெக்டா எழுதுங்க சார்!*

*"நீங்கதான் சொல்லுங்களேன்... 'காதல்'ன்னா என்ன..?"- நான்.*

*"என் காலேஜ் பாய்ஸும் ஹாஸ்டல் கேர்ள்ஸும் ஒரு விஷயத்தை க்ளியரா சொல்றாங்க. கல்யாணத்தை முடிஞ்ச வரைக்கும் தள்ளிப் போட்டுட்டு, மனசுக்குப் பிடிச்ச மாதிரியெல்லாம் சந்தோஷமா இருக்குறது. காதல்ங்கிற பேர்ல ஒருத்தன்கிட்ட மாட்டிக்கிறதுல பிரயோஜனமில்லேன்னு..."*

*குழப்பமில்லாத தெளிவு 'கோயிங் ஸ்டெடி'யா இருக்கும்போது, காதல் பூவாய் மலர்வது; புனிதமாய்ப் புலர்வது; கடைசிவரை கன்னியாய் இருப்பது என்றெல்லாம் உரைப்பது காலத்தோடு ஒட்டாத கருத்தாய் எழுத்தாய் இருக்கும்.*

*உண்மை சுடுமே! புண்ணாகும்வரை சுடவேண்டும். அப்போதுதான் இன்னொரு முறை அதைத் தொட வேண்டும் என்ற ஆர்வம் குறையும். தேனீ கொட்டும் அபாயம் தெரிந்தே, சொட்டும் தேனைச் சுவைக்கும் சுபாவம் வேண்டும்.*

*வயதுக்கு வந்த பிறகும் விவரம் தெரியாததுபோல, எதுவோ அரங்கேற, எதையோ ஒத்திகை பார்ப்பதுபோல நடிக்கும் மனசு.*

*உடல் சார்ந்ததாகவே இருந்தாலும், அங்க அடையாளம் தெரியாமல், 'இங்க, இந்த நேரத்துல அவன்கிட்டேயிருந்து ஒரு SMS, செல்லுலரில் வந்தால் எப்படியிருக்கும்..?', 'என் தேவதை மட்டும் இப்போ கண்ணுல பட்டா, எவ்வளவு குளிர்ச்சியா இருக்கும்..?' என்றெல்லாம் எண்ணம் அடைகாத்துக் குஞ்சு பொரிக்கும்காதல்.*

*காதல் என்ற அறியாமையில் தடம்மாறிப்போவது ஆண்களாகயிருந்தால் ஒன்றும் கவலையில்லை, கவ்விய மண்ணைக்கூடக் காவியமாக்கித் தாடி வளர்ப்பார்கள். ஆனால், தடுமாறியது பெண்களாயிருக்கக்கூடாது என்பது மட்டுமே அக்கறை!*

*பாவம்.. அந்தப் புதைக்குழியில் மூழ்கிப் போனவர்களைவிட, மூச்சு முட்ட முட்ட, திக்கித் திணறுபவர்களின் நிலையே பரிதாபம். அந்த நிலையிலும் ஒரு 'வாட்ச்'மேன் கள்ளத்தோணியில் வந்து கைகொடுத்துக் கரையேற்றி விடுவதே கள்ளக்காதல்!*

*காதல் என்பது அநேகமாகத் தோல்வி அல்லது கல்யாணத்தில் முடியும் அபத்தமானது. ஆனால், கள்ளக் காதல் என்பது கொலை அல்லது தற்கொலையில் முடியும் ஆபத்தானது. தினசரி நிகழும் கொலைகளில் பாதிக்கும் மேற்பட்டது கள்ளக்காதலுக்குக் கண்கவரும் கவர்ச்சியோ, குத்திக் கிழிக்கும் கூர்மையான அறிவோகூடத் தேவையில்லை.*

*இன்னும் சொல்லப் போனால், சொந்த வீட்டில் இரும்புத் துண்டாக இருப்பவன்கூட, மாற்றான் தோட்டத்து மல்லிகைக்குக் காந்தமாக, காந்தர்வனாகத் திகழ்வான். ('சின்னவீடு' பற்றி சினிமாவும் இதிகாசங்களும் கதிகலங்கக்கூறிவிட்டதால், நான் வேறு எதுக்கு அதைக் கீறிக் கிளற வேண்டும்..?)*

*Mr.குறளின்'பிறனில் விழையாமை'யின் பொழிப்புரை அவர்களுக்குத் தெரியா விட்டாலும் சமயம் பார்த்து, சமயபுரத்தில் மாவிளக்கு ஏற்றும் சாதுர்யம் மட்டும் நிரம்பி வழியும்.*

*'வெற்றிக்கொடி கட்டு' படப்பிடிப்பின் இடைவேளையில் ஒரு மன்மதனைச் சந்தித்தேன். கையில் கரும்பிருக்காது. ஆனால், எரிந்துபோன கரும்புக் காட்டுக் குள்ளிருந்து எழுந்து வந்த ஒரு சுள்ளிக்குச்சியைப் போல் அப்படியொரு கருகரு கருப்பன்.*

*இன்னும் இரண்டு வருடத்தில் அறுபதாம் கல்யாணம் செய்யும் வயது.*

*நாட்டுக்கோழியை இரண்டாக மடித்து, பெல்லுக்குப் பக்கத்தில் மாட்டியபடி, சைக்கிளில் சாய்ந்து நின்று கொண்டு கதாநாயகியை சைட் அடித்துக்கொண்டிருந்தார். அவரைப் பற்றி, அவர் என்னதான் நினைத்துக் கொண்டிருக்கிறார் என்று தெரிந்து கொள்ள, அவர் தோள்மீது கைபோட்டு ஃப்ரெண்ட்லியாகப் பேச்சுக் கொடுத்தேன். அவர் சொன்னதெல்லாம் சுவாரஸ்யம்: ஒன்றிரண்டு பேரதிர்ச்சி.*

*"நமக்கு மூணு புள்ளைங்க. அஞ்சு பொண்டாட்டிங்க..."*

*"அஞ்சா..?" -அதிர்ந்தேன், அந்தப் பாஞ்சாலனிடம்.*

*"கட்னது ஒண்ணுதானுங்க..."- சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு, "மத்ததெல்லாம் மத்தவங்க பொண்டாட்டிங்க..."*

*பல்லின் இடைவெளியில் சந்து இல்லாமல் தெருத்தெருவாகத் தெரியும் படி சிரித்துவிட்டு, "இல்லாத நேரம் பார்த்துக் கோழி வாங்கிட்டுப் போயி, ஏதோ அப்படியே கொழம்பு வெச்சுக்கிட்டிருக்கேன். இதுவரைக்கும் அச்சாணிக்கே தெரியாம சக்கரம் ஓடிக்கிட்டிருக்கு..."*

*கழுத்தில் மஞ்சள் செயின் விழுந்த பிறகு. கணவன் எதையும் இழப்பதில்லை. அதே வீடு, அதே சூழ்நிலை. அதே உறவுகள், அதே அதே...*

*வலதுகாலை எடுத்து வைப்பவள் மட்டுமே ஒவ்வொரு நாளும் புதிராக மாறும் புதிதான உறவுகளுடன் உள்ளே நுழைகிறாள். ஆர்வமிகுந்த ஆசைகளுடன். எதிர்பார்ப்பு காரணமாக எல்லா மாற்றமும் ஏமாற்றமாகவே அவளுக்குப் படுவதால், ஏதாவது ஒரு மாற்றத்தை அவளும் எதிர்பார்க்கிறாள்.*

*இந்தப் பலவீனமான சூழ்நிலையைப் பலமாகப் புரிந்துகொண்டு இனிப்பாகப் பேசுவதில் டாக்டரேட் பெற்ற சூத்திரதாரிகள், ஏகப்பட்ட 'ச்'சுகள் போட்டு, '..ச்சும்மா' பூந்து விளையாடுகிறார்கள்.*

*மனதின் தட்வெப்ப நிலைக்குத் தக்கவாறு வாழும்போது, காதல் என்ற ஒரு கற்பனை விஷயம் ஒரே விதமாக அனுசரித்துப்போவதிலலை. காதலின் நிலையாமை, அறியாமையால் வாலிபர்கள் குறிப்பாக வாலிபிகள் கல்யாண ராகத்தில் முகாரி பாடிக் கொண்டிருக்கிறார்கள்.*

*காதல் வெற்றி பெறுகிறதா, இல்லையா என்ற கேள்வி தேவையே இல்லை. ஆனால், வாழ்க்கையில் வெற்றி பெற, காதல் ஒரு தடையாக இருக்கக்கூடாது!*

*இல்லாததைப்பற்றி இருப்பதை எழுதும் போது இப்படித்தான்எல்லாமே நெகட்டிவ்வாக இருக்கும்.*

*அன்புச் சகோதரிகளே! சகோதரர்களே!*

*காதலியுங்கள்!*

*உங்களை நீங்களே காதலியுங்கள். அதற்கு இடையூறாக இன்னொருவர் மீது நீங்கள் வைக்கும் காதல் காரணமாயிருந்தால் அதை உடைத்தெறிந்து விட்டு, இன்னும் இன்னும் உங்களை நீங்களே பெருமைப்படுத்திக்கொண்டு முன்னேறுங்கள்.*

*சுயம் உடைந்தால் லயம் இல்லை வாழ்வில்.*

*நன்றி, வணக்கம்...*

*"இருங்க... இருங்க... '..ச்சும்மா'வுக்கு முன்னாடி அதென்ன 'ச்'னு கடைசி இதழ்ல சொல்றேன்னு சொன்னீங்க...?"*

*"அதுவா..? கேட்பாரற்று ஒரு கட்டுரை எழுதுறதைவிட, கடைசிவரை அதென்ன, அதென்னன்னு கேட்பார்கள் என்ற நம்பிக்கையில் தான், சும்மா ஒரு 'ச்' கொடுத்தேன்..."*

